# சிறுபஞ்சமூலம்

## - ஒரு சமூகவியல் பார்வை

முனைவர் சு. பழனியாண்டி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# சிறுபஞ்சமூலம்

# - ஒரு சமூகவியல் பார்வை

திரு. சு. பழனியாண்டி

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

**INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES**

இரண்டாம் முதன்மைச் சாலை

மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்

தரமணி, சென்னை - 600 113

மு. வரதராசனார் அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியோர்: பலர்)

வரிசை எண் : 13

## BIBLIOGRAPHICAL DATA



| | | |
|---|---|---|
| Title of the Book | : | Cirupañjamūlam - oru camūkaviyal pārvai |
| Author | : | Thiru. S. Palaniyandi M.A., M.Phil, B.Ed. Chairman, Subramaniam Arts & Science College Mohanur, Namakkal - 637 015 |
| General Editor | : | Prof. Dr. K.A. Gunasekaran Director International Institute of Tamil Studies Tharamani, Chennai-600 113 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Chennai-600 113 Ph: 22542992 |
| Publication No. | : | 638 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2009 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | viii+98 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 30/- (Rupees Thirty Only) |
| Printed by | : | United Bind Graphics 189-D, Royapettah High Road Mylapore, Chennai - 600 004. |
| Subject | : | A Sociological study of Sirupanjamoolam |



அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

## அணிந்துரை

பதினெண்க்கீழ்கணக்கு நூல்கள் காலத்தால் பிற்பட்டதாக இருக்கலாம் என அவற்றின் மொழி நடையில் இருந்து உணர்ந்து கொள்ளலாம். சிறுபஞ்சமூலம் எனும் ஒரு நூல் குறித்து இந்த நூல் ஆய்வு செய்வதாக அமைகிறது. சிறுபஞ்சமூலக் காலத்தில் விளங்கிய சமயம், அரசியல், சமூகம் என்பவை பற்றிய பல சிந்தனைகளை இந்நூலாசிரியர் முன் வைத்து எழுதியுள்ளார். சிறுபஞ்சமூலம் எனும் தலைப்பின் மூலம் உடல் நோய் தீர்க்க மருந்துகள் உட்கொள்ள வேண்டும் என்பதுபோல் மனநோயின்றி மனிதன் வாழச் சிறந்த நற்கருத்துக்களைக் கவனம் கொள்ள வேண்டி முன் வைத்து எழுதப்பட்டுள்ளது. சமயம் குறித்தும் சமூகம் குறித்தும் இந்நூலாசிரியர் சிறுபஞ்சமூலத்தில் இருந்து பல பாடல்களையும், பல கருத்துகளையும் முன்வைத்து எழுதும்போது திருக்குறள் முன்வைக்கும் பல்வேறு கருத்துகளை நமக்கு நினைவுபடுத்துகின்றார்.

**புகழ் பெற ஈகை செய்ய வேண்டும்**
**அறிவின்கண் அடங்கி நடக்க வேண்டும்**
**பிறிதோர் உயிர்க்குத் துன்பம் செய்யாமை வேண்டும்**
**மகன் தந்தை சொல்படி நடக்க வேண்டும்**
**அறத்தை விரும்ப வேண்டும்**
**கற்றுணர்ந்தவரை மதிக்க வேண்டும்**

சமணர்கள், பௌத்தர்கள் காலக்கட்டங்களில் அவர்களால் உருவாக்கப்பட்ட எழுத்துருக்கள் யாவும் அன்றைய காலச் சமூகத்தை விளக்குவதாக அமைகின்றன. அன்றைய காலச் சமூக அமைப்பில் சமய நிறுவனங்கள் இன்றுள்ளவை போல் அமைந்திருக்கவில்லை. அரசு, வணிகத் தொழில் என்பதான இவ்விரு சமூக நடவடிக்கை களும் மிக முக்கியமான பங்களிப்புச் செய்திருந்தன. ஆட்சிக்குட் பட்ட மக்கள் வாழும் முறைமை குறித்ததும், வணிகத் தொழில் பரவலாக மன்னரிடத்தும்,

மக்களிடத்தும் நடந்து வந்த செயற்பாடு குறித்ததும் ஆன அன்றைய காலக்கட்ட சமூகத்தில் இணங்கி நடக்கும் மக்களாக ஆக்கிட வேண்டி, அக்காலக்கட்டத்திற்கு வேண்டிய சமூக நீதிக் கருத்துகளை முன்வைப்பவையாக அன்றைய எழுத்துருக்கள் உருப் பெற்றன. அக்காலச் சமூகத்திற்கு ஏற்ப மக்களை நெறிப்படுத்திடச் சிறுபஞ்சமூலம் போன்ற நூல்கள் படைக்கப்பட்டன.

கள் உண்ணாமை, வஞ்சகம் செய்யாமை, பிற உயிர்களுக்குத் தீங்கு விளைவிக்காமை, கொல்லாமை, பிறன்மனை நோக்காமை என்பன போன்ற கருத்துகளைச் சமணர்களும், பௌத்தர்களும் ஆட்சி செய்த காலத்தில் மக்களிடம் கொண்டு செல்லப்பட வேண்டிய நிலையில் இலக்கியங்கள் படைக்கப்பட்டன. இவை போன்ற பல கருத்துகளைச் சிந்திக்கும் வாய்ப்புகளை அமைத்துத் தந்துள்ளார் இந்நூலாசிரியர். அவருக்கு எம் பாராட்டுகள்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக்கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் **மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்** அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு க. முத்துசாமி இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவின் எழுத்துருவை மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும், இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள் மற்றும் கணிப்பொறியாளர் திருமதி எ.ம. லட்சுமி ஆகியோருக்கும் எம் நன்றிகள் என்றுமுண்டு. இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

**இயக்குநர்**

# ஆசிரியர் குறிப்பு



| | | |
|---|---|---|
| பெயர் | : | சு. பழனியாண்டி |
| தந்தை பெயர் | : | பா. சுப்பிரமணியம் (பேராசிரியர்) |
| இளங்கலைப் பட்டம் | : | சுப்பிரமணியம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மோகனூர். |
| முதுநிலை | : | 1984-86<br>புதுக்கல்லூரி, இராயப்பேட்டை, சென்னை |
| இளநிலை முனைவர் பட்டம் | : | 1987-88<br>புதுவைப் பல்கலைக்கழகம் |
| கல்வியியல் | : | 1988 – 89<br>சென்னைப் பல்கலைக்கழகம் |

பணி அனுபவம்

| | |
|---|---|
| 1991 – 2009 | பேராசிரியராகச் சுப்பிரமணியம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். |
| 1994 – 1997 | சென்னைப் பல்கலைக்கழகத்தில் அகாடமி, கவுன்சில் உறுப்பினராக இருந்தார். |
| 1997 – 2004 | பெரியார் பல்கலைக்கழகத்தில் செனட் உறுப்பினராக இருந்தார். |
| 2008 முதல் | நாளது வரை பெரியார் பல்கலைக்கழகத்தில் செனட் உறுப்பினர். |
| 1999 முதல் | நாளது வரை மோகனூர் அரிமா சங்கத்தின் பட்டயத்தலைவர். |
| 2005 – 2009 | 'ஆர்' அமைப்பில் நான்கு கட்டுரைகள் கொடுத்திருக்கிறார். |
| 1986 – 1989 | அனைத்திந்தியத் தமிழாசிரியர் கழகத்தில் பல்வேறு ஆராய்ச்சி கட்டுரைகள் எழுதியுள்ளார். |
| 1989 – 1991 | புதுவை வானொலி நிலையத்தில், 12 நிகழ்ச்சிகளைத் தந்திருக்கிறார். |

# நன்றியுரை

மகாகவி பாரதியும், பாவேந்தர் பாரதிதாசனும் தம் எழுச்சிமிக்க கவிகளால் தமிழகத்தையும், தமிழையும் தட்டி எழுப்ப உறுதுணையாக இருந்த இடம் புதுவை. இந்தப் புகழ்மிக்கப் பூமியில் மகாகவி பாரதியின் பெயரால் அமைந்துள்ள உயர் தமிழாய்வு நிறுவனத்தில் எனக்கு இளநிலை முனைவர் பட்ட (எம்.ஃபில்.) ஆய்விற்கு வாய்ப்பளித்த தகைமைசால் பெரியோர் முனைவர் க.ப. அறவாணன் அவர்களுக்கும்,

என் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்தவர் என் அன்புக்குரிய தந்தை பேராசிரியர் ப. சுப்பிரமணியம் அவர்களுக்கும்,

இந்த நூல் சிறப்புற அமையச் செம்மை செய்த பேராசிரியை இளமதி சானகிராமன் அவர்களுக்கும்,

இந்நூல் வெளிவரக் காரணமாக உள்ள என் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய பேராசிரியரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநருமாகிய முனைவர் திரு. கரு.அழ. குணசேகரன் அவர்களுக்கும்,

என் ஆய்வுப் பணிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து பல்லாற்றாலும் உடன் நிற்கும் என் துணைவியார் திருமதி.K. கன்செப்டா மேரி அவர்களுக்கும்.

இந்நூல் உருவாகத் துணை புரிந்த என் கெழுதகு நண்பர்கள் அனைவருக்கும் என் உளமார்ந்த நன்றிகளைப் புலப்படுத்தி மகிழ்கின்றேன்.

நன்றி !

அன்புடன்

**சு. பழனியாண்டி**

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை | 1 |
| 1. சிறுபஞ்சமூலம் - ஒரு பார்வை | 4 |
| 2. சிறுபஞ்சமூலம் காட்டும் சமுதாயம் | 14 |
| 3. சிறுபஞ்சமூலம் காட்டும் அரசியல் | 30 |
| 4. சிறுபஞ்சமூலம் காட்டும் சமயம் | 44 |
| நிறைவுரை | 62 |
| பின்னிணைப்பு<br>சிறுபஞ்சமூலமும் நீதிசதகமும் - ஓர் ஒப்பீடு | 63 |
| பொருளடைவு | 73 |
| அருஞ்சொல் அகரவரிசை | 87 |
| துணைநூற்பட்டியல் | 94 |

# முன்னுரை

சங்க காலச் சமுதாயம் இயற்கை வாழ்வியலோடு இணைந்த சமுதாயம். காதலும் போரும் (அகம் - புறம்) தமிழர்களை ஆட்கொண் டிருந்தன. சங்க காலத்தின் முடிவில் ஒரு பெரும் பண்பாட்டு மாற்றம் தோன்றியது. களப்பிரர் எனப்படும் அயலவர் படையெடுப்பும், பௌத்த சமண மதங்களின் ஊடுருவலும், ஆரியர்களின் 'ஆரியமாக்கல்' கொள்கைகளும் மும்முனைகளில் நின்று தமிழ்ப் பண்பாட்டை மாற்றியமைத்து அல்லது உருக்குலைத்தன. இந்தப் பண்பாட்டு மாற்றம் சுமார் கி.பி. மூன்றில் இருந்து கி.பி. ஆறுக்குள் நிகழ்ந்திருக்கலாம். இக்காலக்கட்டத்தில் எழுந்த நூல்கள்தாம் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் எனப் பெயர் பெற்றன. இந்நூல்கள், தாம் எழுந்த காலத்தின் சமுதாயப் போராட்டத்தையும் மக்களின் பண்பாட்டையும் விளக்குவனவாக அமைந்தன. இந்நூல்களுள் ஒன்றே காரியாசான் இயற்றிய சிறுபஞ்சமூலம். இந்நூல் காட்டும் தமிழர் வாழ்வியல் பற்றி இதுகாறும் யாதொரு ஆய்வும் வெளிவரவில்லை. ஆயின் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பற்றிப் பல்வேறு அறிஞர்கள் ஆராய்ந்துள்ளனர். சி. வேங்கடபதியின், 'பதினெண் கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும்' என்பதும் பதினெண்கீழ்க்கணக்குத் தொடர்பாக வந்த ஆய்வு ஏடும், நூலும் ஆகும்.

இவ்வாய்வுகள் யாவும், 'இலக்கியத்தை இலக்கியத்தின் அடிப்படையில்' ஆராயப்பெற்றவை ஆகும். ஆயின், இந்த நூல் சிறுபஞ்சமூலம் எனும் தனியொரு நூலை எடுத்துக்கொண்டு, சமூக இயல் அடிப்படையில் ஆராய முற்படுகிறது. தமிழ் இலக்கியத்தோடு பிறதுறை வல்லுனர்களின் கருதுகோள்களையும், கொள்கை உருவாக்கங்களையும் இணைத்துப் பார்ப்பதின் மூலம்தான் தமிழரின் முழுச் சமூகத்தை அல்லது முழு இலக்கிய ஆய்வை நிகழ்த்த முடியும் என்ற சிந்தனை வளர்ச்சி தற்போது தமிழறிஞர்களிடையே மிகுந்து காணப்படுகின்றது. இக்கருத்தின் வளர்ச்சி நிலையில் சமூகவியல் ஆய்வு வாழ்வியலைக் கணிப்பதற்கு முழுமையாகப் பயன்பெறும் என்ற நோக்கத்தால் சிறுபஞ்சமூலத்தைச் சமூகவியல் அடிப்படையில் ஆராய்வதை இந்நூல் நோக்கமாகக் கொள்கிறது.

**ஆய்வு மூலங்கள்**

இவ்வாய்விற்குச் சிறுபஞ்சமூலத்தில் (தொண்ணூற்றெட்டுப் பாடல்கள்) மட்டுமே முதன்மை ஆதாரங்களாக (Primary Sources) எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இதற்குப் பயன்பட்ட பதிப்பு, இலக்கியக் களஞ்சியம், கலைஞன் பதிப்பு (1987 முதற்பதிப்பு). சிறுபஞ்சமூலம் என்னும் இந்நீதி நூலுடன் ஒப்பீடு செய்யப் 'பத்ருஹரியின் நீதி சதகம்' என்னும் நீதி நூல் பயன்படுத்தப்பட்டுள்ளது. சிறுபஞ்சமூலம் மற்றும் நீதி இலக்கியங்கள் தொடர்பாக வெளிவந்த நூல்களும், கட்டுரைகளும் துணை நிற்கின்றன (ஒப்பீடு பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது).

சிறுபஞ்சமூலம் காட்டும் சமுதாயம் என்னும் இந்நூல் முன்னுரை முடிவுரை நீங்கலாக நான்கு பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. அவைகளாவன:

1. சிறுபஞ்சமூலம் ஒரு பார்வை
2. சிறுபஞ்சமூலம் காட்டும் சமுதாயம்
3. சிறுபஞ்சமூலம் காட்டும் அரசியல்
4. சிறுபஞ்சமூலம் காட்டும் சமயம்

**சிறுபஞ்சமூலம் – ஒரு பார்வை** என்னும் முதலாம் பிரிவில் நீதி இலக்கியத் தோற்றம், பெயர்க்காரணம், சிறுபஞ்சமூலமும் மருந்தும், சிறுபஞ்சமூலம் - குறித்து அறிஞர்களின் கருத்துகள், சிறுபஞ்சமூல ஆசிரியரது காலம், பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் சிறுபஞ்சமூலம் பெறும் இடம் போன்ற தலைப்புகளில் ஆராயப் பட்டுள்ளன. இவை திறனாய்வு முறை, வரலாற்று முறை, விளக்க முறை என்ற மூவகைகளாலும் ஆராயப்பட்டுள்ளன.

**சிறுபஞ்சமூலம் காட்டும் சமுதாயம்** என்னும் இவ் விரண்டாம் பிரிவில் சமுதாயத்தில் ஆடவர் நிலை, பெண்டிர் நிலை, குடும்பம், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், தொழில் முறைகள் ஆகியவற்றைப் பற்றித் திறனாய்வு முறையிலும், பகுப்பாய்வு முறையிலும் ஆராயப்பட்டுள்ளன.

**சிறுபஞ்சமூலம் காட்டும் அரசியல்** என்னும் இம்மூன்றாம் பிரிவில், சமயம் தொடர்பான அறிஞர்களின் கருத்துகள் சிறுபஞ்சமூலமும் சமயமும், சிறுபஞ்சமூலத்தில் கொல்லாமை,

பிறன்மனை நயத்தல், தவம், பிற சமயங்களில் நிலை போன்றவை திறனாய்வுமுறையிலும், பகுப்பாய்வு முறையிலும் ஆராயப்பட்டுள்ளன.

பத்ருஹரியின் நீதிசதகமும், காரியாசானின் சிறுபஞ்சமூலமும் ஒப்பீட்டு முறையில் ஆய்வு செய்யப் பெற்றுப் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன. இதுவரையிலும் கூறப்பட்டுள்ள இயல்களில் எடுத்தாளப்பட்ட உண்மைகள் நிறைவுரையாக அமைக்கப்பட்டுள்ளன.

ஆய்வுக்குத் துணைபுரியும் வகையில் பின்னிணைப்புகள் இணைக்கப் பெற்றுள்ளன - முதலாவதாகக் காலத்தாலும் கருத்தாலும் ஒப்புமையுடைய நீதிசதகமும் சிறுபஞ்சமூலமும் ஆராயப் பெற்றுள்ளன.

இரண்டாவதாக, சிறுபஞ்சமூலத்தின் பொருளடைவு கொடுக்கப்பட்டுள்ளது.

மூன்றாவதாக, கடினமான சொற்களுக்குரிய பொருள் விளக்கம் இடம்பெற்றுள்ளது. இறுதியாக இவ்வாய்விற்குத் துணை புரிந்த நூல்களின் பெயர்கள் பட்டியலாக இணைக்கப்பெற்றுள்ளன.

# 1. சிறுபஞ்சமூலம் - ஒரு பார்வை

## நீதி இலக்கியத் தோற்றம்

மக்களுடைய வாழ்க்கையை அகம், புறமென்று இருவகைப் பாகுபாடு செய்து, அதன் பல்வேறு இயல்புகளை நுட்பமாக ஆராய்ந்து புறப்பொருளின் ஒரு பகுதியாகிய அறத்தின் சிறப்பினை எடுத்துரைக்கும் அறநூல்கள் பல இயற்றப்பட்டன. அவை அமைப்பு முறையாலும் அறிவுறுத்தும் கருத்துக்களாலும் தனிப்பட்டதோர் இலக்கிய வகையாகச் சிறப்புற்று விளங்குகின்றன. அவற்றைப் பிற்காலத்துச் சான்றோர்கள் 'நீதி நூல்கள்' என்னும் பெயரால் அழைக்கலாயினர். இதனை,

> **நீதிகளை அறிவுறுத்தும் நூல்களை, 'நீதி நூல்கள்' என்று நாம் போற்றுகிறோம். 'நீதி நூல்கள்' என்று குறிப்பிடும் வழக்கே தேவார காலத்தில் தோன்றிய தாகும். இதற்கு முற்பட்ட காலத்தில் 'அறம்' என்ற சொல்லையே, பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் அறநூல் என்ற பொருளில் கையாண்டுள்ளனர்.**
> *(திருநாவுக்கரசு, க.த., திருக்குறள் நீதி இலக்கியம், பக். 1-2)*

என்னும் மேற்கோள் நிலைநிறுத்தும்.

சங்க இலக்கியங்களில் ஆங்காங்கே ஒழுக்கம், நீதி, அறநெறி பற்றிப் பேசப்படுகின்றன. முழுமையாக நீதியைப் பற்றியும் ஒழுக்கத்தைப் பற்றியும் தனியே பேசும் நூல் சங்க இலக்கியத்தில் இல்லை. சைன-பௌத்த மதங்கள் தமிழ்நாட்டில் மிகுதியாகப் பரவிய பிறகுதான் ஒழுக்கத்தைப் பற்றித் தனியாகத் தமிழ் நூல்கள் எழுதப்பட்டன. சமணமும், பௌத்தமும் ஒழுக்க நெறியையே அடிப்படையாகக் கொண்டவை. அம்மதங்கள் தங்களின் கருத்துகளைப் பரப்புவதற்கு இலக்கியங்களைக் கையாண்டன. எனவே அக்காலத்தில் அறநூல்கள் பல பிறந்தன.

சமண, பௌத்த மதங்களுக்குத் தமிழில் எதிர்ப்புத் தோன்றிய காலத்தில் பக்தி மார்க்கத்தை வலியுறுத்தும் நூல்களே மிகுதியாகத் தோன்றின. அவை பக்தி மார்க்கத்தைப் பரப்பியதன் மூலமும், சமண பௌத்த மதங்களைத் தமிழகத்தில் முறியடித்தன.

முதன்முதலில் ஒழுக்கத்தைப் பற்றியும் நீதியைப் பற்றியும் தனித்தனியாகத் தெரிவிக்கும் நூல்கள் பதினெண் கீழ்க்கணக்கு

நூல்களின் தொகுதியில்தான் காணப்படுகின்றன. பதினெண்கீழ்க் கணக்கில் உள்ள பதினெட்டு நூல்களில் நீதிநூல்கள் பதினொன்று.

> **பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் தனியாக எழுதப்படவில்லை. தொகுக்கப்படவில்லை, பக்தி நூல்கள் மட்டுமே பெருகி வளர்ந்து வந்துள்ளன. பக்தி மார்க்கம் பரவிச் சமண பௌத்த நெறிகளின் வேகம் குறைந்தபின் மீண்டும் சில நீதிநூல்கள் தோன்றின. அவை, அவ்வையாரால் இயற்றப்பட்ட ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, உலகநாதனார் இயற்றிய உலகநீதி போன்றவை யாகும்.**
>
> *(சிதம்பரனார்-சாமி-பதினெண்கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும், ப. 16)*

## பெயர்க்காரணம்

> ***சிறுபஞ்சமூலம் கண்டங்கத்திரி***
> ***சிறு வழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி,***
> ***நெருஞ்சி இவற்றின் வேராகும்மே***
>
> *(பதினெண்கீழ்க்கணக்கு, ப. 257)*

கண்டங்கத்திரி வேர், சிறுவழுதுணை வேர், சிறுமல்லி வேர், பெருமல்லிவேர், நெருஞ்சி வேர் எனும் இவ்வைந்து மருந்துச் செடிகளின் வேர்கள் உடற்பிணியைப் போக்குவதைப் போல, சிறுபஞ்சமூலம் தரும் மெய்ம்மைக் கருத்துகள் உயிர்ப் பிணியைப் போக்க வல்லன.

சிறுபஞ்சமூலம் - சிறுமை, தவிரப் பஞ்சம், மூலம் என்னும் இரண்டு சொற்களும் வடசொற்கள். நூலின் பெயரிலேயே ஒரு பாகம் தமிழ்ச் சொல்லாகவும், இரண்டு பாகம் வடசொல்லாகவும் அமைந்திருப்பது உற்றுநோக்கத்தக்கது. நூலின் பெயரைக் கொண்டு நூல் ஆசிரியர் வடமொழிப் பயிற்சியுள்ளவர் என்பதை அறியலாம். வடநூற்களின் பொருள்களையும் இந்நூலில் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

நூலின் பெயரில் மூன்றில் இரண்டு சொல் வடமொழியாக இருந்தாலும் நூலிலுள்ள வெண்பாக்களில் வடசொற்கள் அதிகம் இல்லை. இந்நூலில் பயின்றுள்ள வடசொற்கள்:

> ***உதாரம் (10), இலங்கி (40), சிட்டன் (91, 92), சிந்தி (91), சுவர்க்கம் (36, 64, 97), ஞானம் (91), சத்தம் (91), தருக்கம் (91), சமயம் (91), சேவகன் (93, 101), பண்டாரம் (38)***

முதலியனவாகும்.

## சிறுபஞ்சமூலமும் மருந்தும்

உடலுக்குத் துன்பம் தரும் நோய் வராமல் தடுப்பதுதான் மருந்து. நோயினால் உடல் துர்நாற்றத்தை அடையும். அக்கெடு நாற்றத்தை மறுத்து மருவினை (மரு-மணம்) அதாவது உடம்புக்கு இயற்கையாக உள்ள மணத்தினைப் பெறும்படிச் செய்வது மருந்து எனப்பட்டது. வந்த நோயை மறுத்து வரும் நோயினையும் மறுத்து, இயல்பாக வந்துசேரும் சாவினையும் மறுத்த நிலையான இன்பத்தை அருள்வதே என்று திருமூலநாயனார் கூறுகின்றார். இதனை,

**மறுப்பது உடல்நோய் மருந்து எனல்ஆகும்;**
**மறுப்பது உளநோய் மருந்து எனல்சாலும்**
**மறுப்பது இனிநோய் வாரா திருக்க**
**மறுப்பது சாவை மருந்து எனல்ஆமே**

(திருமூலர் - எண்ணாயரம்)

எனும் பாடல் உணர்த்தும்.

> **உடம்பினை அழியாது வைத்து இயங்கச் செய்யும் மருந்து முறையே வைத்தியம் எனப் பெறும். அதனைக் கண்டு அமைத்தவர்கள் சித்தர்கள்: ஆகையால் அது சித்த வைத்தியம் என்று பெயர் பெறும்.**
>
> (சுப்பிரமணிய பிள்ளை, இ.மு. பதினெண் கீழ்க்கணக்குச் சொற்பொழிவுகள், ப. 213)

சித்தர் மருந்துகள் பலப்பல உள. அவை தம்முள் சிறந்தனவாகத் திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி என்பன இருக்கின்றன. அவை உடல் நோயைத் தீர்ப்பது போல உளநோயைத் தீர்க்கும் மருந்துகள் நல்லொழுக்க முறைகளே. அவற்றைத் திரட்டித் திரிகடுகம், சிறுபஞ்சமூலம் ஏலாதி என்ற உடல்நோய் மருந்துப் பெயர்களையே இட்டு உளநோய் மருந்து நூல்களைப் பாடியுள்ளனர். மாமூலம் என்பது மாமூலர் இயற்றிய நூல். மா என்பது சிறப்பு. மூலத்தைக் கண்டவர் மூலர். மூலம் என்பது மூலமாக, முதன்மையாக ஆதாரமாக இருப்பதும் அதுதான் வேர். அது அடி, கிழக்கு என்றும் பெயர் பெறும். மூலத்தில் ஐந்து மூலம் சேர்ந்தது பஞ்சமூலம் ஆகும். பஞ்சமூலம் சிறுபஞ்சமூலம், பெருபஞ்சமூலம் என்று இரண்டு வகைப்படும். சிறு செடிகளின் வேர்கள் ஐந்து சிறுபஞ்சமூலம், பெரு மரங்களின் வேர்கள் ஐந்து பெரும்பஞ்சமூலம், சிறு வழுதுணை, சிறுநெருஞ்சி, சிறுமல்லிகை, பெருமல்லிகை, கண்டங்கத்திரி இவற்றின் வேர்கள் சிறுபஞ்சமூலம் எனப்பெறும். வில்வம், வாகை, பெருங்குயிற் தழுதாழை, பாதிரி இவற்றின் வேர்கள் பெரும் பஞ்சமூலம் எனப் பெறும்.

## சிறுபஞ்சமூலம் – குறித்த அறிஞர்கள் கருத்துகள்

### தெ.பொ.மீ. கருத்து

மாணாக்கரைப் பற்றியும் ஆசானைப் பற்றியும் சிந்தனை பற்றியும், கவிஞனைப் பற்றியும், இவ்வாசிரியர் கூறியுள்ளார். ஆதர், பூதர் என்ற சொற்கள் உயர்ந்த பொருளைக் குறியாமையும் இவர் நூலால் அறிகின்றோம். எனவே, நல்லாதன் எனத் திரிகடுக ஆசிரியர் புகழ்பெற்றதற்குப் பின்னையது இந்த நூல் எனலாம். உயிர்க்கொலையின் இழிவையும் உயிர்காத்தலின் பெருமையினையும் பலபடியாகக் கூறுகின்றார்.

(தெ.பொ.மீ., சமணத் தமிழ் இலக்கிய வரலாறு, ப. 62)

### க.த. திருநாவுக்கரசு

மூதுரை, நீதி இலக்கியம் என்ற இரண்டு வகையில் மனித வாழ்க்கையின் பல்வேறு நெறி பற்றிக் கூறுகின்றன. நீதிநூல்களுள், மூதுரை வகையைச் சார்ந்தது சிறுபஞ்சமூலம். ஐந்து கிழங்குகள் சேர்ந்த மருந்தைப் போன்று உண்மைகாளை இந்நூலின் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

(க.த. திருநாவுக்கரசு, சமணமும் தமிழும், ப. 83)

### டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை

கொல்லாமை, புலாலுண்ணாமை ஆகிய இரண்டும் பலபடியாக மீளமீள வற்புறுத்தப்படுகின்றன. சத்தம், மெய்ஞ்ஞானம், தருக்கம், சமயம், வீடு என்பன கற்பவன் தலையாய சீடன் என்றும், கணிதம், யாழ்சாந்து எழுதுதல், இலை நறுக்குப் பற்றிக் கற்பவன் இடையாய சீடன் என்றும் கூறியுள்ளார்.

(ஆ. வேலுப்பிள்ளை,
தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், ப. 53)

### மயிலை. சீனிவேங்கடசாமி

சிறுபஞ்சமூலம் என்னும் நூலிலேயும் வடக்கிருத்தல் கூறப்படுகிறது. இந்நூல் இன்னின்னாருக்கு உணவு கொடுத்தவர் மறுபிறப்பில் மன்னராகப் பிறப்பார்கள் என்று கூறுகிறது.

(சீனிவேங்கடசாமி. மயிலை,
சமணமும் தமிழும், ப. 37)

எம். நாராயண வேலுப்பிள்ளை

> இந்நூலாசிரியர் சமணராயினும், இவர் தம் நூலில் சமணசமயக் கருத்துகள் சிலவாகவும், பொது சமயக் கருத்துகள் மிகுதியாகவும் கூறியுள்ளார். 'மெய்யுணர்வு ஒன்றால்தான் வீட்டுப்பேற்றினை ஒருவன் எய்த இயலும் என்று கூறுகிறார்.
>
> (இலக்கியக் களஞ்சியம்)

பு.சி. புன்னைவனநாத முதலியாரவர்கள்

> இந்நூல் தன்னில் அமைந்த ஒவ்வொரு செய்யுள் களிலும் அடங்கிய ஐந்தைந்து பொருள்களாலும் தன்னைப் படித்துணர்கின்றனர் பிறவிநோயைப் போக்கத்தக்க நல்லொழுக்க நெறிகளை விளக்கிக் காட்டவல்லது. (சுடும் கடிகை மாமூலம்)

டாக்டர் இ.மு. சுப்பிரமணிய பிள்ளை

> கற்பொழுக்கமும், கொலை, பொய், புலாலுண்ணல், களவு செய்தல் ஆகிய இவைகளுக்கு மாறான அருளுடைமை, மெய்ம்மை, புலால் உண்ணாமை, திருடாமை என்ற நான்கும் ஆக இவ்வைந்தும் நீங்கும் காரணத்தினாலே இந்நூலுக்குச் சிறுபஞ்சமூலம் என்ற பெயர் சிறந்து விளங்குகிறது.
>
> (சுப்பிரமணிய பிள்ளை, இ.மு., பதினெண்கீழ்க்கணக்குச் சொற்பொழிவுகள், ப. 89)

மேற்சொல்லப்பட்ட அறிஞர்களின் கருத்துவழி இந்நூலில் மேன்மையை அறிய முடிகிறது.

சிறுபஞ்சமூல ஆசிரியர்

இந்நூலை இயற்றியவர் காரியாசான் என்பவர். காரி என்பதுவே இவர் இயற்பெயர். ஆசான் என்பது மதுரை ஆசான் நல்வெள்ளையார் என்ற புலவர் பெயர்களைப் போலத் தொழில் பற்றி வந்த பெயராகலாம். இவரை மாக்காரியாசான் என்று பாயிரச் செய்யுள் 'மா' என்னும் அடைமொழி கொடுத்துச் சிறப்பிக்கிறது. பாயிரச் செய்யுளிலிருந்து இவர் மாக்காயனார் மதுரைத் தமிழாசிரியர் மாணாக்கர் என்பது தெரியவருகிறது.

இந்த ஆசிரியருடன் கல்வி பயின்றோருள் மற்றொருவர் ஏலாதி, திணை மாலை நூற்றைம்பது என்னும் நூல்களின் ஆசிரியராகிய கணிமேதாவியார். எனவே கணிமேதாவியாரும், காரியாசானும் ஒரு சாலை மாணாக்கராவர்.

## ஆசிரியரது காலம்

பஞ்சதந்திரக் கதைகள் வரும், மைனாவுக்கும் முயலுக்கும் வழக்குத் தீர்த்த கங்கைக் கரையில் உள்ள பூனைக் கதையை,

> **'உறுதவ மேல் கங்கைக் கரைப் பூசை போறல் கடை' (100) என்று காட்டியுள்ளார். இதனால் பஞ்சதந்திரம் தமிழில் பெருக வழங்கிய காலத்தை ஒட்டி இந் நூலாசிரியர் வாழ்ந்தவர் என்று எண்ணவும் இடம் உண்டு.**
>
> **(நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பதினெண்கீழ்க்கணக்கு)**

கி.பி. 300 அளவிலிருந்தே வடமொழியில் பஞ்சதந்திரம் கதை முறை வளர்ந்துள்ளது. மாக்காரியார் கூறும் கங்கைக் கரைப் பூனைக் கதை, ஆறாம் நூற்றாண்டுக் கதையமைப்போடு பொருந்துவதாகக் கருதப்படுகிறது.

டாக்டர் சி. பாலசுப்பிரமணியம் அவர்கள்,

> **சிறுபஞ்சமூலத்தின் காலம் கி.பி. 5ஆம் நூற்றாண்டுக்குள் என்பர் என்று கூறியதிலிருந்து கி.பி. 5ஆம் நூற்றாண்டுக்குள் இருப்பதற்கு வாய்ப்பில்லை.**

என்று தம்முடைய தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப்பிடுகின்றார்.

> **கி.பி. முதல் நூற்றாண்டு முதல் கி.பி. 5ஆம் நூற்றாண்டுக்கு**

என்று தம்முடைய தமிழ் இலக்கிய வரலாற்றில் மு.வ. குறிப்பிடுகின்றார்.

> **கி.பி. 800–850க்குள் சிறுபஞ்சமூலம் தோன்றியிருக்க வேண்டும்**

என்று திரு. வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுகின்றார்.

> **'பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் – ஓர் ஆய்வு' – என்னும் ஆய்வேட்டில், இதன் காலம் கி.பி. 6ஆம் நூற்றாண்டு**

என்று திரு. ச. வேங்கடபதி குறிப்பிடுகின்றார்.

7ஆம் நூற்றாண்டு முதல் சமணம் தமிழில் செழித்திருக்க வாய்ப்பு குறைகிறது. வெளிப்படையாகச் சமண-பௌத்த இயக்கங்கள் செயற்பட முடியவில்லை. அதனால் இதுபோன்ற சிக்கல்கள் இல்லாத காலத்தில் எழுதப்பட்டிருக்கவேண்டும்.

எனவே கி.பி. 6ஆம் நூற்றாண்டு இந்நூலின் காலமாகக் கொள்வது பொருத்தமாக இருக்கும்.

## பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் சிறுபஞ்சமூலம் பெறுமிடம்

மருந்துக்குப் பெயர் பெற்ற கீழ்க்கணக்கு நூல்கள் மூன்று. அவை திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி ஆகியனவாகும். திரிகடுகம் என்பது சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மூன்று மருந்துப் பொருளையும் குறிக்கும். சிறுபஞ்சமூலம் என்றும் தொடர் ஐந்து சிறிய வேர்கள் என்று பொருள்படும். அவை சிறுவழுதுணை வேர், நெருஞ்சி வேர், சிறுமல்லிவேர், பெருமல்லி வேர், கண்டங்கத்திரி வேர்.

ஏலம் ஆதியான ஆறு பொருள்கள் சேர்ந்த ஒருவகை சூர்ணம் 'ஏலாதி' என மருத்துவ நூல்களில் கூறப்பெறும். ஏலம் ஒரு பங்கு, இலவங்கப் பட்டை இரண்டு பங்கு, நாககேசரம் மூன்று பங்கு, மிளகு நாலு பங்கு, திப்பிலி ஐந்து பங்கு, சுக்கு ஆறு பங்கு என்ற அளவுப்படி சேர்ந்து இந்த மருந்தை ஆக்குவார்கள்.

இந்நூல்கள் செய்யுள்தோறும் முறையே மூன்றும், ஐந்தும், ஆறும் ஆகிய பொருள்களை அமைத்துக் கொண்டுள்ளன. சிறுபஞ்சமூலம் என்ற மருந்து நீக்குகின்றது. அங்ஙனமே உயிரைப் பற்றிய பிணியைப் பொருந்திய நல்ல கற்பொழுக்கமும், கொலை, பொய், புலாலுண்ணல், களவு செய்தல் ஆகிய இவைகளுக்கு மாறான அருளுடைமை, மெய்ம்மை, புலால் உண்ணாமை, திருடாமை, என்ற நான்கும் ஆகும். இவ்வைந்தும் நீக்கும் காரணத்தினாலே இந்நூலுக்குச் சிறுபஞ்சமூலம் என்ற பெயர் சிறந்து விளங்குகிறது என்று இந்நூலுக்குப் பெயர்க்காரணம் கூறுங்கள் (சிறு. 1) என்று ஆசிரியர் நூல் செய்தமைக்கு விளக்கம் தருகின்றார்.

திரிகடுகம் என்னும் மருந்து உடல்நோயைத் தீர்க்கும். இந்நூலில் மும்மூன்றாகச் சொல்லப்பட்ட அறங்கள் உயிர்நலம் பேணுவனவாம் என்று திரிகடுக ஆசிரியர் தாம் நூல்செய்தமைக்குக் காரணம் சொல்கின்றார்.

ஏலாதி ஆசிரியர் நூல் செய்தமைக்குக் கூறும் காரணங்கள்: ஏலம், இலவங்கம், சிறுநாவற்பூ, மிளகு, திப்பிலி, சுக்கு ஆகிய ஆறு மருந்துச் சரக்குகளினாற் செய்த மருந்து உடலுக்கு நன்மை செய்வது போல் இந்நூலில் சொல்லப்பட்ட உடற்பயிற்சி, விருந்தோம்பல், மக்கட்பேறு, தூது, இரக்கக் குணம், தமிழ்ப்பண்பு, ஒழுக்க நெறிகள் ஆகிய மனித வாழ்வைச் செம்மைப்படுத்தும்.

இம்மூன்று நூல்கள் மருந்துகளின் பெயர்களைக் கொண்டு இருப்பது போன்று, மூன்றும், ஒழுக்கத்தைப் பற்றிச் சொல்லுவதற்காகவே எழுதப்பட்டவையாகும். மிகுதியாகக் கருத்துகளை ஓரளவு செம்மையாகச் சிறுபஞ்சமூலம் பேசுகின்றது.

**சிறுபஞ்சமூலத்தோடு பெரிதும் ஒற்றுமையுள்ளது ஏலாதியாகும்.** சிறுபஞ்சமூலம் ஐந்து பெயர்களை உரைக்க, இது ஆறு பொருள்களைச் சுட்டுகிறது. மேலும் சிறுபஞ்சமூலத்தின் கருத்துச் சொற்பொருளை இந்நூல் பல இடங்களில் அடியொட்டியுள்ளது. இவ்விரு நூல்களின் ஆசிரியர்களும் சம காலத்தில் வாழ்ந்தவர்கள். வடசொல்லாட்சி சிறுபஞ்ச மூலத்தைப் போன்றே ஏலாதியிலும் காணப்படுகிறது.

சிறுபஞ்சமூலப் பாடல்களின் பொருள்களைக் காட்டிலும் ஏலாதியில் பாடற்பொருள்கள் தெளிவில்லாமல் உள்ளன.

**திரிகடுகம்**

திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை என்னும் நூல்களின் கருத்துக்களை இந்நூல் பின்பற்றியுள்ளது. நூல் வழக்கிலும் உலக வழக்கிலும் பயின்ற பழமொழிகள் சிலவற்றையும் இந்நூல் எடுத்தாண்டுள்ளது.

'உமிக் குற்றிக் கைவருந்துவார் (திரி. 28), தம் நெய்யில் தாம் பொரியுமாறு (திரி. 65), துஞ்சி ஊமன் கண்ட கனா' (திரி. 7). இந்நூலில் காணும் சொல்லாட்சிகளும் கருத்துக்கோவைகளும் நல்ல கட்டுக்கோப்புடையனவாய் உள்ளன.

**சிறுபஞ்சமூலம்**

**நான்கு வரிகளிலே ஐந்து பொருள்களை அமைத்துப்** பாடும் திறம் நோக்கத்தக்கது. இந்நூற் செய்யுட்களில் அமைந்துள்ள ஐந்து ஐந்து கருத்துகளும், திரிகடுகத்தில் போலத் தெளிவுபட விளக்கமாக அமையவில்லை. நூலின் மொத்தப்பாடல்களில் கீழ்க்கண்ட எண் உள்ள பாடல்கள் மட்டுமே ஐந்து ஐந்து கருத்துக்களைக் கொண்ட பாடல்கள் ஆகும். அவையாவன:

***22, 29, 40, 42, 43, 47, 51, 53, 57, 60, 63, 68, 83, 91, 92***
**திரிகடுகத்தில் உள்ளதுபோல ஒரு முறையைப் பின்பற்றி அமையவும் இல்லை.**

திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை முதலிய முந்து நூல்களில் பொதிந்துள்ள கருத்துக்களில் பலவற்றை இந்நூலகத்துக் காணலாம்.

கல்லாதான் காணும் நுட்பமும் (3) என்னும் பாடல் திரிகடுகத்தின் போக்கையும், இடர் இன்னா நட்டார்கள் (12) என்னும் பாடல் இன்னா நாற்பதில் அமைப்பையும் ஒத்துள்ளன. சிலம்பிக்குத் தன் சினை கூற்றம் (சிறு. 9), வான்குரீஇக் கூடு (சிறு. 25), வார் சான்ற கூந்தல் வரப்புயர (சிறு. 44), மயிர் வனப்பும் (சிறு. 35), பூவாது காய்க்கும் மரம்உள (சிறு. 20), பூத்தாலும் காயா மரம்உள (சிறு. 21), என வரும் பாடல்கள் கருத்துகளில் சில முத்துநூல்களின் மரபை ஒட்டியவை.

**ஏலாதி**

இந்நூல் இல்லற நூலாயும், துறவற நூலாயும், வீட்டு நெறி நூலாயும் உள்ளது என்று சிறப்புப் பாயிரம் செய்யுள் புகழ்கிறது.

பொய்தீர் புலவர் எனத் தொடங்கும் அறுபத்தாறாம் பாடல்.

**பொய்இல் புலவர் புரிந்து உறையும் மேல் உலகம்**
**ஐயம் ஒன்று இன்றி அறிந்து உரைப்பன், வெய்ய**
**பகல் இன்று, இரவு இன்று, பற்று இன்று, துற்று இன்று,**
**இகல் இன்று, இளிவரவும் இன்று.**

எனவரும் புறப்பொருள் வெண்பாமாலைப் பாடலோடு (பொதுவியல்பு) பெரிதும் ஒப்புமையுடையது. வடமொழி ஸ்மிருதி நூல்களில் வழங்கும் துவாதச புத்திரர்களைப் பற்றி, மாண்டவர் மாண்ட (ஏல. 30), மத்த மயில் அன்ன (ஏல. 31) என வரும் இரண்டு பாடல்களிலும் உரைத்துள்ளார். வடமொழியாளரின் பழக்க வழக்கங்களை உணர்த்தும் இச்செய்தியையே ஆசிரியர் கூறியுள்ளமையால், இவர் வடமொழிப் புலமை பெற்றவர் என்பது தெரிகின்றது.

திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி ஆகிய மும்மருந்துகளில் பெயர்களால் அமைந்த நூல்களை ஆராய்ந்து பார்த்ததில் இம்மூன்று நூல்களும், பணிவுடைமை முதலிய நல்லொழுக்கம் மேற்கொள்ளுதல், கொலை புரியாமை, புலால் உண்ணாமை, அருளுடைமை, இனிய முகத்துடன் இனியன பேசி உணவு கொடுத்து ஆதரித்தல் ஆகிய இவையே இம்மைக்கும், மறுமைக்கும் பெருவாழ்வு தருவன போன்ற ஒழுக்க நெறிகளைப் பற்றியே பேசுகின்றன என்றாலும் கருத்துகளைத் தெளிவாகவும், கோர்வையாகவும் எடுத்துச் சொல்வதில் திரிகடுகம் முதல்நிலையில் உள்ளது. அதற்கடுத்த நிலையில் சிறுபஞ்சமூலமும், அதற்கடுத்த நிலையில் ஏலாதியும் உள்ளன.

சிறுபஞ்சமூலத்தில் நான்கு வரிகளில் ஐந்து பொருள்களை அமைத்துப்பாடும் ஆசிரியரின் திறம் நோக்கத்தக்கது. ஒரு பாடலில் ஐந்து பொருளை வைத்து அறக்கருத்துக்களைச் சொல்லும் பாங்கில் கலைநயம் உள்ளமை வெளிப்படுகிறது. பல தொழிகளைப் பற்றியும், மாணவர், ஆசிரியர் தன்மைகளைப் பற்றியும், பெண்களைப் பற்றியும், அவர்கள் இல்லற வாழ்வில் நடந்துகொள்ளும் முறை பற்றியும் சொல்வதன் மூலம் ஆசிரியர் பல கலைகளைப் பற்றிய அறிவு பெற்றவர் என்பது தெரிகிறது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் இந்நூல் திரிகடுகத்திற்கு அடுத்த நிலையிலும், ஏலாதிக்கு முந்தைய நிலையிலும் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது.

## முடிவுகள்

1. சிறுபஞ்சமூலம் என்னும் இந்நூல் சமண சமயத்தைச் சார்ந்தவரால் எழுதப்பட்டது. இதனைக் கடவுள் வாழ்த்துப் பாடல் மூலம் அறியலாம்.

2. சிறுபஞ்சமூலம் என்னும் தலைப்பில் உள்ள 'சிறு' என்ற சொல்லைத் தவிரப் பஞ்சமூலம் என்ற இரு சொற்களும் வடமொழிச் சொற்கள். எனவே ஆசிரியர் வடமொழிப் பற்றும், புலமையும் உள்ளவர் என்பது தெளிவாகிறது.

3. இந்நூலில் ஒவ்வொரு பாடலிலும் ஐந்து ஐந்து கருத்துகள் சொல்லப்படுவதாகக் கூறப்பட்டவிடத்தும் பதினைந்து பாடல்களில் மட்டுமே ஐந்து கருத்துக்கள் வந்துள்ளன.

4. முந்து நூல்களின் சாயல்களும், கருத்துகளும் இந்நூலில் பயின்று வந்துள்ளன.

5. இந்நூலின் காலம் கி.பி. 6ஆம் நூற்றாண்டு எனக்கொள்ளலாம்.

6. திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி என்ற மூன்றும் மருந்துப் பெயர் கொண்ட நூல்கள், இம்மூன்றிலும், சிறுபஞ்சமூலம் திரிகடுகத்திற்கு அடுத்த நிலையிலும், ஏலாதிக்கு முந்திய நிலையிலும் வைத்துச் சிறப்பாக எண்ணும் வகையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# 2. சிறுபஞ்சமூலம் காட்டும் சமுதாயம்

படைப்பாளிகள் தம் படைப்புகளே அவர்கள் காலச் சமுதாயத்தைப் படம்பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடிகளாக விளங்குகின்றன. படைப்பாளர்கள் சமுதாயத்தின் அங்கமென்பதை 'ஸ்காட்' என்பாரின்

> ***Art is not created in a vaccuum. It is the work not simply of a person but of an author fixed in time and space answering to a community of which he is and important because articulate part.***
>
> (Wilber S. SCOTT,
> Five Approaches of Literary Criticism, p. 123)

> ***படைப்பாளிகளுள் ஒருசாரார் நிறைகளையே, தம் நூல்களில் காட்டிச் செல்வர்; மற்றொரு சாரார் குறைகளையே சுட்டி அமைவர். பிறிதொரு சாரார் குறைகளை எடுத்துக்காட்டி அதனைப் போக்கும் வழிவகைககளையும் கூறுவர்; காப்பியங்களிலும், புராணங்களிலும் இம்மூவகை அமைப்புகளையும் பெரும்பாலும் காணலாம்***

என்கிறார். சிறுபஞ்சமூலம் சமுதாயத்தின் நடைமுறைச் செயல்களையும், அதில் காணப்படும் குறைகளையும் அக்குறைகளை நீக்குவதற்கு வேண்டிய விதிமுறைகளையும் கூறுவதால், அதனை மூன்றாவது வகையில் சேர்க்கலாம். சிறுபஞ்சமூலத்தின் வழி வெளிப் படும் சமுதாயப் பார்வையினை இரு பிரிவுகளாகப் பகுத்துக் காணலாம்.

அவை,

அ) பாடல்களின் வழிப்புலனாகும் சமுதாயம்

ஆ) சமுதாயத்திற்குச் சிறுபஞ்சமூலம் அறிவுரைகள்

என்பவையாம்.

பாடல்களின் வழிப் புலனாகும் சமுதாயத்தைச் சமூகம், சாதிப் பிரிவுகள், சமயம், தொழில்கள், கல்விநிலை, மருத்துவம், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் என்னும் பிரிவுகளின் அடக்கலாம்.

### *சமூகம்*

குடும்பமே அடிப்படைச் சமூகமாகும். ஆண், பெண் கூட்டு வாழ்க்கையே சமுதாய வாழ்வின் தொடக்க நிலையுமாம்.

> **இவர்களிடையே கூட்டு வாழ்வும், கூட்டு உயர்வுகளும், கூட்டு நலனும் கருத்தில் கொள்ளப்படுதல் காரண மாகவே குடும்ப அமைப்பு, சமுதாய அமைப்பின் முதல் நிலையாகக் கருதப்படுகிறது.**

என்று செயப்பிரகாசர் குறிப்பர். இதன் வழிச் சமுதாயத்தின் இன்றியமையாத கூறாக மக்கள் அமைவதால் அவர்களைப் பற்றிய செய்திகளை அறிதல் தேவையாகின்றது.

சமுதாயத்தின் நூல்களாக ஆடவர்கள் விளங்கினர். சமுதாயத்தில் ஆண்களே ஆதிக்கம் செலுத்தினர். ஆண்மகனே குடும்பத்தின் தலைவனாகவும், நாட்டின் தலைவனாகவுமிருந்தான். குடும்பத்திற்கு வருவாய் ஆடவர் செய்யும் தொழில்கள் மூலமாகவே வந்திருக்கிறது. ஆடவர்களுக்கு அடங்கி நடக்கும் பெண்கள் சிறப்பிக்கப்பட்டிருக்கின்றனர். மகன், தந்தை சொல்கேட்டு நடப்பதை ஒரு ஒழுக்கமாகக் கருதிச் செயல்பட்டிருக்கின்றான். தீய ஒழுக்கத்தை மேற்கொண்ட ஆண்கள் கண்டிக்கப்பட்டிருக்கின்றனர். ஆடவர்கள் இடையே பிறன்மனை விரும்பாமை, கொல்லாமை, ஊன் உண்ணாமை முதலிய ஒழுக்கங்கள் வற்புறுத்தப் பெற்றிருப்பதும் புலனாகிறது.

### பெண்கள்

ஆடவருக்கு அடுத்த நிலையில் பெண்கள் சமுதாயத்தில் பங்கு வகித்தனர். 'கற்பு' என்பது ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு பொருளில் குறிக்கப்பட்டு வந்துள்ளது. சிலப்பதிகாரக் காவியத்தின் அடிக்கருத்தாகவே கற்பு வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் இந்தக் கற்பைப் பற்றிய கண்ணோட்டம் சமூகத்தேவைக்கேற்ப மாறி வருவதையும் நடைமுறையில் காணமுடிகிறது என்பது திண்ணம்.

சங்க காலத்தில் 'கற்பு' என்பது 'சொல்திறம்பாமை', 'மனத்திண்மை' என்ற பொருளில் வழங்கப்பட்டது. இடைக்காலத்தில் 'கற்பு' என்பது, 'பிறர் நெஞ்சு புகாமை, 'படிதாண்டாப் பத்தினி' என்ற பொருளில் வழங்கப்பட்டுக் கற்புவேலி கடுமையாக்கப் பட்டிருப்பதைக் காண்கின்றோம். இது இடைக்காலச் சமுதாயத்தின் பெண்ணடிமைத்தனத்தைப் பளிச்சிட்டுக் காட்டுகிறது. இருபதாம் நூற்றாண்டில் 'எல்லோருக்கும் கல்வி' என்ற உரிமை முழக்கத்தினால்

பெண்களுக்கும் கல்வி போய்ச் சேரும்போது, கற்பைப் பற்றிய கருத்து நிலையும் மாறுகிறது. இன்று, கல்வி கற்ற பெண்கள் ஒரு ஆடவனின் கீழ்ப் பணியாற்றுவதற்கு வீட்டைவிட்டு வெளியேறிச் செல்ல வேண்டிய சூழல் உருவாகியிருக்கின்றது. இத்தகைய நிலையில்,

> **தம்முடைய படைப்பில் ஒரு பெண் திருமணம் ஆன பின்பு தன் கணவனுக்கு உண்மையாக இருந்தால் போதும்** *(வரதராசனார், மு. கரித்துண்டு, ப. 127)*

என்று புதிய விளக்கம் புதுப்பிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

> **கற்புடைய பெண்ணானவள் அமிர்தம் போன்றவள்** *(9)*

போன்ற கருத்துகளின்மூலம் மேலோட்டமாகவும்,

> **கற்புடையவள் விளங்கிழையாள்** *(33)*

என்ற கூற்றுக்களின் மூலம் ஆழமாகவும் தருவதால் திருவள்ளுவர், இளங்கோவடிகள் போற்றிய கற்பினை ஆசிரியரும் இங்கே போற்றுகிறாரென்று கொள்ளலாம்.

**பெண்களும் இல்வாழ்க்கையும்**

இல்வாழ்க்கையில் பெண்கள் கடைப்பிடிக்க வேண்டுவனவாகச் சிறுபஞ்சமூலம் சுட்டுவது 'கணவன் வழியொழுகல் வேண்டும்' (சிறு 15), கணவனின் வருவாய்க்குத் தக்க செலவு செய்யவேண்டும். சுற்றம் தழுவுதல், விருந்தோம்பல், தெய்வத்தை வழிபடுதல் முதலியன வேண்டும் (43).

'உறவினரைப் பேணுதலும்', 'அடக்கமுடைமையும்', 'பிறரை விரும்பாத பெருந்தன்மை உடைமையும்', 'நாணத்தால் உண்டாகும் ஒழுக்கம்' முதலிய ஐந்து பொருள்களும் பொருந்தாமல், தாமரை மலரில் வாழ்கின்ற திருமகளேயாயினும் தன்னளவில் வாழ்த்துதல் அருமை (45), மக்கட்பேறும், அழகுடைமையும், கணவனது கருத்துக்கிசைய அவனோடு உறைதலும், அவன் உண்ணும் உணவை விரும்புதலும் வேண்டும் (53) என்றும் சிறுபஞ்சமூலம் வலியுறுத்துகிறது.

'இன்று குழந்தையை வளர்த்தல்', 'தான் கொண்ட சூலைப் பாதுகாத்தல்', தாயற்ற, வளர்ப்பாரில்லாத குழந்தையை ஏற்று வளர்த்தல், கொண்ட கன்னியையும், மிகவும் ஆழ்ந்தவளையும் தன்வீட்டில் வைத்துப் போற்றல் முதலானவை சிறந்த அறமாகப் பெரியோர்கள் குறிப்பிடுவார்கள். குழந்தையைக் காத்தல், அதற்கு மருந்து கொடுத்தல், குழந்தையை அச்சுறுத்தாமலிருத்தல் - முதலிய

குணங்களைப் பெண்கள் இல்வாழ்க்கையில் ஏற்று நடக்க வேண்டுமென்று சிறுபஞ்சமூலம் அறிவுறுத்துகின்றது.

### பிறன்மனை நயத்தல்

பிறன்மனை நயத்தல் சிறுபஞ்சமூலத்தின் மூன்று பாடல்களில் இடம்பெறுகிறது. பிறன்மனையாளைத் தன் தாயாகக் கருதவேண்டும் (6), பிறர் மனைவியாளைப் பகைபோல் சாராமல் இருத்தல் நன்று (42), அரியராவர் பிறரில் செல்லாரே (52) என்று குறிப்பிட்டு பழிக்கப் பட்டுள்ளது.

பிறன்மனை நயத்தல் பற்றிப் பண்டைத்தமிழ் இலக்கியங் களாகிய சங்க இலக்கியங்களில் எந்தக் குறிப்பும் காணப்படவில்லை. பிறன்மனை நயத்தல் பற்றி முதன்முதலில் பேசுவது அறநெறிக்கால நூல்களேயாம். பிறன்மனை நயத்தல் என்பது தமிழர் பண்பாடாகக் கருதப்படவில்லை. பிறன்மனை நயத்தல் பற்றி வடமொழி இலக்கியங்களே அதிகம் பேசுகின்றன. எல்லா ஒழுக்கங்களையும் கூறும் வகையில் பிறன்மனை நயத்தலும் திருக்குறளில் காணப்படுகிறது. திருக்குறளுக்கு அடுத்தாற்போல், பிறன்மனை நயத்தல் பற்றிப் பேசும் நூல் சிறுபஞ்சமூலமே பிறன்மனை நயத்தல் ஆசைக்குரிய ஒழுக்கமாகவே சுட்டப்படுகிறது. பிறன்மனை நயத்தல் பற்றித் தெளிவான செய்திகள் இந்நூலின் உரைக்கப்பட வில்லை என்பது தெளிவாகப் புலனாகிறது.

### பெண்ணிற்கு ஆகாத குலங்கள்

காதிரண்டும் இல்லாதவன் இறுமாப்புக் கொள்ளுதல் கூடாது (5), கள்ளுண்டலும், தன் கணவனது சேர்க்கையை விரும்பாமல் பிரிந்து வாழ்தலும், நாணம் இல்லாதவளாய்ப் பிறர் மனைக்குள் செல்லுதலும், பிறர் கருமத்தை நினைத்துப் பிறருடன் ஆராய்தலும் தீய பெண்டிற் தொழில்களாகக் கொள்ளப்பட்டன (25). பிறரை விரும்பாத பெருந்தன்மை வேண்டும், கணவனைத் தாழ்த்துதல் கூடாது 'கணவனுக்கு அடங்காத மனைவி பிணியைப் போல் ஆகும்' (45) என்றும், குற்றம் பொருந்திய பெண்சேர்க்கையில் இனிது வாழ்தல் அருமை (92) என்றும் பெண்ணிற்கு ஆகாத குணங்கள் சிறுபஞ்ச மூலத்தில் சுட்டப்படுகின்றன.

இறுமாப்புக் கொள்ளுதலும், கள்ளுண்ணுதலும், கணவனைப் பிரிந்து வாழ்தலும் அக்காலப்பெண்களிடம் ஆகாத குணங்களாகக் கருதப்பட்டன. இதில் 'கள்ளுண்ணல்' போன்ற பழக்கங்கள் சங்ககால எச்சமாகக் கொள்ளவேண்டும்.

### பொது மகள்

'பொதுமகள் அறிவுடையார் சேரார், பொதுமகளைத் தனக்கு மனையாளாக மனையில் கண் வையார்' என்ற கூற்றுக்கள் மூலம் அக்காலத்தில் 'பொதுமகள்' என்ற ஒரு பிரிவுப் பெண்கள் இருந்தனர். அவர்களைச் சேர்தலும், மனைவியாகக் கொள்ளுவதும் தவறாகக் கருதப்பட்டது என்பது நூல்மூலம் புலப்படுகிறது. பொதுவாக இப்பிரிவினர், தமிழ்நாட்டில் சங்ககாலந்தொட்டு இலக்கியங்களில் இடம்பெற்று வருகின்றனர். மேலும் பொதுமகளிடம் செல்லுதல் சங்ககாலத்தில் தவறானதாகக் கருதப்படவில்லை. இவர்களில் ஒரு வகையினர் பரத்தையர் பிரிவைச் சார்ந்தவர்கள் என்று இலக்கணம் வகுக்கப்பட்டு, பின்னாளில் அறநெறிக் காலத்தில் இந்தப் பரத்தையரிடம் கொண்டிருந்த தொடர்பை அறநெறி நூல்கள் மிகவும் கண்டித்தன. அந்த வகையில் சிறுபஞ்சமூலமும் கண்டிப்பது இங்குப் புலனாகிறது.

### குடும்பம்

ஆணாதிக்கச் சமூகத்தினர் ஆணாதிக்கம் தொடர்வதையே விரும்புவர். தந்தைவழி ஒழுகல் மகன் குணம் (சிறு. 13), தந்தையால் ஆகும் குலம் (சிறு. 31) போன்ற செய்திகள் ஆடவர் உயர்நிலையையும், தந்தைவழிச் சமூகத்தையும் காட்டுகின்றன.

காதல் மணம் தடைசெய்யப்பட்டது. மனித இனம் ஒட்டு மொத்தமாக உணர்ச்சிவயப் பெறச் சமூக உணர்வு தேவைப் பட்டிருக்கிறது. இவ்வுணர்வை, அருளுடைமை, நிலையாமை ஆகிய நிலைகளின் மீது உருவாக்க அறநூல்கள் முயன்றுள்ளது புரிகிறது.

நல்லோரைக் காக்க வல்ல அமைப்பாக எதிர்பார்க்கப்பட்ட 'அரசு' அக்காவலுக்கு இடையூறாக இருந்த தீயோரை அழிக்கவும் நேர்ந்திருக்கிறது.

'எல்லோருக்கும் கல்வி' என்ற கொள்கை அக்காலத்தில் இல்லை; சாதி அடிப்படையில், செல்வச் சீர்மையிலுமே கல்வி கிடைத்தது' என்பதும் தெளிவாகிறது.

குடும்பத்தில் இருபாலருக்குமே 'ஒழுக்கம்' அடிப்படையாக இருந்தது. எனினும் ஆணாதிக்கச் சமூகத்தில் பெண்ணுரிமைக்கு இடமில்லை. பெண்ணடிமைச் சூழலும் பெண்பிறவியின் இழிவும், பெண்கல்வி மறுப்பும், சொத்துரிமை விலக்கும் தொடர்ந்திருப்பது தெரிகிறது. கால ஓட்டத்தில் பெரும்பாலான குடும்பங்கள் தன்னிறைவு அடைய இயலாத சூழ்நிலையில் இருந்ததால் குடும்பப் பணிகள் காலத்திற்குக் காலம் மாறின.

அறநூற்காலச் சமூக ஆய்வில், பிறர்க்குத்துயர் தராப் போக்கும், இருப்பதில் நிறைவு கண்டு அமையும் போக்கும் அடிப்படைகளாய் இருந்திருப்பதை உணர முடிகிறது.

### திருமணம்

திருமணம், பெரியவர்கள் நிச்சயித்த திருமணமாக நடைபெற்று வந்திருக்கவேண்டும். இந்தச் சமுதாயத்தில் களவு மணத்திற்கு இடமில்லை. நாள், முகூர்த்தம், கிழமை பார்த்துத் திருமணம் நடைபெற்றிருக்கிறது. இம்முறை ஆரிய திருமண முறையைப் பின்பற்றியதாக இருக்க வேண்டும்.

### சாதி

சிறுபஞ்சமூலம் நான்கு வகை வருணத்தினரைக் குறிப்பிட்டுச் சொல்கின்றது. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகிய நான்கு பிரிவினரைப் பற்றியும், அடிமைகளைப் பற்றிய குறிப்புகளும் சிறுபஞ்சமூலத்தில் காணப்படுகின்றன.

### அந்தணர்

பிறர்க்குக் கொடுத்துண்பவன் அந்தணன் (8). வேள்வி செய்பவன் அந்தணன் (33) என்ற குறிப்புகளின் மூலம் அந்தணரின் செயற்பாடுகள் தெரியவருகின்றன.

### அரசர்

'வேந்தன் நாட்டிற்கு அமிர்தம் போல் உதவவேண்டும், அரசன் செங்கோல், நடுவுநிலைமை தவறாமல் விளங்கவேண்டும் (7), 'அரசனுக்கு அழகு, குடிகள் அவனைப் புகழ்ந்து கூறுதலாம்' குடியானவர்கள் உயர்வடைய அரசன் உயர்வடைவான் (46), அரசன் எல்லாப் பொருளையும் பாடல் வல்லவர்கட்கும் தந்துதவினான் (56) 'அரசன்' என்பவன் மக்களை வருத்தாமல் ஆட்சி செலுத்த வேண்டும் என்ற குறிப்புகள் மூலம் அரசனைப் பற்றிய இலக்கணமும், அரசு உழவுத் தொழிலையே முக்கியத் தொழிலாகக் கொண்டு இயங்கி வந்தமையும் தெளிவாகின்றன. 'மக்களிடம் அரசன் நல்ல பெயரை வாங்கவேண்டும்' என்றும் அரசனைப் பற்றிச் சிறுபஞ்சமூலம் குறிப்பிடுகிறது.

### வாணிகர்

பொருளைப் பயன் கருதி வழங்குபவன் வாணிகன் என்று ஒரே ஒரு பாடல் மட்டும்தான் சிறுபஞ்சமூலத்தில காணப்படுகிறது.

இதன்மூலம், வாணிகர் பயன்பருதிப் பொருளை வழங்கிய தன்மை புலப்படுகிறது.

**வேளாளர்**

புன்செய்யை நஞ்சையாக மாற்றி எருவிட்டுக் கலப்பையால் உழுது பயன்படுத்தி உழவுத் தொழில் செய்கின்றவன் உழவன் (60), உழவன் உயர்வடைந்தால்தான் நாடு உயர்வடையும் (46), உழவுத் தொழில் செய்கின்றவனுக்கு மறதி கேடாகும் என்ற கருத்துக்களின்படி வேளாளர்களை நம்பியே நாட்டின் வளம் இருந்தது. வேளாளர்கள் உயர்வாக மதித்துப் போற்றப்பட்டனர் என்பதும் புலனாகும்.

**அடிமை**

அடிமைகளும் ஏவலரும் இருந்தமை பழைய சமூகங்களில் அரிய ஒன்று அன்று. அடிமைத் தொழில் செய்பவனோடு பகை கொள்ளுதல் எந்நாளும் கேடு (50) என்பதன் மூலம், அக்காலத்திலும் அடிமைகள் இருந்தனர் என்பதும், அவர்களுடன் பகைமை எக்காலமும் கொள்ளக்கூடாது என்பதும் புலனாகின்றது. மேலும், அக்காலத்தில் அடிமைகள் கொடுமைப்படுத்தப்படவில்லை என்பதும் சிறுபஞ்சமூலம் நூல் மூலம் பெறப்படுகிறது.

அடிமைகள் பிறநாடுகளில் இருந்தது போன்று, விற்கப்பட்ட தாகவோ, விலைகொடுத்து வாங்கப்பட்டதாகவோ தெரியவில்லை. அவர்கள் தாழ்வாக நடத்தப்பட்டனர். ஆட்சியியலில், மேல் வகுப்பினருடன் திருமணம், தொடர்பு முதலியவற்றில் பங்கு பெற அவர்களுக்கு உரிமை இருந்ததில்லை. மேல்வகுப்பினரின் வயல்களில் வேலைசெய்யவும், வீட்டு வேலைகள் போன்ற எடுபிடி வேலைகளுக்கே பயன்படுத்தப்பட்டனர். குறிப்பாக அவர்களைச் சமையல் தொடர்பான வேலைகளுக்குக்கூடப் பயன்படுத்துவது குற்றமாகக் கருதப்பட்டது. இதனை வேலைக்காரி சமைத்த உணவை அறிவுடையோர் உண்ண மாட்டார்கள் என்ற பாடல் வழி அறியலாம். அக்காலச் சமுதாயத்தில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், அடிமை என ஐந்து வகையான சாதிப் பிரிவுகளைக் கொண்ட மக்கள் இருந்தனர் என்பதைச் **சிறுபஞ்சமூலம்** தெளிவாக விளக்குகின்றது.

**தொழில்கள்**

பல்வகைத் தொழில்களும் நிறைந்திருக்கும் சமுதாயமே சிறந்த சமுதாயமாகும். சமுதாய நிலைக்கும், பொருளியல் வாழ்க்கைக்கும் ஏற்றபடி சில தொழில்கள் வேறுபடினும் உழவு, வாணிகம்,

மருத்துவம், கட்டடக்கலை, தச்சு போன்ற தொழில்கள் எச் சமுதாயத்திலும் வேண்டப்படுவனவாகும். சிறுபஞ்சமூலத்தின்வழியே சில தொழிகள் வெளிப்படையாகவும், சில தொழில்கள் குறிப்பாகவும் அறியப்படுகின்றன. கருத்துக்களை விளங்குங்கால் வரும் குறிப்பினாலும், உவமைகளினாலும் பாடல்களை அமைத்துள்ள பாங்கினாலும் பல தொழில்களை அறியமுடிகிறது. பாடற் செய்திகளில் குறிப்பிடப்படும் பொருட்களைக் கொண்டு அக்காலத்தில் நிலவி வந்த பெருந் தொழில்களையும் அதனோடு தொடர்புடைய சிறுதொழில்களையும் உய்த்துணரலாம்.

**உழவு**

'உழவுத்தொழில் சிறந்த முறையில் நடைபெற்றுவந்தது' என்பதற்கான சான்றுகள் கிடைக்கின்றன. ஒரு நாட்டில் அரசன் உயர்வடைய வேண்டுமானால் அந்நாட்டில் உழவுத்தொழில் சிறந்து விளங்க வேண்டும் (46) என்றும், ஒரு மன்னனுக்குத் தேவையான தகுதிகளில் ஒன்றாகச் சேற்று நிலத்தையும் பெற்றிருக்க வேண்டும் (49) என்பதும் அதை எவ்வாறு செய்ய வேண்டும் என்பது தொடர்பாகவும் சிறுபஞ்சமூலம் கூறுகின்றது. விளைநிலத்திலுள்ள வைக்கோலைச் சேர்த்து நாள்தோறும் 'உழுமாடுகளைக் காப்பாற்றி, புன்செயை நன்செயாக மாற்றி, எருவிட்டு, கலப்பையால் உழுது பண்படுத்தியவனே உழவனாவான்' என்பதற்கிணங்க 'விதைபோட்ட நாட்களை மறவாதிருத்தல் வேண்டும்' என்ற இன்றியமையாத குறிப்பினைக் காணமுடிகின்றது.

**நெசவு**

நெசவுத் தொழிலிலும் மக்கள் சிறந்தவர்களாக விளங்கினர். 'புழுக்களால் நூற்கப்பட்ட நூலும்' (27) என்ற குறிப்பிலிருந்து 'அக்கால மக்கள் பட்டு நெசவில் சிறந்து விளங்கினர்' என்பது தெரிய வருகின்றது. 'பருத்தி, கூட்டத்தில் விலை கூறி விற்கப்பட்டது' (88). 'பருத்தியை விலைக்கு வாங்கி நூல் நூற்று நெசவு செய்தனர் என்பதும், பருத்தி உற்பத்தி மற்றும் அதன் பயன்பாட்டையும், 'மக்கள் உடல் முழுதிலும் போர்த்திக் கொள்ளும் வகையில் ஆடைகள் நெய்யப்பட்டது (67) என்பது நாகரீகத்தினையும் காட்டும் கண்ணாடியாகும்.

**மருத்துவம்**

தலைநோய் உடையாரும், பித்துடையாரும், வாய்ப்புற்று உடையாரும், சயநோய் உடையாரும், மூலநோய் கொண்டவரும்,

வருந்துகின்ற நோய்களைப் பற்றிய (76) குறிப்புகளும் உள்ளன. மகப்பேறுடைய தாய்க்குக் கருவழியாமல் காத்தலுக்கு மருந்துகளைப் பயன்படுத்தினர்' (சிறு. 74) என்கிற கருத்துக்கள் அக்கால மருத்துவம் பற்றித் தெரிந்துகொள்ள உதவுகின்றன.

### காம உணர்வு

மக்கள் காமவயப்பட்டு அவ்வுணர்வே பெரிதெனை வாழ்ந்ததால் நோய்வாய்ப்பட்டனர். 'இவ்வுணர்வை விட்டுவிட வேண்டும்' என்பதைச் **சிறுபஞ்சமூலம்,**

**முழுதுணர்ந்த மூன்றொழித்து....** *(சிறு. 1)*

என்றும்,

**................................................ மாணாக்கன்**
**கற்பனைத்தும் மூன்றும் கடிந்தான் கடியாதான்**
**நிற்பனைத்தும் நெஞ்சிற்கோர் நோய்** *(சிறு. 29)*

என்றும், 'காம உணர்வினால் வருவது நோய்தான்' என்றும் சுட்டுகிறது.

நோய்களைப் பற்றிக் குறிப்பிடப்படுவதால் அந்நோய்களைக் கண்டு சொல்கின்ற மருத்துவர்கள் அங்கு இருந்தமை புலப் படுகின்றது. மேலும் **சிறுபஞ்சமூலம்** என்பதே ஐந்து மூலிகைப் பொருள்களின் பெயராக இருப்பதால் மருந்து சிறந்து விளங்கியமை தெரிகின்றது.

### சிறுபஞ்சமூலத்தில் கல்வி

மனிதனுடைய அறிவை வளர்க்கும் கருவியாக விளங்குவது கல்வி. அக்கல்வியினை 'மனிதகுலத்தின் பொது அனுபவங்களைச் சேகரிப்பதன்மூலம் அறிவினை வளர்க்கும் அறிவு' என்றும் கூறுவர். காலங்கள் தோறும் காலம், இடம், சூழல், மனப்பக்குவம் முதலான பல தன்மைகளுக்கேற்ப இக்கல்வியும் மாற்றமடைந்து வருகிறது.

சங்க காலத்தில் தொழிலைப் பற்றிய அறிவினைப் பெறுவதே கல்வியாகக் கருதப்பட்டது. அக்காலமக்களின் வாழ்க்கையில் கல்வி மிக இன்றியமையாத சாதனமாக அமைந்திருக்கவில்லை. ஆனால் கல்வி கற்பது நல்லது என்று சொல்லப்பட்டது. அறநெறிக் காலத்தில் கல்வியானது மிகவும் வற்புறுத்திப் பேசப்பட்டது. இதனைச் சிறுபஞ்சமூலம் கொண்டு நிறுவலாம்.

## சிறுபஞ்சமூலம் காட்டும் கல்வி

சிறுபஞ்சமூலத்தில் நூல் வகை பற்றியும், ஆசிரியர் மாணவர்கள் பற்றியும் சொல்லப்படுகிறது. சிறுபஞ்சமூலம் தரும் நூல் பற்றிய செய்திகளை இருவகையாகப் பிரிக்கலாம்.

1. சமயம் தொடர்பான அறிவினைத்தரும் நூல்கள்

2. பொது அறிவு தொடர்பான நூல்கள்

நூலைப் பற்றிச் சிறுபஞ்சமூலம் கூறும்பொழுது இலக்கண நூலும், அறிவுநூலும், அளவை நூலும், சமய நூலும் மிக்கோர் செய்த வீட்டு நூலும் உட்பட இந்த ஐந்தையும் சிறந்த நூல்களுள் முதல் வகையில் அடக்குகிறது.

இரண்டாவது நிலையில் வைத்துச் சிறப்பிக்கின்ற நூல்களுள் கணிதமும், யாழினைப் பற்றிய நூலும், சந்தனம் அரைத்தல், இலைக் கிள்ளல், எண்ணல் - இவ்வைந்தையும் அறிந்து செய வல்லவன் மக்களுள் வல்லவன், முதல் வகையைச் சார்ந்த நூல்கள் சமயம் தொடர்பான நூல்கள் ஆகும். இரண்டாவது வகை நூல்கள் போதுமான பொது அறிவினைப் பெறக்கூடிய நூல்கள். சமயம் தொடர்பான நூல்களுக்கே அக்கால கட்டத்தில் முன்னுரிமை கொடுக்கப்பட்டு, கற்கப்பட்டு வந்திருக்கிறது என்பது இதன் மூலம் பெறப்படுகிறது.

### ஆசிரியர்

பிரம்மச்சரியம் காப்பவன் ஆசிரியர் ஆவதற்குத் தகுதியானவன் (சிறு. 29), மாணாக்கனை உயர்கதிக்குச் செலுத்த வல்லவர் ஆசிரியர் (சிறு. 24) என்று ஆசிரியர்களுக்குரிய இலக்கணம் வகுக்கப்பெறுகிறது. அக்கால கட்டத்தில் ஆசிரியர் ஆவதற்குப் பிரம்மச்சரியம் ஒரு சிறந்த தகுதியாகக் கருதப்பட்டு வந்தது என்பது தெரிகிறது.

சமயம் தொடர்பான நூல்கள் முதலிடம் பெறுவதையும் பிரம்மச்சரியம் காப்போன் ஆசிரியனாதலையும் நோக்க இவ்விரண்டையும் மேற்கொள்கின்றவர்கள் துறவிகளே என்பது வெளிப்படையாகிறது. எனவே ஆசிரியர் என்றால் 'துறவி' என்றும் அவர் பின்பற்றுகின்ற சமயம் 'சமணம்' என்றும் கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. நூல்களுக்குரிய இலக்கணத்தில் இருந்து மதங்களைப் பற்றிய அறிவைத் தருவதே நூல் என்றும், அம்மதங்களைப் பரப்புகின்ற துறவியே 'ஆசிரியன்' என்றும் கொள்ள வாய்ப்புள்ளது.

**மாணவன்**

பொதுவாக மாணவர்களை,

1. ஆசிரியர் மீது அன்புடையவன்,

2. ஆசரியனைத் தெய்வமாக வழிபடுபவன்

என இருவகையாகப் பிரிக்கலாம். மாணாக்கன் என்பவன் கல்வி கற்கும் காலத்தில் காமம், வெகுளி, மயக்கம் என்ற மூன்றையும் ஒழித்துவிடுதல் வேண்டும் (சிறு. 24).

மாணக்கனுடைய குடுமி கருநெய்தல் அரும்பின் அளவாக இருத்தல் வேண்டும். அவன் மாதம் ஒரு முறை தலைமுழுகலாம் (சிறு. 30). இனி அவர்கள், தங்கள் ஆசானையும் வலம் கொண்டு வந்து வணங்குதல், நூல்களைப் படித்தல், படித்த நூல்களைப் பற்றிப் பொருள் கேட்டல் மாணவருக்குடைய கடமை ஆகும் (சிறு. 30). மாணாக்கன், உயிர்க் கோரலும், ஊன் புசித்தலும் இல்லாதவனாக யிருப்பின் அவன் உயர்கதிக்குச் செல்வான்' (38) என்று மாணாக்கருக்குரிய இலக்கணத்தில் 'மாணவன் ஒருவன் வணங்க வேண்டும்' (30). 'குருமீது அன்பு செலுத்தவேண்டும்' (சிறு. 29) என்றும் சொல்லப்பட்டுள்ளது. மேலும், புலால் உண்ணாமை, கொல்லாமை போன்றவை (38) மாணவனிடத்தில் வற்புறுத்தப்படுகின்றது. ஆசிரியர் மாணவருக்குரிய குணங்களைத் தருவதில் சமண சமயத்தாக்கம் இருப்பதை உணரலாம்.

**கல்வியால் உண்டாகும் நன்மை**

'கல்வி கற்றவன் உலகிற்கு நன்மையைச் செய்வான்' (சிறு. 4), கற்றவனுக்கு எதிரில் கல்லாதவன் பேசுவதற்கு அஞ்சுவான் (சிறு. 10), 'படித்தவர்கள் தேவர்கள் ஆவர்' (சிறு. 20), 'அறிவுமிகுந்தவர் இளையவராயினும் கல்விகற்றவர் முதியவரோடு ஒப்பர்' (சிறு. 22), 'கல்வி கற்றவன் பொன்னைப் பெறுவான்' (சிறு. 56) என்ற குறிப்புகள் வழிக் கல்வியால் உண்டாகும் நன்மையைச் சுட்டுகிறது.

**கல்லாமையால் வரும் தீமை**

'பூத்தாலும் காய்க்காத மரங்களைப் போல நன்மை அறியாதவர் வயது முதிர்ந்தவர் என்றாலும் அறிவினால் முதிரார். அறிவு நூல்களைக் கற்றுத் தெளியாதவரும் அத்தன்மையினரே' (சிறு. 23) என்பதிலிருந்து 'அறிவுக்கு முதன்மை' வழங்கப் பெறுவது குறிப்பிடத்தக்கது. 'கல்லாதவன் காண்கின்ற பொருளை

அறிவுடையார் கேட்டால் 'நகைப்பர்' (சிறு. 5), 'எழுத்தைக் கல்லாமை தீது' என்று கல்லாமையால் உண்டாகும் இடர்ப்பாடுகளைச் 'சிறுபஞ்சமூலம்' சுட்டுகிறது.

### சிறுபஞ்சமூலம்

ஆசிரியனைப் பற்றியும், மாணவனைப் பற்றியும், கல்வி கற்பதால் உண்டாகும் நன்மைகளைப் பற்றியும், கல்லாமையால் வரும் தீமைகளைப் பற்றியும் படிப்படியான இருபத்தோரு பாடல்களில் சுட்டியுள்ளது. மேற்கண்ட குறிப்புகள் வழி, சிறுபஞ்சமூலம் கூறும் 'சிறந்த கல்வி' என்பது 'சமயம் சார்ந்த கல்வி முறையே' என்பது புலனாகின்றது.

### நம்பிக்கைகள்

**சில வகையான அனுபவங்களே, 'நம்பிக்கை'களாகின்றன எனலாம்.**

> **ஒரு சமயத்தில் பண்பாட்டு மரபினை அறிவிக்க வல்லன அச்சமுதாயத்தின் நம்பிக்கைகள். நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு, சமுதாயத்தால் புரக்கப்படுவன**

**என்பர்.**

### புனித இடம்

**கற்கைக் கரையைப் புனிதஇடமாகக் கருதினர்** (சிறு. 95)

### சுவர்க்கம் நரகம்

நன்மை செய்பவர்கள் சுவர்க்கத்தையடைவர் என்று நம்பினர். குளத்தைத் தோண்டி, சுற்றிலும் மரக்கிளைகளை நட்டு மக்கள் நடக்கும் வழியைச் செதுக்கி மேட்டைத் தோண்டி உழுவயலாக்கிக் கிணற்றை உண்டாக்குதலும் ஆகிய இவ்வைந்தும் செய்தவன் சுவர்க்கத்து இனிதாகச் செல்வான் (66) என்ற நம்பிக்கையும்;

தவத்தால் சுவர்க்கத்தை அடைவான் (36) இரக்கமனம் படைத்தவன் பேரின்ப வீட்டை அடைவான் (90) என்ற நம்பிக்கை களையும் அக்கால மக்கள் கொண்டிருந்தனர். நரகம் பற்றிய செய்தி எதுவும் காணப்படவில்லை.

### பிறப்பு

'பொய் சொல்லாதவன், பிறர் பொருளைக் களவு செய்யாதவன், எளியவரை வையாதவன், பெண்கள் விரும்பினாலும்

விரும்பாதவன், ஊன் உண்ணாதவன் முதலிய பண்புகளைக் கொண்டவன் மறுபிறப்பு எடுக்கமாட்டான்' (சிறு. 19). 'சூதாடாமலும் கயவருடன் நட்புக் கொள்ளாமலும் பிறர்வருந்த வன்சொல் கூறாதவனும் மறுபிறப்பு எடுக்கமாட்டான் (21) என்ற சிறுபஞ்சமூல கூற்றுவழி அக்கால மக்கள் மறுபிறப்பு தொடர்பான நம்பிக்கை கொண்டிருந்தது புலனாகிறது. பெண்களை விரும்பாமை, ஊன் உண்ணாமை போன்ற கருத்துகள் சமண சமயம் சார்ந்த கருத்துகள் என்பது குறிப்பிடத்தக்கது.

**பழக்கவழக்கங்கள்**

பழக்கம் என்பது ஒரு கற்கும் செயலாகும். இது தனிமனிதனிடம் இயல்பாக வந்தமைந்த நடத்தையைக் குறிப்பதாகும் அது தனிமனிதனது இயல்பான நடத்தை எனினும் சமுதாயம் தழுவிய ஒன்றாக மாறும்பொழுது அது சமுதாயத்தை உள்ளடக்கியும் வெளிப்படுத்தியும் நிற்கிறது எனலாம். சிறுபஞ்சமூலத்தின் வழிப் புலப்படுகின்ற சமுதாயப் பழக்கவழக்கங்கள் அவர்கள் காலச் சமுதாய நிலையை உணர்த்தும் காரணங்களாக விளங்குகின்றன.

நாள் பொருத்தமும், முகூர்த்தமும், அவற்றுடன் கோலின் பொருத்தமும், யோகமும், இவற்றால் உண்டாகிற நன்மையும் ஆராய்ந்தறிந்து, பொருந்திய நற்காரியங்களைச் செய்யும் பழக்கத்தினை அந்நாளில் கொண்டிருந்தனர் (44). வேள்விகள் முதலானவற்றைச் செய்யும் அந்தணர்கள் இருந்ததனால் வேள்விகள் செய்தனர் (33) எனலாம்.

மக்கள் தங்களை அழகுபடுத்திக் கொள்வதையும் கூந்தலைப் பேணுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தவர் (37).

> உடல்நலத்தைக் காப்பதிலும், வனப்பூட்டும் பொருள்களைக் கையாள்வதலும் கூந்தலைப் பேணுவதிலும் அதிகக் கவனம் செலுத்திவருவது பண்டைக்காலந்தொட்டே இருந்து வந்தது. நாகரிக முன்னேற்றத்தில் இந்த எண்ணங்கள் படிப்படியாக வளரத்தொடங்கின.

**சிறுபஞ்சமூலம் சமுதாயத்திற்குக் கூறும் அறிவுரைகள்**

சிறுபஞ்சமூலம் சமுதாயத்திற்குக் கூறும் அறிவுரைகளைச் 'செய்ய வேண்டியவை' 'செய்ய வேண்டாதவை' என்னும் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

### செய்யவேண்டியவை

'மக்கள் நல்வழி நடந்து மேன்மையடைய வேண்டும்' என்று விரும்புகின்ற சிறுபஞ்சமூலம் அதற்குத் தக்க முறையில் செய்ய வேண்டியவற்றை வகுத்திருக்கின்றது. அவை:

கொலை, பொய், புலால், களவு முதலிய நான்கு செயல்களுக்கு எதிரான, கொலை செய்யாமை, பொய்பேசாமை, புலால் உண்ணாமை, களவு செய்யாமை முதலிய செயல்களைக் கூடப் பிடித்தல் *(சிறு. 2).*

***பிறர் ஒழியத் தவம் செய்ய வேண்டும்***

***புகழ் பெற ஈகை செய்ய வேண்டும்***

***அறிவின்கண் அடங்கி நடக்க வேண்டும் (சிறு. 6)***

***பெண், கணவன் சொற்படி நடக்க வேண்டும்.***

***மகன், தந்தை சொல்படி நடக்க வேண்டும். (சிறு. 15)***

***பிறர் பொருளை விரும்பாமல் இருக்கவேண்டும்***

***சூதாடாமலும் கயவருடன் நட்புக்கொள்ளாமல் இருக்கவேண்டும்***

***நல்ல குணமுடையவர்களைச் சென்றடைய வேண்டும் (26)***

***பிறிதோர் உயிர்க்குத் துன்பம் செய்யாமை வேண்டும் (32)***

***உறவினரைப் பேண வேண்டும் (சிறு. 45)***

***ஒருவரிடம் சென்று யாசிக்காதிருத்தல் நன்று (சிறு. 61)***

***தண்ணீர்ப் பந்தல் வைத்தல் நன்று (63)***

***நிழல் தரும் மரம் வைத்தல் நன்று (63)***

***உயிர்களுக்கு உண்வித்தல் நன்று (63)***

முதலியனவாம்.

### செய்யக்கூடாதவை

மக்கள் நன்னெறியில் வாழச் செய்யவேண்டியவற்றைக் கூறிய சிறுபஞ்சமூலம் தீநெறியில் உய்க்கின்ற செயல்களைச் செய்யாதீர்கள் என்றும் கூறுகின்றது.

1. ***நல்ல வாழ்வை அடையும் பொருட்டுக் கற்றுணர்ந்தவர்கள் 'தீச் சொல் கூறுதலும்', 'வழிப்பறிக் கொள்ளை செய்தலும்', 'பிறர் பொருளைக் கவர்தலும்' முதலியவற்றை நீக்கி விடுதல் அறமாகும் (சிறு. 97).***

2. பிறர் உண்ணும் இடத்திலும், பகைவர்கள் தளர்ச்சி யடைந்திருக்கும் இடத்தும் பிறர் சூழ்ச்சி கொள்ளும் இடத்தும் செல்லலாகாது (95).

பெரியோர் கூடியிருக்கும் இடத்தில் சிரித்தல், இரகசியம் பேசுதல் நட்பினர்க்குப் பாரபட்சமாக நலம் பேசுதல், ஆகாதவர்க்குப் பகைமை பேசுதல் முதலியவற்றை அறிவுடையோர் செய்யக்கூடாது (85).

உழுபவனுக்கு மறதி கூடாது. 'பொருள் மிகுதியால் வரும் செருக்கு', 'அறிவு முதிராமை', 'பிறரொடு மாறுபடுதல்' முதலியவை கூடாது (சிறு. 50).

பருவமடையாத கன்னியும், மாதவிடாய் நீங்கியவளும் தம்முடையவளும், பொதுமகளும், அயலாள் மனையாளும் ஆகிய ஐவரையும் பகைவரைப் போல் வெறுத்து அறிவுடையார் சேரக் கூடாது (சிறு. 42).

கருவூலத்திற்கும், பலகணக்குத் தொழிலுக்கும், மேற்பார்வைத் தொழிலுக்கும், இல்லக்கிழத்திகளில் காவலுக்கும், பலர் உண்ணும் உலகின் காவலுக்கும் அறிவில்லாதவர்களைப் பயன் ஏற்படுத்தக்கூடாது (சிறு. 40).

அறத்தை விரும்பியவன் புன்மையான வழிகளில் செல்லக் கூடாது (சிறு. 28).

நாணம் இல்லாதவன் அமைதி, நடத்தை இல்லாதவன் நோன்பு, உண்பொருள் இல்லாதவன் ஈகை, வலிமை இல்லாதவன் வீரம், செந்தமிழ்த் தேர்ச்சி இல்லாதவன் கவி பாடுதல் முதலியவற்றால் பயனில்லை (சிறு. 12).

என்று மேற்கூறிய கருத்துகளின் மூலம் 'செய்யவேண்டாதவை' பற்றிச் சிறுபஞ்சமூலம் கூறுகிறது.

முடிவுகள்

1. ஆடவர்களே சமுதாயத்தில் நல்லவர்களாக விளங்கினர். சமுதாயம் ஆணுடைமைச் சமுதாயமாக விளங்கியது.
2. 'பெண்கள் ஆடவருக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்' என்பது வற்புறுத்தப்படுகிறது.
3. 'பெண்கள்' பெரும்பாலான பாடல்களில் பழித்துப் பேசப்படுகின்றனர்.

4. 'பெண்கள்' வீட்டை மட்டும் பேணுகின்றவர்களாகவே உள்ளனர். சமுதாயத்தில் பொது அமைப்புகளில் அவர்கள் எந்தப் பங்கும் வகித்ததாகச் சொல்லப்படவில்லை.

5. 'கற்பு' பெண்களுக்கு வற்புறுத்தப்படுகிறது.

6. பெண்களிடம், கள்ளுண்ணுதல், பரத்தமை முதலிய குணங்கள் இருந்ததாகத் தெரிகின்றது.

7. திருமணம் பெற்றோர் நிச்சயித்த திருமணமாகவே நடைபெற்றது.

8. நான்கு வகைச் சாதிகளுடன் அடிமைகளும் நிறைந்திருந்தனர்.

9. உழவு, நெசவு, மருத்துவம், கல்வி முதலியன சமுதாயத்தில் நடைபெற்ற முக்கியத் தொழில்கள் ஆகும்.

10. சமயக்கல்வியே அக்காலக்கட்டத்துக் கல்வியாக விளங்கியது.

11. சுவர்க்கம், நரகம் போன்ற நம்பிக்கைகள் இருந்தன.

12. மனிதர்களுக்குப் பல பிறப்புகள் உண்டு என்று நம்பினார்கள்.

13. கொலை, களவு, பொய், பிறன்மனை நயத்தல், புலால் உண்ணாமை முதலியவைகளை மக்கள் விட்டுவிடவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

14. உறவினரைப் பேண வேண்டும். ஈகைக்குணம் வேண்டும், பிறவி ஒழியத் தவத்தை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லப் பட்டது.

# 3. சிறுபஞ்சமூலம் காட்டும் அரசியல்

எண்ணங்களைச் சம்பவங்களாக்குவது அரசியல்; சம்பவங்களை எண்ணங்களாக்குவது இலக்கியம், எனவே, 'இலக்கியம்' என்பது மக்களின் பழக்கவழக்கத்திலிருந்து எழுவது, அவர்களின் சிந்தனையைத் தூண்டுவது, எண்ணங்களைத் தோற்றுவிப்பதுமானது. இப்படி இலக்கியமும், அரசியலும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளமையால் இலக்கியங்கள் வாயிலாக அந்தந்தக்கால அரசியல் நிலைமைகளை நம்மால் அறியமுடிகிறது.

## அரசின் தோற்றம்

> **சங்ககாலத்தில் அரசு செலுத்திய பேரரசரும், தொடக்கத்தில் சிறு கூட்டத்திற்குத் தலைவராக இருந்திருத்தல் வேண்டும்.**
>
> *(இராமகிருஷ்ணன், எஸ். இந்தியப்பண்பாடும் தமிழரும், ப.105)*

இவ்வாறு இனக்குழுவாக இருந்த மக்கள் கூட்டமே ஒன்று சேர்ந்து அரசாகத்தோற்றம் பெற்றிருக்க வேண்டும். பண்டைக் காலத்தில் பல்வேறு இனக்குழுக்களாக இருந்த மக்கள் கூட்டம் தங்களுக்கும், தங்கள் பொருள்களுக்கும் மற்றவர்களிடமிருந்தும், இயற்கையின் சீற்றம், விலங்குகளின் தாக்குதல், முதலியவற்றிலிருந்தும் தங்களைப் பாதுகாக்க ஒரு அமைப்பை நிறுவினர். அவ்வமைப்பே அரசு எனப்படும்.

இந்த அமைப்பின் தலைவன் - அரசன் எனப்பட்டான். அவனுக்கு மக்கள் அடங்கி நடந்தனர். அரசனே நாட்டில் நடைபெறும் அனைத்துச் செயல்களுக்கும் காரணமாக இருந்தான். அக்காலத்தே அரசன் கடவுளுக்குச் சமமாகக் கருதப்பட்டான்.

> **நாட்டிற்குத் தலைவனாயிருக்கும் அரசனின் தலைமை முல்லை நிலத் தலைவனிடமே தோன்றி யிருக்க வேண்டும். பின்னர்ப் பொருளாதாரத் திலும்,. தொகையிலும் சிறந்த உழவர் தலைவனே (மருத நிலம்) தமிழ் நாட்டு அரசியலில் வலிமை சிறந்து விளங்கினான். அதன் மேல் ஆயர், குறவர்,**

> **பரதவர், எயினர் முதலிய பிரிவினர் அவனுக்கு அடிபணிந்து வாழ்ந்தனர்.**
>
> (வித்தியானந்தன், ச. தமிழர் சால்பு, ப.38)

என்றும் கூறுவது இவண் நோக்கத்தக்கது.

### சிறுபஞ்சமூலம் காட்டும் அரசியல்

தொடக்கக் காலம் தொட்டு அண்மைக்காலம்வரை உள்ள இலக்கியங்களும், வரலாறுகளும், அரசவரலாறாகவே உள்ளன. அக்கால இலக்கியங்கள் அரசர்களைச் சார்ந்தே எழுதப்பட்டன. நீதி இலக்கியங்கள்கூட அரசனுக்குச் சாதகமாகவே எழுதப்பட்டன. அவ்வாறு எழுதப்பட்ட அரசனுக்குச் சாதகமான செய்திகள் சிறுபஞ்ச மூலத்திலும் காணப்படுகின்றன. அரசர்க்கு எதிரான செய்திகள், அரசனைப்பற்றி இடித்துரைக்கும் கருத்துக்கள், இந்நூலில் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### சிறுபஞ்சமூலம் காட்டும் அரசன்

சிறுபஞ்சமூலம், தன்நிலைமை, தனிதொழில் நிலைமை, எதிரி நிலைமை, உலகியல் நிலைமை என்பவற்றை ஆராய்ந்து தொழில் செய்பவனே அரசன் எனச் சுட்டுகிறது (சிறு.3).

> **மேலும், அரசனுக்கு அழகு தன் நாட்டிலுள்ள வர்களை வருத்தமாட்டானென்று பிறர் புகழ்ந்து கூறும்படி வாழ்தலாகும்** (சிறு. 4)

அரசன் என்பவன் தன்னைப் பற்றியும், முதலில் தெரிந்து நடக்க வேண்டும். அப்பொழுதுதான் அவன் தன் பகைவர்களை வெல்லமுடியும். தன்னைப்பற்றித் தெரிந்து கொள்ளாமல் ஒரு அமைதியான ஆட்சியைத் தரமுடியாது. நாட்டில் அமைதியான ஆட்சி இல்லை யெனும்போது மக்கள் துன்பத்திற்கு ஆளாகின்றனர். ஆனால், மக்களை முறையாக மன்னன் பாதுகாக்கத் தவறிவிட்டவனா கின்றான். எனவே மன்னன் தன்னை, தன் நிலைமையை அறிந்தால்தான் மக்களை வருத்தாமல் காப்பான் என்பதைச் சிறுபஞ்சமூலம் சுட்டுகிறது. எனவேதான் அக்கால இலக்கியங்கள் மன்னனே மக்களின் உயிராக விளங்குகின்றான் என்பதைச் சுட்டுகின்றன.

> **நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே**
> **மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் புறம். 184**

என்பது இவண் நோக்கத்தக்கது. இவ் உலகத்து உயிர்கட்கு மன்னனே உயிர். வேறு உயிர் இல்லை என்று பாடுகிறார் இப்புலவர். சிலம்பிலும்,

மன்னனே மக்களின் நலன்கள்அனைத்திற்கும் காரணமாக அமைந்துள்ளான் என்பதைக் "கோவலனையும் கண்ணகியையும் வாழ்த்தும் பொற்கொடி மாதர்கள் இமயம் வென்ற வெற்றி என்றும் சோதனைக்கே உரியதாக நிலைக்குமாக என்று வாழ்த்துவதால் அறியலாம் (மனையறம் படுத்தகாதை -6). அரச மக்களின் இன்ப துன்பங்கள் அனைத்திற்கும் காரணமாக அமைந்தான் என்பதைச் சிறுபஞ்ச மூலம் வழி அறியலாம்.

**கொடுங்கோன்மையும் அரசும்**

பண்டைக்கால மன்னர்கள் இறைவனின் தன்மையைப் பெற்றவர். எல்லையில்லாத அதிகாரத்தைப் பெற்றவர்கள், என்றாலும் அவற்றையெல்லாம் மக்களின் நன்மைக்கே பயன்படுதத வேண்டும்.

அதை விடுத்து அவர்கள் மக்களை வருத்தினாலும், தவறான வழிமுறைகளுக்கு அவர்களைப் பயன்படுத்தினலும், மக்கள் அரசர்களைத் தண்டிக்கவும் தயங்கவில்லை என்பதைப் புராணங்களும், வரலாறும் நமக்கு நினைவூட்டுகின்றன.

"பாதுகாவாத அரசனை உடைந்த கப்பலைப்போல் தள்ளிவிட வேண்டுமென்று" பிராசேதஸ்மனு புகன்றாரென்பார் பீஷ்மர்.

> **தீவினை புரியும் கொடியோரை அமைச்சராக உடையவனும், தருமத்தைக் கெடுப்பவனுமான வேந்தன், குடிகளால் கொல்லத் தக்கவன்' என்று வாமதேவர் கூறியதாகவும் சொல்வர் பீஷ்மர்.**
>
> *(இராமகிருஷ்ணன், எஸ். இந்தியப்பண்பாடும் தமிழரும், ப.105)*

> **கொடுங்கோன் குடிகளால் கொல்லப்படுவான் அல்லது பகைவரின் படையெடுப்பால் அழிவான்"**

என்று எச்சரிப்பார் சாணக்கியர்.

> **கொடுங்கோலர்களை நாடு கடத்தினர் குடிகள்**
>
> *(இராமகிருஷ்ணன், எஸ். இந்தியப்பண்பாடும் தமிழரும், ப.105)*

என்றும் வேதநூல்கள் மூலம் அறிகின்றோம்.

> **கொடுங்கோலனாகி, ஆராயாமல் எதையும் செய்யும் அரசன் பொருளையும், குடிகளையும் ஒருசேர இழந்துவிடுவன்'** *(திருக்குறள். 554)*

என்றும்,

**குடிகளை வருத்தும் தொழிலை மேற்கொண்டு, முறையில்லாத செயல்களைச் செய்து நடக்கும் அரசன், கொலைத்தொழிலைக் கொண்டவனை விடக் கொடியவன்** *(திருக்குறள். 851)*

என்றும் பழித்துப் பேசுவர் வள்ளுவர்.

மேற்கூறிய கருத்திலிருந்து, மன்னர்கள் குடிகளிடம் நல்லமுறையில் நடந்த கொண்டனர், அவ்வாறு நடக்காதவர்கள் தண்டனைக்கு ஆளானார்கள் என்பது தெரியவருகின்றது.

இக்கருத்துகளை ஒத்தாற்போன்றே சிறுபஞ்சமூலம் சுட்டுவதும் குறிப்பிடத்தக்கது. இந்நூல் தோன்றிய காலத்தில் ஆண்ட மன்னர்கள் நல்லறமே கொண்டனர். மக்களை வருத்துகின்ற தொழிலை மன்னர்கள் செய்யவில்லை என்று தெரிந்து கொள்வதுடன், மன்னர்களில் கொடுங்கோன்மையானவர்கள் மிகக்குறைவாகவே இருந்தனர் என்பதும் தெரியவருகிறது.

**அரசருக்குரிய தகுதிகள்**

அரசராவதற்குத் தகுதிகள் என்ற பகுதியில் மூன்று பாடல்களில் பல குறிப்புகள் காணப்படுகின்றன. அவற்றில் இரண்டு பாடல்களின் கருத்து, சமயம் சார்ந்ததாகவும் ஒன்று அரசருக்குரிய விதியைப்பற்றி உரைப்பதாகவும் உள்ளன.

நீர், காடு, சேற்றுநிலம், மலை, காலாட்படை இவ்வைந்தையும் தனக்குக் காவலாக உடையவனை ஒரு நாட்டிற்கு அரசனாகப் பெரியோர் நியமிப்பது விதியென்பதாம் (சிறு. 49) என்று சிறுபஞ்சமூலம் கூறுவதன் மூலம் ஒரு நாட்டிற்கு மிகவும் இன்றியமையாதவை நீர், காடு (முல்லைநிலம்), சேற்றுநிலம் (மருதம்), மலை, காலட்படை இவை ஐந்தும்.

நீர்வளம் என்பது நாட்டின் வளத்திற்குக் காரணமாகவும் மக்களுக்கு மிகவும் இன்றியமையாத ஒரு பொருளாகவும் கருதப்படுகிறது. எனவே ஒரு நல்ல நாடானது போதிய நீர் வளத்தைப் பெற்றிருக்கவேண்டும்.

காடு என்பதை இங்கு முல்லை நிலத்தையே கொள்ள வேண்டும். பழங்காலத்தில் கால்நடைகள்தான் ஒரு நாட்டின் இன்றியமையாத சொத்தாகக் கருதப்பட்டன. அந்தக் கால்நடைகளை மேய்ப்பதற்குக் காடுகள் இன்றியமையாத ஒன்று. மேலும் ஒரு நாட்டின் மழைவளம் குறைவில்லாமல் இருப்பதற்குக் காடுகளும்,

மரங்களும் உதவுகின்றன. எனவே காட்டுவளத்தை ஆசிரியர் சுட்டி இருக்கலாம்.

**சேற்று நிலம்**

நாட்டின் உணவு உற்பத்திக்குச் 'சேற்றுநிலம்' மிக இன்றியமையாதது. மேலும் நாட்டிற்குப் பொருள்வளத்தைத் தருவதும் சேற்று நிலங்கள்தான். நாட்டில் உணவு உற்பத்தி சரியாக நடந்தால்தான் மக்கள் பசி, நோய் இல்லாமல் இருக்க முடியும். அதனால்தான் வள்ளுவரும்,

> **மிக்க பசியும் ஓயாத நோயும், அழிவு செய்யும்**
> **பகையும் தன்னிடம் சேராமல் நல்லவகையில்**
> **நடைபெறுவது நாடு** *(திருக்குறள். 734)*

என்கிறார். பசியும், நோயும் இல்லாமல் இருக்க வகைசெய்வது சேற்று நிலம். எனவே இங்குச் 'சேற்று நிலம்' என்பது நாட்டின் அரசன் பெற வேண்டிய முக்கியத் தகுதிப் பொருளாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மலை**

ஒரு நாட்டின் எல்லையை நிர்ணயிக்கவும், நாட்டிற்கு மிக முக்கிய அரணாகவும் இருப்பது மலையாகும். எனவே மலை குறிப்பிடப்பட்டுள்ளது.

**படை**

அரசன் காலாட்படையை உடையவனாக இருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார் ஆசிரியர். இங்கு ஏன் காலாட்படையைக் குறிப்பிட்டுள்ளார் என்பது தெளிவு படவில்லை. இனக்குழுவாக வாழ்ந்த மக்களிடம் படைகள் நன்கு வளர்ச்சியடைந்திருக்க முடியாது. எனவே, அவர்கள் எளிதில் திரட்டக்கூடிய படை காலாட்படையாக இருந்திருக்க வேண்டும். எனவே, காலாட்படையை ஆசிரியர் குறிப்பிட்டு இருத்தல் வேண்டும். மேற்சொல்லப்பட்ட ஐந்தையும் தனக்குக் காவலாக உடையவனை ஒரு நாடடிற்கு அரசனாகப் பெரியோர் நியமிப்பது விதி என்று கூறப்படுகிறது.

'அரசனைப் பெரியவர்களே தேர்ந்தெடுத்து நியமனமும் செய்தனர்' என்று தெரிகிறது. ஆட்சியானது பரம்பரை, பரம்பரையாக இருந்திருக்கவில்லை என்றும், 'அரசனுக்குப்பின்னர் அடுத்து அவனுடைய மூத்தமகன்தான் பட்டத்திற்கு வரவேண்டும் என்ற விதியுமில்லை' என்று இப்பாடல் வழியாகக் கொள்ள இடமுண்டு என்றாலும், விரிவாகப் பார்க்கும்பொழுது,

> **மக்கள் ஒன்று கூடித் தமக்குள் தோற்றப் பொலிவும், திறமையும் மிகுந்த ஒருவனைப் தலைவனாகக் கொண்டனர். குற்றம் புரிவோரைக் கண்டித்தோ, தண்டித்தோ, நாடு கடத்தியோ ஒடுக்கும் உரிமையை அவனுக்கு அளித்ததோடு, அவன் பணிக்குக் கூலியாகத்தமது விளைபொருளில் ஒரு பகுதியைத் தரமுன்வந்தனர்**
>
> *(இராமகிருஷ்ணன், எஸ். இந்தியப்பண்பாடும் தமிழரும், ப.162)*

என்று கருதவேண்டியுள்ளது

> **சங்க காலத்தில் அரச உரிமை வழிவழியாக வந்தது. தேர்தல்முறை இருந்ததாகத் தெரியவில்லை. தந்தைக்குப்பின்னர் மகன் வருவதே முறைமை**

என்பதை உறுதிப்படுத்துகிறது.

சங்க காலத்தில் அரசு செலுத்திய பேரரசரும், தொடக்கக் காலத்தில் சிறு கூட்டத்தினருக்குத் தலைவராக இருந்திருத்தல் வேண்டும். தமிழ்நாடு சங்க காலத்தில் மக்கள் ஒழுக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஐந்து நிலங்களாகப் பிரிக்கப் பட்டிருந்தது. கடற்கரையைச் சார்ந்த நெய்தல் நிலத்தில் உள்ளனர் பரதவர் எனப்பட்டனர். மலைகளிலும், மலைசார்ந்த நிலமுமாகிய குறிஞ்சியில் வாழ்ந்தவர் குறவர் எனப்பட்டனர். மருதநிலத்தில் உழுதுண்டு வாழ்ந்தவர் உழவர் எனப்பட்டனர். காட்டு நிலமாகிய முல்லையில் வாழ்ந்தவர் 'ஆயர்' எனப்பட்டனர். பாலைப்பகுதியில் வாழ்ந்தவர் 'எயினர்' எனப்பட்டனர். இந்த ஐந்திணை மக்களுள் ஆயர் தமக்கு ஒரு தலைவனை அமைத்து அவனைக் 'கோ' என்றனர். மருதநிலமக்கள் தங்கள் தலைவனை 'வேள்' என்றனர். இவ்வாறு அந்தந்த மக்கள் கூட்டத்தாரால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவனையே 'சிறுபஞ்சமூலம்' சுட்டும் அரசனுக்குப் பொருத்தமாகக் கருதலாம். எனவே சிறுபஞ்சமூலம் சுட்டும் அரசன் இனக்குழுத் தலைவன் அளவிலுள்ள மிகக் குறுகிய பரப்புத் தலைவனே என்று கொள்ளலாம்.

### சிறுபஞ்சமூலம் கூறும் அரசன்

1. சிறையிருப்பார், பத்தியம் இருப்பார், விரதம் இருப்பார் இவர்களுக்கு உணவு தருபவர், நீதி கற்று உயர்ந்த பதவி அடைவார் (சிறு. 71)
2. வலியிழந்தோர், மூத்தோர், வடக்கிருந்த தவத்தினர், பிணியாளர், நாடுவிட்டு நீங்கிந்தார் ஆகியவர்களுக்கு உணவு

கொடுப்பவர் அரசராவர் (சிறு. 73)- எனும் இவ்விரண்டு கருத்துக்களும் மதம் சார்ந்த கருத்துக்கள் என்று கொள்ளவேண்டி உள்ளது.

சிறையிலிருப்பாருக்கு உணவு தரவேண்டும் என்றும் அவர்களுக்கு உணவு தருகின்றவர்கள் நீதி கற்று அரசராகிய உயர் பதவி அடைவார்கள் என்றும் கூறுகின்றார். இது மனிதாபிமான அடிப்படையில் சொல்லப்பட்டிருக்கவேண்டும். 'பத்தியம் இருப்பார், விரதம் இருப்பார் இவர்களுக்கு உணவு தருகின்றவர் உயர்பதவி அடைவார்கள் என்பது முழுக்க, முழுக்க மதம் தொடர்பான கருத்தாகும். 'மதத்தினைப் பின்பற்றும் துறவிகளுக்கு உணவு கொடுக்கவேண்டும்' என்பதற்காகச் சொல்லப்பட்டதாகும். விரதத்தைக் கடைப்பிடிக்கின்றவர்கள், 'பத்தியம் இருத்தல்' போன்ற செயல்களை முழுக்க, முழுக்கத் துறவிகளே பின்பற்றமுடியும். எனவே அவர்களுக்கு உதவினால் அந்த உதவிப்பயன் உயர்பதவியைப் பெற்றுத்தரும் என்கிறார் ஆசிரியர்.

> **வலியிழந்தோர், மூத்தோர், வடக்கிருந்தார்,**
> **தவத்தினர் நாடுவிட்டு நீங்கி நைந்தார் ஆகியவர்**
> **களுக்கு உணவு கொடுப்போர் அரசராவர்**

என்று சிறுபஞ்சமூலம் கூறுகிறது. வடக்கிருத்தல் என்பது முழுக்க, முழுக்கச் சமணர் பின்பற்றுகின்ற விரதமாகும். தவத்தினர் என்பதும் பொதுவாகச் சமணர்களையே குறிக்கும் எனலாம். நாடுவிட்டு நாடுநீங்கி நைந்தார் என்பது சமணர்கள் தங்கள் மதங்களைப் பரப்ப ஒவ்வொரு இடமாகச் சென்று மதத்தினைப் பரப்பினார்கள். அவ்வாறு அவர்கள் நாடுவிட்டு நாடு செல்ல வேண்டியிருப்பதால் செல்லும் இடத்தில் உணவுத் தட்டுப்பாடு இருக்கக்கூடாது என்பதற்காக அவர்களின் துன்பம் போக்க இவ்வாறு செய்திருக்க வேண்டும்.

வலியிழந்தார் என்பது, சமயத்தினைப் பரப்புகின்றவர்கள் உடல் வலிமையும், உணவினைச் சொந்தமாகத் தேடிக்கொள்ளும் வலிமையும் இல்லாதவர்கள். எனவே அவர்களை எண்ணியே வலியிழந்தோர் என்பது குறிக்கப்பட்டிருக்கவேண்டும்.

எனவே, மேற்சொன்ன இரண்டு கருத்துக்களையும் கொண்டு சமண சமயத்தைப் பரப்புகின்ற துறவிகளுக்கு உதவுகின்றவர்கள் நீதிநூல்களைக் கற்று அரசராகும் தகுதி உடையவர்கள் என்று சொல்லுகின்றது. இது தங்கள் மதத்தினைச் சார்ந்த துறவிகளுக்கு உணவுத் தொடர்பான துன்பம் உண்டாக்கக்கூடாது என்பதற்காகச்

சொல்லியிருக்கவேண்டும்.

> **குற்றமற்ற உணவினைச் சமணத்துறவி இரந்து பெற்று மிகுதியாக உண்ணாமல் அளவாக உண்ணுதல் ஏஷணா சமதியாகும்.**
>
> *(ஞானமூர்த்தி, தா.ஏ. சமணம், ப.83)*

சமணத் துறவிகள் தங்கள் உணவினை இரந்து பெற்றே உண்டனர். அவர்கள் பிச்சைக்கு வரும்பொழுது உதவவேண்டும் என்பதற்காகவும், பிச்சையிடுபவர்கள் அரசராவர் என்று கூறினால் ஆர்வத்துடன் பிச்சையிடுவர் என்பதற்காகவும், சொல்லப்பட்டிருக்க வேண்டும் எனலாம். மக்களுக்கு விதியின் மீதும், பிறவிகளின் மீதும் நம்பிக்கை இருந்தது என்பதை இதனால் அறியலாம்.

### அரசரின் பண்புகள்

அரசன் இரக்கக் குணம் மிக்கவனாகவும் நடுநிலைமை தவறாதவனாகவும் இருக்கவேண்டும் (சிறு.7) என்று சிறுபஞ்சமூலம் கூறுகிறது. அரசனுக்கு நடுநிலைமை தேவை என்பது நம் பண்டை இலக்கியந்தொட்டு வற்புறுத்தப்பட்டும், அதற்கு உதாரணமாகச் சில மன்னர்கள் சொல்லப்பட்டும் வருவது ஒப்புநோக்கத்தக்கது.

நடுநலைமை பற்றிப் பேசும் வள்ளுவர்,

> **உள்ளத்தில் கோணுதல் இல்லாத தன்மையை உறுதியாகப் பெற்றால், சொல்லிலும் கோணுதல் இல்லாதிருத்தல்** *(திருக்குறள். 119)*

என்றும்,

> **முன்னே தான் சமமாக இருந்து, பின்பு பொருளைச் சீர்தூக்கும் துலாக்கோல்போல் அமைந்து ஒரு பக்கமாகச் சாயாமல் நடுவு நிலைமை போற்றுவது சான்றோர்க்கு அழகு** *(திருக்குறள். 118)*

என்றும் நடுநிலைமையாளர் தன்மைகளைச் சுட்டுகிறார்.

### அரசரின் உயர்வும் நிலைக்கும் தன்மையும்

ஒரு நாட்டிற்குத் தலைமை தாங்குகின்றவன் எவ்வாறு செயல்படுகின்றானோ அவ்வாறே அந்நாடும் செயல்படும். எனவே ஒரு நாட்டின் வளர்ச்சியும், வீழ்ச்சியும் தலைமையை அடிப்படையாகக் கொண்டே அமைகிறது. சங்க காலத்தில் தமிழர் வீரச்சிறப்பாலும், ஈரமாண்பாலும் மிக உயர்ந்தவராவர்; பண்பாட்டாலும் பெருநிலையுற்றவர். உணவு, உடை முதல் ஆட்சிச்

செம்மை உட்பட ஆன்மீகக் கோட்பாடு வரை பலவற்றிலும் உயர்ந்தது பண்டைத் தமிழர் வாழ்வு. பண்டைத்தமிழ்ச் சமுதாயம் காட்சி நலம் மிக்க தெளிவுரைகள் நல்கிய சமுதாயம். சிந்தனைச் சீர்மையில் செப்பம் பெற்றது என்பது தெளிவு. இப்படிப்பட்ட சமுதாயம் வீழ்ந்தது சரியான தலைமை தொடர்ந்து அமையாமையால்தான் என்பது புலனாகிறது.

மூவேந்தரும் மூவேந்தராக இல்லாமல், ஒவ்வொரு குடியினரும் இரண்டு இரண்டு பிரிவினராக இருந்ததைத் தொன்னூல் வழியாக அறிகின்றோம்.

குட்டுவன் மரபினர், பொறையன் மரபினர் என்று சேரரும், கொற்கைப் பாண்டியர், கூடற் பாண்டியர் என்று பாண்டியரும், உறையூர்ச் சோழர், புகார்ச் சோழர் என்று சோழரும் தனித்தனி உட்பிரிவுகளால் பிரிந்திருந்தனர். ஆட்சி உரிமைப்பங்கீடு என்ற அளவில் இப்பிரிவினை நின்றுவிடவில்லை. போட்டிக்கும், பூசலுக்கும் இப்பிரிவினை வித்தாக அமைந்திருந்தது.

> **தமிழர்கள் தன்மானம் உடையவர்களாக வாழ்ந்த அளவுக்கு இனமானம் உடையவர்களாக வாழவில்லையோ என்று கருத இடமுண்டு. தன் இனப்பற்றும், மொழிப்பற்றும் பிறரை நோக்க இக் கூட்டாத்தாரிடைக் குறைவு என்று தோன்றுகிறது.**
>
> *(குருசாமி, மரா.போ. சங்க காலம், ப.65)*

தமிழர்களின் சங்ககால ஆட்சி முடிவுற்றமைக்கும், ஓர் அமைப்புக்குள் அடங்காமைக்கும் சரியான தலைமை இல்லாமையே காரணமாகச் சொல்லவேண்டும்.

ஒரு நாட்டில் நிலையான ஆட்சி நிலவவேண்டுமெனில், நல்ல மக்கள், கல்வி கற்றவர்கள், சேவகர்கள், நல்ல நாடு இவை மட்டும் போதாது. அதனுடன், "நல்ல அரசனும் வேண்டும்" என்று சுட்டுவதிலிருந்து தலைமை நல்லபடியாக அமைந்தால்தான் அரசு நிலைக்கும், உயர்வடையும் என்றும் சுட்டுகின்றார்.

நல்ல தலைமை அமைந்த பின்னர், அம்மன்னனுக்கு உதவுகின்ற அமைப்புகள் மிக நல்லமுறையில் அமைந்துவிட்டால் அது அரசனுக்கு அமுதம் போன்றதாகும்.

> ***1.*** **நல்ல நாடு**
>
> ***2.*** **நல்ல சேவகன் இவையிரண்டும் அரசனுக்கு அமுதம்போன்றவையாகும்** *(சிறு. 4)*

நல்ல நாடு என்பதற்கு வள்ளுவர் கூறும், "உறுபசியும், ஓவாப்பிணியும், செறுபகையும் சேராமல் இருத்தல் நாடு"- என்பதை ஒரு நல்ல இலக்கணமாகக் கொள்ளலாம். அத்தகு தன்மை வாய்ந்தநாடு நல்ல நாடு எனக் கொள்ளலாம்.

எனவே, மேற்சொன்னவைகளுக்கு எதிரான செயல்கள் அக்காலத்தில் இருந்தனவா என்பனவற்றை அறிவதற்குப் போதிய செய்திகள் கிடைக்கவில்லை. ஆனால் செயல்கள் நடைபெற்று இருக்க வாய்ப்புள்ளது? சங்ககால இறுதியில் கி.பி. 250 வாக்கில் சேர, சோழ பாண்டியர்கள் தமக்குள் ஒற்றுமையில்லாது போர் செய்து கொண்டனர். சில குறுநில மன்னர்கள் தங்களுக்குள் பகைமை பாராட்டி வந்துள்ளனர். எனவே நாடு அமைதியில்லாமல் காட்சி யளித்ததனை ஓரளவு இலக்கியங்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. எனவே, இப்படிப்பட்ட குழப்பமான சூழ்நிலையில் மன்னர்கள் செல்வாக்குப் பெற்றிருக்க முடியாது. செல்வாக்கில்லாத மன்னனிடத்தில் பணியாற்றும் ஏவல் ஆட்கள்அவனது குறிப்பறிந்து செயலாற்றுவார்கள் என்பது இயலாமல் போயிருக்கலாம். எனவே அவற்றை இலக்கியங்கள் வற்புறுத்தியிருக்கவேண்டும்.

சிறுபஞ்சமூலக் காலச் சமுதாயத்தில் இருந்த அரசன் யானைப் படை வைத்திருந்திருக்க வேண்டும். ஒரு நாட்டின் அரசனுக்கு அழகு, யானை படையை வைத்திருத்தல் (சிறு. 7) என்று **சிறுபஞ்சமூலம்** குறிப்பிடுகிறது.

பண்டைத் தமிழர்கள், காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை என்ற நால்வகைப் படைகளைக் கொண்டிருந்தனர்.

அவற்றில் யானைப்படை முக்கியமானதாகக் கருதப்பட்டது.

**நிலவெளியிற்றாவுதல், நிலத்திற்றாவுதல், செல்லுதல், கொலைக்கோள் யானைப்போர், நகர் சிதைத்தல் – இவ்வேழும் போர்க்குரிய யானையின் செயல்கள் ஆகும்**

என்பதன் மூலம் யானைப்படையின் பயனை உணர்ந்து, அதனைப் பயன்படுத்தி உள்ளார்கள் என்பதும், ஒரு மன்னன் என்றால் அவனிடத்தில் வலிமை வாய்ந்த யானைப்படை இருக்கவேண்டு மென்பதும் தெளிவாகின்றன.

**அரசரின் சொல் கேட்டு நடக்கும் ஏவல் ஆட்கள் இருக்க வேண்டும், மாறாக அவர்கள் எதிரிகளுடன் சேர்ந்து கொள்ளக்கூடாது** (சிறு.15)

என்பது வலியுறுத்தப்படுகிறது. ஒரு நாட்டிற்கும், நாட்டின் தலைமைக்கும், சார்ந்திருக்கும் அமைப்பின் தலைவனுக்கும் துரோகம் செய்யும் துரோகிகள் அக்காலம் தொட்டே தொடர்ந்து வந்திருக்கின்றனர். அது வளமானதன்று என்பதைக் குறிப்பிடுவதற் காகவே என்று கொள்ளவேண்டும்.

**வரப்புயர நீருயரும், குடியுயரக் கோனுயர்வான்**
*(சிறு.46)*

என்று நீர்வளம் பெருகினால் வேளாண்மை அதிகமாகும். வேளாண்மையும், உணவு உற்பத்தியும் அதிகமானால் குடிகள் உயர்வார்கள், குடிகள் உயர்வடைந்தால் அரசன் உயர்வடைவான்- என்பதையும் சிறுபஞ்சமூலம் விளக்குகிறது.

இதன்வழி, ஒரு நாட்டின் மன்னன் வீழ்ச்சியடையாமல் வளர்ச்சியடைய, நிலைபெற முக்கியமாக அவன் நீர்ப் பாசனத்தைப் பேணிக்காக்க வேண்டும். நீர்ப்பாசனத்தின் மூலம் விவசாயமும், விவசாயத்தின் மூலம் மக்களும், மக்களின் மூலம் மன்னனும் உயர்வார்கள் என்பதை அறியலாம்.

**அமைச்சர் தகுதி**

அமைச்சரைப்பற்றிய குறிப்புச் சிறுபஞ்ச மூலத்தில் ஒரே ஒரு பாடலில் மட்டும் காணப்படுகிறது.

**எல்லாக் காரியங்களையும் பகுத்தறியும் வல்லமை உடையவனே மந்திரி** *(சிறு58)*

என்பதுவாம்.

வள்ளுவர் அமைச்சரைப்பற்றிக்குறிப்பிடும்பொழுது,

**ஆராய்தலிலும், அதற்குரிய வழிகளை ஆராய்ந்து செய்தலிலும் துணிவாகக் கருத்தைச் சொல்லுதலிலும் வல்லவன்தான் அமைச்சன்**

என்கிறார் (634). மேலும், பேரமைச்சர்கள் ஐம்பொறிகளை அடக்கி நடத்தவும், அரசனுக்குத் தீங்கு விளையாமல் காக்கவும், பகைவருடைய நிலைமையை அறிந்து நடக்கவும் வல்லவர்களாயிருக்கவேண்டும் என்றும் திரிகடுகம் குறிப்பிடுகிறது.

மேற்சொன்னவற்றிலிருந்து அமைச்சன் பகுத்தறிந்து திறமையுடன் செயல்படுகின்றவனாக இருக்கவேண்டும். அவனுடைய திறமையும், செயல்பாடுகளும் அரசனுக்கு நன்மையைத் தரவேண்டும்.

அரசனுக்கு ஆலோசனைகள் சொல்லி, அவனுக்குத் தீங்கு ஏற்படாமல் காப்பது அமைச்சனின் கடமையாகும்.

ஆட்சித் தொழிலில் அரசனுக்கு அடுத்த முதன்மை யுடையவன் அமைச்சன். அரசன், 'மனம்' என்றால், அமைச்சன் அந்த மனத்தின்பகுத்தறிவுத் தத்துவமாக இருக்கின்றான். அரசன் இல்லாத இடைக்காலத்தில் அமைச்சர்களே, அரசுபூண்டு நடத்தியதாக எண்ணற்ற வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. சச்சந்த மன்னன் விசையையுடன் இன்ப வாழ்வில் திளைத்த காலத்தில், அவனது அமைச்சன் கட்டியங்காரன்ஆட்சிப் பொறுப்பினை ஏற்றிருந்ததாக இலக்கிய வழக்கிலும் காண்கிறோம்.

> **அமைச்சருக்குரிய சிறப்பான குணங்களை, "நற்குடிப்பிறப்பு, பேரறிவு, தூய்மை, ஊக்க முடைமை, தலைவன்பால் அன்பு முதலியன உடையாரையே அமைச்சராக அமைத்தல் வேண்டும்** *(கௌடலீயம் பொருணூல், பக்.41-45)*

என்று கௌடலீயம் குறிப்பிடும்.

வினைக்கண் தளராமை, குடிகாக்கும் அருளுடைமை, நீதி நூலறிவு, முயற்சி ஆகிய இவை அமைச்சனின் பண்புகள் ஆகும். போர் வருங்காலத்துப் பகைவர்களுடன் சேர்ந்தாரைப் பிரித்தலும், தம்மோடு சேர்ந்தாரைத் தம்மினின்று பிரியாது பேணிக்கொள஌லும், முன்னர்ப்பிரிந்து சென்றாரையும் மீண்டும் பொருந்திக் கொள்ளலுமாகிய செயல்களில் வல்லோன் ஒரு நல்லமைச்சன். அறமுறையறிந்து வினைசெய்யுந்திறம் உரைப்பவன் அமைச்சன். இயற்கையான நுண்ணறிவும், செயற்கையான நூலறிவும் வாய்ந்த அறிஞனே, அமைச்சனாதற்குத் தகுதியுடையவன். அரசன், தான் கூறியவற்றை ஒதுக்கித் தள்ளும் காலத்தும் மீண்டும் அவ்வரசனுக்கு உறுதி கூறும் ஆண்மையும் அவனுக்கு வேண்டும். வினையாற்றும், முறைகளை அறிந்துரைப்பது எளிது: அம்முறைகளின்படி செயலாற்றும் அருந்திறனும் அமைச்சனுக்கு அமைதல் வேண்டும். அமைச்சன் பற்றியும் அவன் செயல் பற்றியும் ஒரே வரியில் "எல்லாக்காரியங்களையும்" என்று சொல்லி அடக்கி விடுகின்றார் சிறுபஞ்சமூல நூலாசிரியர். மேலும் அவன் செயல்களைப் பகுத்தறியும் வல்லமை பெற்றிருக்க வேண்டும் என்றும் குறிப்பிடுவதிலிருந்து, அமைச்சன் நற்குடிப்பிறப்பு, ஊக்கமுடைமை, தலைவன்பால் அன்பு 'நீதிநூல் அறிவு' முதலியவற்றைப் பெற்றிருக்க வேண்டும் என்பதையும் உய்த்துணரலாம்.

## அரசனால் கருமம் முடித்தற்குத் தேர்வு செய்யப்படும் தகுதிகள்

அரசன் தன்னுடைய வேலைகளையும், நாட்டின் வேலைகளையும் செய்வதற்குத் தேர்வு, செய்யப்படக் கூடியவன் பெற்றிருக்க வேண்டிய தகுதிகள்: "பொருளுடைமை, போகமுடைமை, அஞ்சாமை, அருளுடைமை, அறமுடைமை" - என்னும் ஐந்து குணங்களையும் உடையவனே அரசனால் கருமம் முடித்தற்குத் தேர்ந்தெடுத்துக் கொள்ளப்படும் குணத்தினன் என்று சொல்வதால் அறியலாம். "பொருளுடையவன்" என்று சொல்லப்பட்டதற்குக் காரணம், பொருள் இல்லாதவன் பொருளுக்காக அரசனைக் காட்டிக் கொடுக்கலாம், அல்லது அரசனது பொருளைத் திருடிக்கொள்ளலாம். எனவே அவன் பொருளில் தன்னிறைவு பெற்று இருக்கவேண்டும். எனவே அமைச்சன் பொருளுடையவனாக இருக்கவேண்டும். பலவித இன்பங்களை அடைந்தவனாக இருக்கவேண்டும். மாற்றார்கள் அவனைப் போகத்தினைக்காட்டி மயக்கி விடுதல்கூடும். எனவே, போகத்தை முழுவதும் அனுபவித்து முடித்தவனாக இருக்கவேண்டும். முடிவாகக் கூறினால், அனைத்து உலக நடத்தைகளிலும் பக்குவமடைந்தவனாக இருக்கவேண்டும் என்பதாம்.

அஞ்சாமை அரசன் சொல்லுகின்ற செயல்கள் எவ்வாறு அபாயகரமானதாக இருந்தாலும் அவற்றைச் செய்து முடிக்கின்ற துணிவு இருக்கவேண்டும். எனவே அஞ்சாமை வேண்டப்படுகிறது. அருளுடைமை, ஒருவன் அருள் உள்ளவனாக இருக்க வேண்டும். குடிமக்களுக்குக் கேடுவிளைவிக்கின்றவனாக இருக்கக்கூடாது. இரக்கம் உடையவனாக இருக்கவேண்டும்.

அறமுடைமை என்பது தர்ம நியாயங்களை அறிந்து ஒழுகுதலாகும். அவற்றை அறிந்திருந்தால் மட்டுமே அவனால் அறவழியில் செல்லமுடிமே. எனவே அறம் உடையவனாக இருக்கவேண்டும். மேற்சொன்ன தகுதிகளைப் பெற்றவன் மட்டுமே அரசனால் காரியம் முடிப்பதற்குத் தேர்ந்து எடுக்கப்படுவான் எனச் சிறுபஞ்சமூலம் விளக்கும்.

### முடிவுகள்

1. சிறுபஞ்சமூலம் ஒரு சமயநூல் என்பதால் இதில் காணப்படும் அரசனாவதற்குரிய தகுதிகள் பற்றிய செய்திகள் சமய அடிப்படையில் சொல்லப்பட்டுள்ளன.
2. படைவளம் மிக்கவர்களாக அரசர்கள் இருந்தனர். யானைப் படை சிறந்த படையாகக் கருதப்பட்டது.

3. நாட்டின் பொருளாதாரம் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருந்தது.

4. அமைச்சன் என்பவன் காரியங்களை ஆராய்ந்து செய்யவேண்டும் என்று விரும்பப்பட்டது.

5. பொருள், போகம், அஞ்சாமை, அருளுடைமை, அறமுடைமை என்னும் ஐந்து குணங்களையும் உடையவர்களே அரசனுக்குக் காரியம் ஆற்றுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

6. 'கலைகள் வளர்ச்சியடைகின்றன' என்றால் 'அந்நாட்டில் பசியும், கொடுங்கோன்மையும் இல்லை' என்றே பொருள். வறுமை நிலையிலும், கொடுங்கோன்மையிலும் கலைகள் வளரா. எனவே, 'அக்கால கட்ட அரசியல், மக்களுக்கு ஊறு விளைவிக்காத அரசாகவும், அரசர்கள் கொடுங்கோன்மை அற்றவர்களாகவும் இருந்தனர்' - என்பது இந்நூல் வழியாக நாம் அறிய முடிகிற 'அரசியல் நிலைமைகளாகும்.

# 4. சிறுபஞ்சமூலம் காட்டும் சமயம்

*சமயம்*

மனித இனம் அறிவுத்திறம் பெறத் தொடங்கிய காலத்திலிருந்தே சமயமும் உடன் வளர்ந்து வந்ததாகத் தோன்றுகிறது. “சமயஉணர்வு என்பது பல்வேறு வகைகளில் உலகெங்கும் எக் காலத்தும் காணப்படுவதொன்று” என்று கொள்வதே பொருத்தமாகத் தோன்றுகிறது. மேனாட்டு மொழிகளில் சமயம் என்பதற்கு நேராக வழங்கும் “ரிலிஜியன்’ (Religion) என்ற சொல் இருபொருளில் வழங்கப்பெறுகிறது. ஒன்று குறி சொல்வது. அதாவது இறைவன் திருவுள்ளத்தை அறிவதற்குச் சில நிகழ்ச்சிகளையும், காட்சிகளையும் அடையாளமாகக் கொள்வது என்ற பொருள். மற்றொன்று இறைவனோடு ஒன்றுபடுத்துவது அல்லது மீண்டும் பிணைப்பது என்பதாகும். ‘நெறி’ அல்லது ‘வழி’ என்ற பொருளிலும் சமயங்கள் கருதப்பட்டுவந்துள்ளன. தமிழ் நூல்களிலும் திருநெறி, செந்நெறி என்ற சொல் ஆட்சி உண்டு. பொதுவாகக் பார்க்கும்பொழுது சமயம் என்பது மனிதனுக்கும், மனித நிலைக்கும் மேற்பட்டதாக உள்ள ஆற்றல் அல்லது ஆற்றல்களுக்கும் மேற்பட்டதாக உள்ள தொடர்பு பற்றியதாக எண்ணப்படுகிறது என்பது தெளிவு.

சமயம் என்பதன் பொதுப்படையான கொள்கைகளை, ‘ஹர்பர்ட் பிரபு’ என்பவர்;

1. ‘உயர்வற உயர்ந்த ஒரு பொருள் உண்டு’ என்ற நம்பிக்கை; இப்பொருள் எல்லாவற்றிற்கும் முதற் காரணமாயிருப்பது; வரம்பில்லா ஆற்றல் உடைமை போன்ற பதினோரு பண்புகளை உடையது.
2. இந்தப் பொருளை வழிபடுவது மனிதன் கடமை
3. அறமும், அன்பும் இவ்வழிபாட்டின் முதன்மையான கூறுகள்.
4. இப்பொருளுக்கு எதிராகச் செய்யும் பாவத்திற்கு மனம் வருந்தி, தகுந்த ஈடுசெய்ய வேண்டும்.
5. இவ்வுலகம் அற ஒழுங்கு உட்பட்டதாகையால் மக்கள் தங்கள் செயல்களுக்கேற்ற பலன்களை அடைவர். பொதுவாகச் சமயங்களில் கடவுள் அல்லது கடவுளர் உண்டு என்ற நம்பிக்கை

**காணப்பட்டாலும் இத்தகைய நம்பிக்கையில்லாத கொள்கைகளும் 'சமயம்' என்ற பெயர் தாங்கி நிலவுகின்றன - என உரைப்பர்.**

*(ஜி. ஜான் சாமுவேல், இலக்கிய ஒப்பாய்வுக்களங்கள்*
*ஐந்திணைப் பதிப்பகம், சென்னை-5,*
*இரண்டாம் பதிப்பு, 1984, ப.74.)*

**மதம் என்பது ஆறுபரிமாணங்களைக் கொண்ட ஒன்றாகும். கோட்பாடுகள், ஐதீகங்கள், ஒழுக்க நெறிப் போதனைகள், சடங்குகள், சமூக நிறுவனங்கள், மத அனுபவம் தரும் உந்துதல் அல்லது இயக்கப்பாட்டு உயிர்ப்பு என்பன ஆறு உயிர்ப்புகள் ஆகும்.**

*(டாக்டர் கா. சிவத்தம்பி,*
*தமிழ் இலக்கியத்தில் மதமும், மானுடனும்,*
*தமிழ்ப் புத்தகாலயம், முதல் பதிப்பு 1983, ப.14)*

என்றும்,

**மதம் என்பது மூன்று அத்தியாவசிய அம்சங்களைக் கொண்டது, முதலாவது நம்பிக்கை, இரண்டாவது சடங்குகள், மூன்றாவது இந்தச் சடங்குகளுக்கு அத்தியாவசியமான ஐதீகங்கள்**

என்றும்

**சமயம் எனப்படுவது ஒருவித வாழ்க்கை முறை மெய்ப்பொருளின் உட்பொருளினை உணர்வது (அனுபவம்) ஆகிய இவைதான்**

*(டாக்டர். எஸ். இராதாகிருஷ்ணன்,*
*இந்து தருமமும், வாழ்க்கையும் -*
*தமிழாக்கம், குமாரகோமேதகவேலு, ப.10.)*

என்றும், சமயம் பற்றிய தங்கள் கருத்துக்களைத் தருகின்றனர்.

இவைவழியே சமயம் என்பது நம்பிக்கை, சடங்கு, ஒழுக்கம் உண்மைப் பொருளினை அடைதல், முதலானவற்றை அடிப் படையாகக் கொண்டு அமைகின்ற ஒரு வாழ்க்கைமுறை எனலாம்.

### சங்க காலத்தில் சமயம்

**பண்டைத்தமிழர் சமயம் எதுவென்றால் அது இன்னதுவென்று தெரியாது, அதற்கு ஒரு பெயரைக்குறிப்பிட முடியாது**

*(சாமி சிதம்பரனார்,*
*பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும், ப72)*

என்ற குறிப்பிலிருந்தே, சங்ககாலத்தில் எந்தச் சமயமும் தமிழ்நாட்டில் பின்பற்றப்பட வில்லை என்பது தெளிவாகிறது. சங்ககாலத்தில் சமய நம்பிக்கைகள் தொடர்பாக நாம் சங்க இலக்கியங்களில் காணும் சான்றுகள் மிகக் குறைவு. எனவே அன்றைய மக்களின் அன்றாட வாழ்க்கையில் அவை இடம்பெற்றிருந்ததாகத் தெரியவில்லை.

பொருட்கள்அனைத்தையும், 'முதற்பொருள்', 'கருப்பொருள்' 'உரிப்பொருள்' என மூன்று திறமாகப்பகுத்துப் பேசுவர் தொல்காப்பியர். தமிழகம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்கு வகை நிலங்களால் பகுக்கப்பட்டது. ஒவ்வொரு நிலத்திற்கும், ஒவ்வொரு கடவுளைத் தலைவனாகக் கொண்டு வணங்கினார்கள்.

இதை

**மாயோன் மேயக் காடுறையுலகமும்**
**சேயோன் மேய மைவறையுலகமும்**
**வேந்தன் மேயத் தீம்புனலுலகமும்,**
**வருணன் மேயபெருமணலுலகமும்**

(தொல்காப்பியம்-அகத்திணை நூற்.5)

எனும் தொல்காப்பிய நூற்பாவின் மூலம் அறியலாம். இது சங்ககால மக்களிடம் தெய்வ வழிபாடுகள் இருந்ததைக் காட்டுகிறது. குறிப்பிட்டுக் கூறும்படியான சில தெய்வங்களை மட்டுமே சங்ககால மக்கள் வணங்கியது உண்மை என்ற போதிலும், அக்கடவுளரை 'இந்து சமயத்தின் கடவுள்' என்ற நோக்கில் அவர்கள் வழிபாடு செய்யவில்லை என்பது உறுதியாகிறது.

சங்ககால மக்கள் ஊழில் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

**இந்த ஊழினைத் தொல்காப்பியர் பாலது ஆணை என்ற தொடரால் வழங்குவர்.**

(தொல்காப்பியக் - களவியல் சூத்திரம்)

**தீயை வளர்த்து அவி வழங்கும் முனிவரைப்பற்றிய குறிப்புகள்பல உண்டு. முனிவர் அணையாத தீயைப் பேணி வெண்கோட்டையுடைய யானைகள் கொண்டு வரும் விறகுகளால் வேள்விச் சடங்குகளையும் செய்வார்**

(சாமி, சிதம்பரனார்,
பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும், ப.65)

எனச் சங்க காலச்சமயச் சடங்குமுறைகள்தெரிவிக்கப்பெறுகின்றன. இச் சமயச் சடங்குகள் அனைத்தும் அரசர் அந்தணர் என்ற நால்வகை

வருணப் பிரிவில் அந்தணர்களின் தொழிலாக, வேள்விமுறையாக மட்டுமே கொள்ளப்பெற்றன என்பது குறிக்கத்தக்கது. பொதுமக்கள் வாழ்க்கையில் இவை இரண்டறக் கலக்கவில்லை. சங்க காலத்திற்கு அடுத்த அறநெறிக் காலத்தில்தான் 'சமயம்' என்பது மக்களிடம் ஒரு நிலையான முக்கியமான இடத்தைப் பெற்றது. இதுவும் பிற சமயங்களின் தாக்கத்தால் விளைந்ததேயாம். இவ்விளைவில் பயனால் முகிழ்த்த அறநூல்கள் பதினெட்டனுள் சமண சமயத்தின் தாக்கமுடைய நூல்களே மிகுதி. சிறுபஞ்சமூலமும் சமண நூல் என்று கருதத்தக்க அளவில் கருத்துக்களைக் கொண்டது. இதனை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சிறுபஞ்ச மூலமும் சமயமும் : உண்ணா நோன்பு இருத்தல்

சமண சமயத்தின் முக்கியக் கொள்கைகளன உண்ணா நோன்பிருத்தல், தவத்தைப் போற்றல், கொல்லாமை, பிறன்மனை விழையாமை, கொடையின் பயன் முதலான பலகருத்துக்களையும் சிறுபஞ்ச மூலம் எடுத்தியம்புகின்றது.

## சிறப்பு

மனிதன் ஆசைகளை விடுத்து, உண்ணா நோன்பு மேற் கொள்ள வேண்டும். அவ்வாறு உண்ணாநோன்பை மேற்கொண்டால் நன்மை விளையும் என்றும் (சிறு.52) குற்றம் வந்தவிடத்து மானமுடையவன் உயிர்விடுதலே சாலச்சிறந்தது என்றும், வடக்கு நோக்கியிருந்து நோற்பவருக்கு உணவளித்தல் அரசராகச் செய்யும் (சிறு.75) என்றும் கருத்துக்களைத் தருகின்றது. இக்கருத்துகள், சேரமான் கணைக்கால் இரும்பொறை மானம் கருதி உயிர்துறந்ததைக் காட்டுவதைப்போல் அமைந்திருப்பது நோக்கத்தக்கது.

## கொல்லாமையும் சிறுபஞ்சமூலமும்

'அறநெறிக் கால நூல்கள் அனைத்துமே கொல்லாமையை வற்புறுத்துகின்றன' என்றாலும், சமண இலக்கியங்கள் போன்று மற்றவை வற்புறுத்தவில்லை. மற்ற சைவ, வைணவ சமய இலக்கியங்கள் சமண, பௌத்த மதக்கொள்கைகளையும் நெறிகளையும் தங்கள் மதக் கொள்கைகளாகச் சேர்த்துக் கொள்ளத் தலைப்பட்டன. அதன் விளைவாகப் பிற்கால சைவ, வைணவ இலக்கியங்கள் புலாலை மறுத்துப் பேசுகின்றதை அறியலாம். சிறுபஞ்சமூலம் கொல்லாமையைப் பற்றிப் பதின்மூன்று பாடல்களில் வற்புறுத்தியிருக்கின்றது. 'கொல்லாமை' ஒரு கோர்வைப்படுத்தி இந்நூலில் சொல்லப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உயிர்க்கொலை செய்வது கங்கைக்கரையில் அமர்ந்துள்ள பூனையின் கடைநிலை ஒழுக்கத்திற்குச் சமம் (95) என்று ஆசிரியர் குறிப்பிடுவது, கங்கையானது பாவங்களைப் போக்குகின்ற ஒரு புண்ணிய நதி என்பது இந்துக்களின் நம்பிக்கை. அந்தக் கரைக்குச் செல்லுகிறவர்கள் தங்கள் பாவங்களைப் போக்குவதற்கே செல்ல வேண்டும்.

கங்கையில் இறந்தவர்களின் சடலங்களை அப்படியே மிதக்க விடுவது வழக்கம். அவ்வாறு மிதக்க விடப்படும் சடலங்களில், கரையில் ஒதுங்கும் சடலங்களை, நாய், கழுகு, பூனை போன்ற விலங்குகளும் பறவைகளும் உண்ணும். தானும் சடலங்களை உண்ணுவதற்கே பூனையானது கங்கைக் கரைக்குச் செல்கிறதே தவிர, தன் பாவங்களைப் போக்குவதற்காக அல்ல. உடலை உண்ணச் செல்லும் பூனையின் கடைநிலை ஒழுக்கத்திற்குச் சமமாகவே புலால் உண்ணுகின்றவர்களது செயலும் காட்டப்பெறுவது 'இழிநிலை ஒழுக்கமாகிய கொல்லாமையைச் செய்யாதீர்கள்' என்று வேண்டவேயாம் என்ற உண்மை வெளிப்படுகின்றது.

பிறிதோர் உயிர் அழிய வரும்பொழுது அதற்கு இரங்கும் அருளுடைமை வேண்டும் (சிறு.59) என்ற கருத்து, சிறுபஞ்சமூலத்திலும், எந்த உயிர்க்கும் இரங்கும் பண்பைச் சமண இலக்கியமாகிய சீவகசிந்தாமணியிலும் காணலாம்.

> **அந்தணர்கள் துன்புறுத்திய நாயின் மீது சீவகன் இரக்கம் கொண்டு அதன் செவிகளில் ஐம்பது மந்திரத்தினை ஓதுகின்றான். அதன் உயிர் அந்நாயின் உடம்பை விட்டகன்று ஓடி, வெள்ளிமலை யுச்சியைச் சேர்ந்து அழகொளிரும் தேவனாகிறது. இழிந்த உயிராகிய நாயன் துன்பநிலைக்கு இரங்கி அழுது அதற்கு உயர் பதவி தந்த சீவகனின் ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர் பரையுள்ள அனைத்துயிர்க்கும் இரங்கி உதவி செய்யும் மனப்பான்மை இங்குப் புலனாகிறது**
>
> (ஞானமூர்த்தி, தா.ஏ. சமணம், ப.37)

பொதுவாகச் சமண இலக்கியங்களிலும் பௌத்த இலக்கியங்களிலும் உயிர்களுக்கு இரங்கும் பண்புகள் வற்புறுத்தப் பெறுகின்றன. அந்த வகையில் இந்நூலிலும் எவ்வுயிர்க்கும் இரங்கும் பண்பு பேசப்படுவது குறிப்பிடத்தக்கது.

### உயிர்வதைக்குக் காரணமானவர்கள்

எந்தவொரு செயலும் சிலர் ஆதரவு தந்து கொண்டிருப்பதால்தான் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. அந்தவகையில் ஊனை விலைக்கு விற்பவன் செயலானது, தொடர்ந்து நடைபெறுவதற்குக் காரணம் ஊனை உண்கின்றவர்களே என்பதை;

> தினற்பொருட்டால் கொல்லாத உலகெனின் யாரும்
> விலைப்பொருட்டால் ஊன்றருவா ரில் (திரு.2)

இவ்வாறு சாடுவார் வள்ளுவர். சிறுபஞ்ச மூலமும் கொல்லாமையை அறிவுறுத்தும் வகையில், உயிரைக்கொன்றவன், கொலைக்கு உடன்பட்டவன், கொன்ற ஊனை விலைக்கு வாங்கியவன், அதைச் சமைத்தவன், உண்டவன்' என ஐவரிடத்தும் கொலைக்குற்றமுண்டு (சிறு70) என்று சாடுகிறது.

### கொல்லாமை நன்று

உயிர்க்கொலைக்குக் காரணமானவர்களைக் கூறும் ஆசிரியர், 'கொல்லாமையே நன்று' என்கிறார். கற்றவுன், உயிர்களைக் கொல்லாதிருப்பானாயின் அவனுக்கு ஒரு குறையும் இல்லை, கற்றவனால் மட்டுமே உயிர்களின் துன்பத்தைப் புரிந்துகொள்ள முடியும், கற்றவனே உயிர்க் கொலைக்குக் காரணமாக இருந்தால் பாமரர்கள் செய்யும் உயிர்க் கொலையானது சரியான செயலாகக் கருதப்பட்டு விடும்' என்று கூறுவதன் மூலம், கற்றவர்களை உயிர்க்கொலையிலிருந்துதடுத்து, பாமரர்களுக்கு மூன்றுதாரணமாக நடந்து கொள்ளத்தூண்டுவது உற்று நோக்கத்தக்கது.

இதை,

> அறிவினான் ஆகுவ துண்டோ? பிறிதின்நோய்
> தந்நோய் போல்போற்றாக் கடை

என்ற வள்ளுவரின் வாக்காலும் அறியலாம்.

> 'பிறஉயிர்கள் வருந்தும்படி கொல்லாதிருத்தல் நன்று' (சிறு. 39) என்பதுடன், 'நன்குணர்ந்தோர் ஒரு உயிரையும் கொல்ல மாட்டார்கள்' என்றும் கூறும் ஆசிரியரின் கருத்து, "அகிம்சா பரமோதர்ம" என்பது சமணரின் அடிப்படையான தர்மம். இன்னாசெய்யாமை, அருளுடைமை, கொல்லாமை, புலால் மறுத்தல், ஆகிய இந்நான்கும் ஒன்று சேர்ந்ததே 'அகிம்சை' என்பது. ஓரறிவுயிர் முதலாக

> **ஐயறிவுயிர் ஈறாக, அவை சிறியனவாயிலும், பெரியனவாயிலும், அவற்றைக் கொல்ல மாட்டேன், கொல்லச் சொல்லவும் மாட்டேன், கொல்ல நினைக்கவும் மாட்டேன், மற்றவர் கொல்வதற்கும் மனம் மொழி மெய்களால் உடன்படவும் மாட்டேன் என்று கூறிச் சமண முனிவர் அகிம்சா விரதத்தை மேற்கொள்கின்றார்**
>
> *(ஞானமூர்த்தி, தா.எ. சமணம், ப.17)*

என்கிற கருத்துடன் ஒப்பு நோக்கத்தக்கதாய் உள்ளது.

**கொல்லாமையால் வரும் கேடு**

"கொல்லாமல் இருத்தல் நன்று" என்று குறிப்பிடும் ஆசிரியர், கொல்லாமையால் வரும் நன்மை பற்றிக் கூறும்பொழுது,

> புலால் உண்ணாமல் இருந்தால் அவன் அடுத்த பிறவி எடுக்க மாட்டான் *(சிறு.19)*,
>
> புலால் உண்ணுபவன் பலபிறவிகளை அடைவான், அதன்மூலம் துன்பமே அடையநேரிடும்"

என்று பகுத்துரைக்கின்றார்.

ஊன் புசிக்காமல் இருப்பதால், அவன் உயர் கதியை அடைவான் என்பதன் மூலம், ஒருவனுக்கு இறப்பின் பின்னால் கிடைக்கும் மோட்சத்தையே இங்குக்கொள்ளவேண்டும். ஊன் உண்ணாதவனுக்கு மோட்சம் கிட்டும் என்று சிறுபஞ்சமூலம் குறிப்பிடுகிறது.

> **ஓர் உயிரையும் கொல்லாதவன் பலருக்கும் இறைவனாவான்** *(சிறு. 51)*

என்பதன் மூலம், இறைவன் என்பவன் அனைத்து உயிரிகளிடத்தும் அன்பு செலுத்துகின்றவன். மனப்பக்குவம் உள்ள மனிதனும் பிற உயிர்களைக் கொல்ல மாட்டான் என்று கூறி இரக்கத்தைப்பிற உயிர்களிடத்தே காட்டுவதால் மனிதனையும் இறைவனுக்குச் சமமாகப் போற்றுகிறார். தொடக்கக்காலத்தில் இந்து சமயம் கொல்லாமை கொள்கையைப் பின்பற்றவில்லை. பின்னாளில்தான் பின்பற்றுகிறது. அது சமண சமயத்தின் தாக்குதல் மூலம் உண்டான விளைவாகும்.

> **பண்டைக்காலத்தில் தமிழர், முருகன், கொற்றவை முதலிய தெய்வங்களுக்கு ஆடு கோழி முதலியன வற்றைப் பலியிட்டு வணங்கியதோடு ஊன்**

**உணவையும் உண்டு வந்தனர். இதற்குச் சங்கநூல்களே சான்றாகும். ஆரியரும், இந்திரன், வருணன் முதலான தெய்வங்களுக்குக் குதிரை, ஆடு, மாடு முதலியவற்றைப்பலியிட்டு உண்டு வந்தனர்**

*( மயிலை. சீனி வேங்கடசாமி, சமணமும் தமிழும், ப.28)*

என்பது தெரிகிறது. பார்ப்பனர் புலால் உண்பதில்லை. இவைகள் சமணத்தின் தாக்கத்தால் உண்டான விளைவாகும். அனைத்து மதங்களும் பின்பற்ற விரும்பும் கொல்லாமையைப் பின்பற்று கிறவர்கள் ஒரு குறையும் இல்லாமல் வாழ்வார்கள் என்று காரியாசான் குறிப்பிடுகின்றார்.

கொலை செய்தல், புலால் உண்ணல் போன்றவை நஞ்சு. போல் துன்பம் தரும். கொலைசெய்தல், புலால் உண்ணல் போன்றவைகள் பிற உயிர்களின், அவலத்திலிருந்து மனிதன் பெறும் கொடூரமான இன்பமாகும். அந்த இன்பம் அவனுக்கு அதிகநாள் வாழ்வதில்லை. எனவேதான் கொலைசெய்வதும், ஊன் உணவும் நஞ்சு போல் துன்பத்தினைத் தரும் என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

இந்நூல் சமண சமயத்தின் ஆசிரியரால் இயற்றப் பட்டுள்ளமையால் இதில் கொல்லாமைக் கோட்பாட்டினை அதிகம் வலியுறுத்திப் பேசியுள்ளார். சமணத்தின் தாக்கம் நூல் முழுவதும் விரவி உள்ளது. சமணர்களின் தலையாய அறம் 'கொல்லாமை' என்பதால், அது மிகவும் வற்புறுத்திப் பேசப்பட்டுள்ளது.

### பிறனில் விழையாமை

தமிழர்களின் தொன்மையான நூலாகக் கருதப்படும் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் முதலானவற்றில் 'பிறன்மனை விழையாமை' குறித்து எந்தக் குறிப்புமில்லை. மாறாக, 'ஆண்கள் பல பெண்களுடன் தொடர்பு வைத்திருந்தனர்' என்பதைத் தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களும் பரத்தையர் பிரிவு என்ற வகைமையில் விளக்குகின்றன, என்றாலும் அதற்கு மறுதலையாகப் 'பிறன்மனை நயத்தல்' என்பது தொடர்பான செய்திகள் சங்க இலக்கியத்தில் காணப்படாமை வியக்கத்தக்கது.

தமிழ் இலக்கியங்களில் வடமொழியாளரின் தாக்கம் அதிகமான பின்னரே 'பிறன்மனை நயத்தல்' கண்டிக்கப்படுகிறது. அதுவும் அறநெறி இலக்கியங்களில்தான் இந்தக் கண்டனத்தைக் காணமுடிகிறது.

**இல்லறத்தில் ஒழுகும் சமணர் ஒவ்வொருவரும் கீழ்க்காணும் பத்துவிரதங்களை (ஒழுக்கங்களை)**

**கடைப்பிடித்துத் தவறாமல் ஒழுகவேண்டும்' என்று கூறுகிறது.**

1. கொல்லாமை
2. பொய்யாமை
3. களவு செய்யாமை
4. பிறன்மனைவிரும்பாமை
5. பொருள்வரைதல்

**இவை ஐந்தும் அணுவிரதம் என்று கூறப்படும்.**

*(மயிலை சீனி வேங்கடசாமி, சமணமும் தமிழும், பக்.28-29)*

குடும்பத்தின் தோற்றம் பற்றி ஆராய்ந்துரைக்கும் சமூகவியலார் "ஒருமணமுறை தோன்றுவதற்கு முன்னர்ப் பலதார மணமுறையும்,பலகணவ முறையும் வழக்கத்திலிருந்தன" என்றாலும் 'தொல்பழங்காலத்தில் வரன் முறையற்ற உறவு இருந்திருக்கலாம்' என்பதற்கு நேர்முகச் சான்றுகள் எதுவுமில்லை. ஆனால்மனித இனத்தில் இன்றும் காணப்படுமசில உடறலுறவு, வழக்கங்களும் அநாகரீக நிலையில் வாழும் ஒரு சில பழங்குடி மக்களின்உடலுறவுப் பழக்கங்களும் 'ஒரு காலத்தில் வரன்முறையற்ற உடலுறவு இருந்திருக்க வேண்டும்' என்பதை உய்த்துணரவைக்கின்றன.

**தன் மனைவியை, வந்த சிவனடியார்க்கு வழங்கிய நிகழ்ச்சியை இயற்பகை நாயனார் வரலாற்றின் மூலம் பெரியபுராணம் காட்டுவதுபோல் மத்திய இந்தியாவில் வாழும் கோ போன்ற பழங்குடி மக்களிடம் இன்றும் இந்தப் பழக்கம் இருக்கிறது.**

*(தாயம்மாள் அறவாணன், உறவு முறைகள், ப.21)*

மேற்கண்ட சான்றுகள் வரன்முறையற்ற உறவு, 'மனித இனத்திடையே இருந்தது' என்பதைக் காட்டும் பிற்கால எச்சங்கள் ஆகும். வரன்முறையற்ற காட்டுமிராண்டிகளிடம் இருந்து குழுமண முறை உருவாயிற்று. ஒருகுழு ஆடவர் பிறிதொரு குழுபெண் கூட்டத்தை அப்படியே மணந்துகொண்டு ஒரு குழுவிலுள்ள ஆண் அல்லது பெண் மணந்துகொண்ட மற்ற குழுவிலுள்ள எந்த ஆடவருடனும் உறவாடலாம். இந்தக் குழுமணம் இருந்ததற்கான நேர்ச்சான்று எதுவுமில்லை. எனினும் ஆஸ்திரேலியாவில் வாழும் தயரி (Thairi), பிரேஸிலில் வாழும் கைகான், சைபீரியாவில் வாழும் சுக்சி ஆகிய பழங்குடிகளிடம் குழுமணமுறை காணப்படுகிறது.

சமணர்கள் பிறன்மனை விழையாமையினை ஒரு நோன்பாகக் கொண்டு விளங்கினர். இந்தத் தாக்கம் அவர்களது இலக்கியங்களிலும் காணப்படுகிறது. வள்ளுவரும் தன்னுடைய திருக்குறளில் சமண சமயக் கருத்துக்களைப் பின்பற்றியுள்ளது தெரிகிறது என்றபோதிலும், 'பிறன்மனை நயத்தலை' வெறுத்துச் சொல்லியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வாறே **சிறுபஞ்சமூலத்தின்** ஆசிரியர் ஒரு சமணர். எனவே அவர்தம் மதத்தின் முக்கிய விரதங்களில் ஒன்றாகிய 'பிறன்மனை நயவாமை'யினை, இந்நூலில் மூன்று இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

அ) பிறன்மனை நயத்தல் வேண்டாம் (சிறு.6) 'பிறன்மனை நயத்தல் வேண்டாம்' என்று சுட்டுவதன் மூலம், பிறன்மனை விரும்பாமை நன்று' என்கிற சமணர்களின் கொள்கையினை வற்புறுத்துகின்றது.

இதற்குக் காரணம் வடநாட்டில், அதுவும் குறிப்பாக 'அரசர் மனைவியைக் கவர்ந்து வருவது தவறல்ல' என்ற ஒரு கொள்கையைக் கொண்டிருந்தனர். இந்தப் 'பிறன்மனை நயத்தல் வேண்டாம்' என்னும் பண்பாட்டால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் அரசர்களே என்பதை இலக்கியங்கள் வாயிலாக உணரலாம். இராமாயணத்தில், இராமன், வாலி, வானரங்களின் கோ சுக்கிரீவன் முதலானவர்கள் பிறன்மனை நயத்தலால் பாதிக்கப்பட்டவர்கள். எனவே, மேற்கண்ட வற்றிலிருந்தும் அமிதமதி, காமசூத்திரம் ஆகிய இலக்கியங்கள் வாயிலாகவும் அரசகுலம் பாதிக்கப்பட்டதை நம்மால் உணர முடிகிறது. இதன் விளைவாகவே இலக்கியங்களில் பிறன்மனை நயத்தல் கண்டிக்கப்பட்டுள்ளதாக இருக்கிறது.

ஆ) "பிறன்மனையாளைப் பகைபோலச் சாராமல் இருப்பது நன்று" (சிறு.42)-என்பதால், பிறரது மனைவியைப் பகைபோல் சாராமல் இருக்கவேண்டும். அறநெறிக்காலச் சமுதாயத்தில் பிறரது மனைவியை நினைப்பது பெரும் குற்றமாக இருந்தது. தொடக்கக் காலச் சமுதாயத்தில் இது உணரப்படவில்லை.

> **ஒருவன் தன் மனைவியை, பொலிகாளை என்று சொல்லக்கூடுமே, அப்படிப்பட்டவனுக்கு (அவன் ஒரு பிரஜ்ஜையாக இல்லாவிட்டாலும் கூட) தருவது முறை என்றே கருதப்பட்டது**
>
> (பி. எங்கெல்ஸ், ப.101, குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்)

இவ்வாறு தொடக்கக் காலச் சமுதாயத்தில் பழகிவிட்ட ஒரு பழக்கத்தைக் கூடாது என்று சொல்லும் பொழுது அது சிறிது சிறிதாகத்தான் குறையவேண்டும். எனவே தான் சிறுபஞ்சமூலம் 'பிறன்மனை வேண்டேல்' என்றும் 'பிறர்மனையாளை பகைபோல் சாராமல் இருக்கவேண்டும்' என்றும் குறிப்பிடுகின்றது.

இ) பிறன்மனை நோக்காதவர் மேலோர் (52:3). பிறன் மனையாளை விரும்பாமல் இருக்கிறவர்கள் மேலோராகக் கருதப்படுகின்றனர். 'பிறன்மனை நயத்தல்' என்பது அக்காலச் சமுதாயத்தில் பெரும்பான்மை மக்களிடம் இருந்திருக்கவேண்டும். இல்லையெனில் அக்கால இலக்கியங்கள் இதற்கு முக்கியத்துவம் கொடுத்து வற்புறுத்தவேண்டிய தேவை இருந்திருக்காது. எனவேதான் பிறரில் செல்லாதவரை மேலோராகக் கருதியிருக்கவேண்டும். பிறர் மனைவியை விரும்புகின்றவர்களுக்கு இந்திய அரசியலில் தொடக்கக் காலம் தொட்டு இன்று வரை தண்டனைக்கான சட்டமில்லை.

> **அயோனியர்களிடையே- மனைவி சோரம் போவது தடை செய்யப்பட்டது, கடுமையாகத் தண்டிக்கப்பட்டது, இருந்தாலும் அடக்க முடியாது**
>
> (எங்கெல்ஸ், பி., குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம், ப.102)

என்று, 'பிறனில் விழையாமை' பற்றிச் சொல்லப்படுகின்றது.

பிறனில் விழைகின்றவனைப் பயமுறுத்த அயோனிகள் நாய்களை வளர்த்தனர். பிறன் மனைவியைக் கூடுகின்றவர்களுக்குப் பயங்காட்டுவதற்காக மேலோசியக்கடி நாய்கள் வைக்கப்பட்டிருந்தன. எனவே பிறனில் விழைகின்றமை அங்குத் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்பட்டது. இங்கு அத்தகைய தண்டனை முறைகள் இருந்ததாகத் தெரியவில்லை. தண்டனை போன்ற பயமுறுத்தல்கள் இல்லாமல் ஒரு தவறை செய்யாமல் இருக்கின்ற காரணத்தால் இவர்கள் மேலோராக கருதப்படுகின்றனர் என்பதே பொருந்தும்.

**தவம்**

சிறுபஞ்சமூலம் தவத்தை மிகுதியாக வற்புறுத்துகிறது. தவம்செய்வதால் ஏற்படுகின்ற நன்மைகள், செய்யாமல் விடுவதால் உண்டாகும் கேடுகள் முதலியன வலியுறுத்தப்பெறுகின்றன. தவம் செய்யாதவரைப் பழித்தும் பேசுகின்றது. தவத்தின் மேன்மைகள் இருபத்துமூன்று பாடல்களில் அமைக்கப்பெறுகின்றன.

### தவத்தால் நன்மை

'தவம் செய்வதால் பிறவி ஒழிகின்றது. வீடுபேறு கிடைக்கிறது. தவம் செய்கின்றவன் இறைவனாக மதிக்கப்பெற்றான். மக்களுள் சிறந்தவனாகக் கருதப்பட்டான்' என்று தவத்தால் அடையும் நன்மை பற்றிச் சிறுபஞ்சமூலம் கூறுகிறது. 'தவத்தால் பிறவி ஒழியும்' என்ற கருத்து திரும்பத் திரும்ப வலியுறுத்தப்படுகிறது. அக்காலச் சமுதாயத்தில் மறுபிறப்பு தொடர்பான நம்பிக்கை நிலவி யிருந்திருக்க வேண்டும். மறுபிறப்பே தற்போதுள்ள பிறப்பைவிடத் துன்பம் தரக் கூடியது என்றும் அவர்கள் கருதியிருக்க வேண்டும். தவம் பற்றிய செய்திகளை,

1. தவம் செய்வதால் பிறவி ஒழிகின்றது (சிறு.6)
2. தவத்தால் வீடுபேறு உண்டாகும் (சிறு. 36)
3. ஐம்புலன்களையும் அடக்குபவன் பிறப்பொழிப்பவனாவான்
4. கொல்லாமை, கொலைசெய்யாமை, பிறரை வெகுளாமை, எழுத்தினது கல்லாமை, தீது, பிறர்பழிக்காதவாறு ஒழுகுதல், போன்ற குணங்களைக் கொண்டவன் பலருக்கும் இறைவனாவான் (சிறு.51)
5. சமய நூல்களை அறிந்தவன் மக்களுள் சிறந்தவனாவான் (சிறு. 86)

எனும் ஐந்து பிரிவுகளுள் அடக்கலாம்.

எனவே, 'நீங்கள்தவம் செய்தால் உங்களுக்கு மறுபிறப்பு இல்லை' என்று ஆசிரியர் கூறுவதாகக் கொள்ளலாம், 'தவத்தால் மறுபிறப்பு ஒழிவது மட்டுமல்ல, வீடுபேறும் கிடைக்கும்' என்று அவர்களுக்குத் தவத்தின் மீது ஒரு விருப்பத்தை உண்டாக்கியிருத்தல் வேண்டும்.

> **மிகுதியாகத்தவஞ் செய்வதைத் தீது என்று சொல்பவர்களையாம் இன்று வரைக் காணவில்லை**
>
> (சிறு.61)

என்று கூறுவதன் மூலம், தவம் செய்வதை மிகப் புனிதமாகக் கருதினார்கள் என்று தெரியவருகின்றது. அத்தவமும் எந்த அளவு மேற்கொள்ளப்பட்டதோ அந்த அளவு சிறந்ததாகக் கருதப்பட்டது.

ஒருவன் ஏதேனும் ஒரு தவத்தை மேற்கொள்ளவேண்டும் (சிறு92) என்று வற்புறுத்துகிறது. தவம் மேற்கொள்வது சமயத்தைத்

தொடர்ந்து பின்பற்றுவதற்கு ஒருவழிமுறையாகக் கொண்டனர். அவர்கள் தவத்தினைச் செய்யாமல் விட்டுவிட்டால் அவர்களுக்குத் தங்களுடைய சமயத்தின் மீதுள்ள பற்று குறைந்துவிடும். பின்னர் அவர்கள் வேறு சமயத்திற்கு மாறிவிடக்கூடும் என்று கருதியே ஒவ்வொரு சமயமும் தவத்தினை வற்புறுத்தியிருக்கக்கூடும்.

தவத்திற்கென்று தனி அதிகாரமே படைத்திருக்கும் வள்ளுவரும்,

***தன்னுயிர் தான்அறப் பெற்றானை ஏனைய***
***மன்னுயி ரெல்லாம் தொழும்*** *(268)*

என்ற குறள் மூலம், 'தவ வலிமையால்', 'தன்னுடைய உயிர்தான்' என்னும் பற்று நீங்கப் பெற்றவனை மற்ற உயிர்கள் எல்லாம் வணங்கும்' என்று தவத்தின் சிறப்பை எடுத்துரைக்கின்றார்.

சிறுபஞ்சமூலத்தின் 57ஆம் பாடலும் 'நன்று!' 'கொலை தீது', 'கல்லாமை தீது', 'பிறரை வெகுண்டுரைத்தல் தீது' 'பழிபடவாழ்தல் தீது' - என்பதை அறிந்து அதன்வழி ஒழுகுபவன் பலருக்கும் இறைவனாவான் என்ற பொருள்படப் பாடப்பட்டுள்ளது. மேற்கூறிய இரண்டு நூல்களும் தவத்தை மேற்கொள்கின்றவர்களுக்கு ஏற்படும் நன்மையை ஒரேவிதமான முறையில் சொல்வது உற்றுநோக்கத் தக்கது.

மேலும், தவம் செய்வதனால் கிடைக்கக்கூடிய ஆற்றலைப் பற்றிக் கூறும் வள்ளுவர் தனது 269ஆம் குறளின் மூலம், தவம் செய்வதால் பெறத்தக்க ஆற்றலைப் பெற்றவருக்கு யமனை வெல்லுதல் கைகூடுமென்று சற்றுமிகைப்படுத்திக் கூறியிருப்பது, தவத்தின் மேன்மையை விளக்குவதாக உள்ளது.

தவவாழ்க்கையை அறநெறிக்கால நூல்கள் அனைத்தும் பெருமையாகப் பேசுவது எண்ணத்தக்கது. இதற்குக் காரணம், அக்கால சமுதாய மக்களின் வாழ்க்கையில் சமயம் பெற்றிருந்த செல்வாக்கு இதன் மூலம் என்பது புலனாகிறது.

உலகில் ஏனைய தொழில் புரியும் அனைவருக்கும் உள்ளது போலவே, தவமுடையாருக்கும் சில இலக்கணங்கள் வகுக்கப்பட்டுள்ளதை இங்கே காணலாம்.

***சிறுபஞ்சமூல ஆசிரியர்***

"கடவுள் நூல் உணர்ந்தவன் தவமுடையான் (சிறு.8) என்று கூறுகிறார். இங்குக் 'கடவுள் நூல்' என்பது 'சமண சமய நூல்கள்'

என்றே கொள்ளவேண்டும். காரணம், 'கடவுள்நூல்' என்பதற்கு ஆசிரியர் விளக்கம் தரவில்லை. மேலும், ஆசிரியர் கடவுள் வாழ்த்துப் பாடலில் அருகனையே கடவுளாகக் குறிப்பிடுகின்றார். எனவே ஆசிரியர் குறிப்பிடும் அந்த அருகன் பற்றிய நூலை அறிந்தவனே 'தவமுடையான்' என்பது அவருடைய கூற்றாக இருக்கிறது.

மேலும், வள்ளுவர் கூற்றிற்கொப்ப, 'பிறிதோர் உயிர்க்குத் துன்பம் செய்யாமை', பிறரால் வரும் துன்பத்தை மறப்பது, கோபம் கொள்ளாமை' முதலிய பண்புகளைக் கொண்டவன் செய்யும் தவம் இனிமை உடையது (திரு.347) என்பதையே ஆசிரியர் வலியுறுத்திக் கோபம் கொள்ளாமை என்னும் ஒரு குணத்தையும் சேர்த்துக் கொள்கிறார்.

நாலடியார் பொறுமை, இரக்கம், துன்பத்தை எதிர்க்கும் துணிவு, ஐம்புலன்களையும் அடக்கியிருத்தல் ஆகிய குணத்தைப் பெற்றவனே 'தவசி' என்று குறிப்பிடுகின்றது. மேலும் 'இளமையிலேயே தவ வாழ்க்கையை மேற்கொள்வது நல்லது' என்றும் தவத்தை வற்புறுத்திப் பேசுகின்றது.

திரிகடுகம் எல்லா உயிரும் சமம், 'படுந்துன்பம் அற்றலும், நடு நிலைமையோடு இருத்தல் மூன்றும் தவசிகளுக்குரிய குணங்கள் ஆகும்' என்று கூறுகின்றது. நான்மணிக்கடிகை, தூய்மையாய் இருப்பது, வாய்மையாயிருப்பது, தீமையை நினையாமலும், சொல்லாமலும் இருப்பது என்று தவமுடையவன் செயல் பற்றிப் பேசுகிறது.

பொதுவாகத் தவம் என்பதற்குச் சொல்லப்படும் விளக்கங் களாவன :

1. ஆசையைத் துறந்து, 'உண்ணா நோன்பு' மேற்கொள்ள வேண்டும்.
2. பிற உயிர்களுக்கு துன்பம் தராதிருத்தல், பிறரால் வரும் துன்பத்தை மறத்தல், கோபம் கொள்ளாமை முதலிய பண்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. கடவுள் நூல் உணர்ந்து ஒழுகுதல்.
4. ஐம்புலன்களையும் அடக்கி ஆளுதல்.
5. சமய நூல்களை உணர்ந்திருத்தல் வேண்டும் எனும் பண்புகளைக் கொண்டவர் தவசி என்று சிறுபஞ்சநூல் வழி அறியமுடிகின்றது. மேற்சொன்ன பண்புகளையே அறநெறிக்

கால நூல்கள் அனைத்தும் ஒட்டுமொத்தமாகக் கூறுவதி லிருந்து, அவை மக்களிடம் தொடர்ந்து வற்புறுத்தப்பட்டு வந்துள்ளமை பெறப்படும்.

## தவமின்மையால் வரும் கேடு

துறவு மனப்பான்மை இல்லாதவர் பாரம் இழுத்துச்செல்லும் எருதோடு ஒப்பர் (24) என்று கூறி, தவமனப்பான்மை இல்லாதவனை விலங்கோடு வைத்து மதிக்கின்றது. அவனை மனிதனாக ஏற்றுக் கொள்ளாமல், 'இந்தப் பிறவியானது ஒழியவேண்டுமென்றால், தவம் செய்ய வேண்டும் (6) என்று கூறுவதின் எதிர்மறைப்பொருள், தவம் செய்யவில்லை என்றால் பிறவி ஒழியாது என்பதேயாம்.

'தவம் செய்கின்றவர் ஒருநாட்டில் இல்லை என்றால், அந்நாட்டில் மழை பொய்த்து விடும்' (48) என்றும் 'தவப்பண்பு இல்லாதவர்களிடம் காமம் வந்து நிற்கும்' (30) என்றும் நான்மணிக் கடிகை கூறுகிறது.

துன்பத்தைத்தரும் தவம் என்று விட்டவன் அரியத்தக்கவன் (78) என்று குறிப்பிடுகிறது திரிகடுகம். தவம் செய்யாதவன் அழிந்து விடுவான் என்று கூறுவதிலிருந்து இந்நூல் தவத்தினை வற்புறுத்துவது தெளிவாகிறது. தவம் செய்வதால் இத்தகைய நன்மையை அடையலாம். எனவே தவம் செய் என்று கூறுகின்றன அறநெறிக்கால நூல்கள்.

சமணம், பௌத்தம் முதலிய மதங்கள் தங்கள் மதங்களைப் பின்பற்றுகின்றவர்கள் தொடர்ந்து பின்பற்ற வேண்டும் என்று எதிர்நோக்குகின்றது. அதனால்தான் சமயத்தையும், தவத்தினையும் பாதியில் விடக்கூடாது என்றும் அவ்வாறு விட்டுவிடும் தன்மை உடையவர்களை அரியத்தக்கவர் என்றும், எருது என்றும் சாடுகின்றது. இதுபோன்ற செயல்களைச் சமணம், பௌத்தம் மட்டுமல்லாமல் ஏனைய பிற சமயங்களும் கையாண்டிருக்கின்றன.

> **ஒவ்வொரு சமய மெய்யறிஞரும், தம்முடைய குறிக்கோளில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ளார் என்பதையும், அவருடைய இலட்சிய தரிசன அனுபவங்களும் அவர் மக்களுடைய தேவைகளை நிறைவுசெய்கின்றன என்பதையும் முகம்மது நபி ஏற்றுக்கொண்டார்**
>
> (டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன், பேருரைகள், க. திரவியம், ப.485)

என்பதும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

ஒவ்வொரு சமயம் சார்ந்த இலக்கியமும், தங்களுடைய மதத்தினைப் பின்பற்றுமாறும், அதனைப் பின்பற்றினால் இன்ன நன்மை கிடைக்கும் என்றும், பின்பற்றாவிட்டால் இத்தகைய தீமை விளையும் என்றும் சொல்வது ஒரு மரபாகிவிட்டது. இக்கருத்தையே சிறுபஞ்சமூலமும் உறுதி செய்வது நோக்கத்தக்கது.

**சிறுபஞ்சமூலத்தில் பிற சமயங்களின்நிலை**

சிறுபஞ்சமூலம் சமய இலக்கியமாக இருந்தாலும் இதில் பிற சமயங்கள் பழிக்கப்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மாறாகப் பிற சமயக் கருத்துக்கள், பிற சமயம் தொடர்பான செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**பூ ணொடுக்கம்**
**பொன்வரைக்கோங் கேர் முலைப் பூந்திருவே யாயினும்**
***(சிறு. 45 : 2 : 3)***

தாமரை மலரில் இருக்கின்ற திருமகளே ஆனாலும், அன்பு, அடக்கம், சுற்றம் தழுவுதல் முதலிய குணங்களைக் கொண்டு விளங்கவேண்டும் என்பது வைணவக் கடவுளாகிய திருமகள் பற்றிய செய்தியாகக் காணப்படுகிறது.

**போர்த்து முரிந்திட்டும் பூசியும் நீட்டிய**
**மோர்த்தொரு பான்மறைத் துண்பான். . . .**
***(சிறு. 67 : 1 : 2)***

ஆடைபோர்த்தும் அதனைக் களைந்திட்டும், நீறுபூசியும், சடை வளர்த்தும் உடம்பின் ஒரு பாகத்தை மறைத்தும் தவவேடம் பூணுகிறவர்கள் உலகத்தவர்கள் பழியைப் பொறுத்துக் கொள்ளவேண்டும். இல்லையேல் இல்லறமே கொள்ளுதல் வேண்டும். நீறுபூசிக்கொள்ளுதல், சடை வளர்த்தல், தவம் செய்தல் முதலிய சைவர்களுக்குரிய செய்தியைக் கூறுவதால் இது சைவம் பற்றிய குறிப்பாகக் காணப்படுகிறது.

(அ.இ.) **நன்றி தனி கலை நாட்டற் பெரும் போக** (சிறு. 63: 3)

ஒருவனுக்குச் சிறந்த அறமாகக் கோவில் கட்டுதலையும், அலைகளில் மரங்கள் நடுதலும் சொல்லப்படுகிறது. கோவில் என்பது சைவ, வைணவக் கோவில்களையே குறிக்கும். சைவமும், வைணவமும் உயர்த்தியே பேசப்பட்டிருக்கின்றன. இது, சைவ, வைணவ, சமண சமயப்போர்கள் இந்நூலில் தோன்றிய காலத்திற்குப் பின்னர்தான் நடைபெற்று இருக்கவேண்டும் என்பதை உணர்த்துகிறது.

இதனை,

> **சிறுபஞ்சமூலத்தின் காலமாகக் கி.பி. 6ஆம் நூற்றாண்டு எனக் கொள்ளலாம்**

என்று திருவேங்கடபதி தன்னுடைய 'பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் ஒரு ஆய்வு' என்னும் ஆய்வேட்டில் குறிப்பிட்டுள்ளமையும் - தமிழகத்தில் அதற்குப் பின்பே சமயச் சண்டைகளும் போர்களும் உருவாயிற்று எனக்

> **கி.பி. 7, 8, 9ஆம் நூற்றாண்டுகளில் சமயப்போர் தமிழ் நாட்டில் மும்முரமாக நடைபெற்றது**

(வேங்கடபதி, சி.
பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், ஒரு ஆய்வு, ப.286)

என்பார் கருத்தும் அரண்செய்யும்.

இந்நூலின் காலம் கி.பி. 6ஆம் நூற்றாண்டு எனக்கொண்டால், சங்ககாலம் கி.பி. 3ஆம் நூற்றாண்டில் இருந்து 6ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தைக் களப்பிரர் ஆண்டனர். அந்தக் கால வரலாறுகள் தெளிவாகத் தெரியவில்லை, என்றாலும், நாட்டில் அரசர்களுள் போர்கள் நிகழ்ந்தன என்பது தெரிகிறது. அக்காலச் சமயங்களில் ஒன்றுக்கொன்று சண்டையிட்டதற்கான குறிப்புகள் காணப்பட வில்லை. சங்ககாலத்தில் சைவம் வைணவம் என்ற பாகுபாடுகளுடன் சமயங்கள் விளங்கவில்லை. கி.பி. ஏழாம் நூற்றண்டுக்குப் பின்னரே சமயங்கள் சைவம், வைணவம் என்ற பாகுபாடுகளுடன் பிரிந்து காணப்படுகின்றன. சிறுபஞ்ச மூலம் தோன்றிய காலத்தில் நாட்டில் சமயச் சண்டைகள், சமயக் காழ்ப்புகள் காணப்படவில்லை என்றே கொள்ள வேண்டும்.

## முடிவுகள்

1. சமயம் சமுதாயத்தில் மெல்ல மெல்லக் காலூன்றத் தொடங்கிய நிலை காட்டப் பெறுகின்றது.
2. ஒவ்வொரு மனிதனும் ஏதேனும் ஒரு சமயத்தைச் சார்ந்தே இயங்க வேண்டிய நிலைக்கு ஆட்பட்டான்.
3. சங்க காலத்தை அடுத்த அறநெறிக் காலத்தில்தான் மக்கள் சமயத்தை நாடத் தொடங்கினார்கள். அதற்கு முக்கியக் காரணம், தங்களின் துன்பங்களுக்கு மதங்கள் புகலிடம் அளிக்கும் என்று நம்பினார்கள்.

4. உயிர்களைப் பலியிடுவதன் மூலம் பெறப்போவது துன்பமே என்பதனை அறிந்த மக்கள் உயிர்களை மிகுதியான அளவு பலியிடுவதை வெறுத்தனர்.

5. சமண, பௌத்த மதங்கள் இக்கொல்லாமைக் கோட்பாட்டைத் தங்கள் மதங்களின் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொண்டன.

6. பிறன்மனை நயத்தல் பற்றிப் பண்டைத்தமிழர் இலக்கியங்களாகிய சங்க இலக்கியங்களில் எந்தக் குறிப்பும் இல்லை.

7. பிறன்மனை நயத்தல் பற்றி முதன் முதலில் பேசுவது அறநெறிக்கால நூல்களே.

8. சிறுபஞ்சமூலம் தவம் செய்கின்றவர்களைப் போற்றியும், அது இல்லாதவர்களைப் பழித்தும் பேசுகிறது.

9. தவம், ஈகை, விரதம் போன்றவைகள் வற்புறுத்திப் பேசப்படுகின்றன.

10. சமணம் தன் பிரசாரத்தைக் கி.பி. 3ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே தமிழகத்தில் தீவிரப்படுத்தியது. அதன் விளைவாகப் பௌத்தமும் தன் பங்கிற்கு மதப்பிரச்சாரத்தில் ஈடுபட்டது. மதப்பிரச்சாரம் நாளடைவில் உட்பூசலாக உருவெடுத்து, பின்னாளில் அதுபெரிய சண்டையாகவும் ஒன்றை ஒன்று அழித்துக்கொள்ளும் அளவிற்கும் வந்தது குறிப்பிடத்தக்கது.

# நிறைவுரை

## சிறுபஞ்சமூலத்தை ஆய்ந்துரைத்தவற்றால் கிடைத்த அரிய/ புதிய செய்திகள்

1. இந்நூலின் காலம் கி.பி. 6ஆம் நூற்றாண்டு எனக் கொள்ளலாம்.

2. சமுதாயம் ஆணாதிக்கச் சமுதாயமாக விளங்கியது.

3. பெண்கள், சமுதாயத்தின் பொது அமைப்புகளில் பங்கு பெற அனுமதிக்கப் படவில்லை.

4. நான்கு வகைச் சாதிகளுடன் அடிமைகளும் இருந்தனர்.

5. சமயக் கல்வியே அக்காலக் கல்விமுறையாக விளங்கியது.

6. நாட்டின் பொருளாதாரம் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருந்தது.

7. சமயம் சமுதாயத்தில் மெல்ல மெல்லக் காலூன்றத் தொடங்கிய நிலை காட்டப் பெறுகின்றது.

8. சமுதாயத்தில் ஒவ்வொரு மனிதனும் ஏதேனும் ஒரு சமயத்தைச் சார்ந்தே இயங்க வேண்டிய நிலைக்கு ஆட்பட்டான்.

9. சங்க காலத்தை அடுத்த அறநெறிக் காலத்தில்தான், மக்கள் சமயத்தை நாடத்தொடங்கினார்கள். அதற்கு முக்கியக் காரணம் தங்களின் துன்பங்களுக்கு மதங்கள் புகலிடம் அளிக்கும் என்று நம்பினார்கள்.

10. சமண, பௌத்தர்கள் கொல்லாமைக் கோட்பாட்டைத் தங்கள் மதங்களின் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொண்டனர்.

11. நம் பண்பாட்டிலும், இலக்கியங்களிலும் ஏற்பட்ட வடநாட்டாரின் தாக்குரவு அறநூல்கள் பிறன்மனை நயத்தலின் கேட்டினை மிகுதியாகப் பேசுதற்குக் காரணமாகும்.

# பின்னிணைப்பு - 1

# சிறுபஞ்சமூலமும் நீதிசதகமும் - ஓர் ஒப்பீடு

### சிறுபஞ்சமூலமும் நீதிசதகமும்

சிறுபஞ்சமூலத்தின் காலம் கி.பி. 6ஆம் நூற்றாண்டு என்று கணிக்கப்பட்டுள்ளது. அதே போன்று வடமொழியில் பத்ருஹரி எழுதிய நீதிசதகத்தின் காலம் கி.பி. 6இலிருந்து 7க்குள் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இவ்விரு நூல்களும் சமகால நூல்களாக இருப்பதாலும், இரண்டும் நீதிக்கருத்துக்களைச் செல்லுவதாலும் ஒப்பாய்வு செய்ய எடுத்துக்கொள்ளப்படுகின்றன. சிறுபஞ்சமூலத்திலுள்ள நீதிக்கருத்துக்களும், நீதிசதகத்திலுள்ள நீதிக் கருத்துக்களும் ஒப்பீடு செய்யப்படுகின்றன.

### பத்ருஹரியின் நீதிசதகம்

நீதிசதகத்தின் நூலாசிரியர் பத்ருஹரி என்பவராவார். இவர் கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து ஏழாம் நூற்றாண்டிற்குள் வாழ்ந்தவர் என்று கணக்கிடப்படுகிறது. இவர், நீதிசதகம், வைராக்கிய சதகம், சிருங்காரசதகம் என்ற மூன்று நீதிநூல்களை இயற்றியுள்ளார். ஒவ்வொன்றிலும் நூறு பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அவருடைய வாழ்க்கையைப் பற்றி ஒன்றும் அறிந்துகொள்ள முடியவில்லை. அவருடைய பாடல்கள் ஒவ்வொன்றும் தனித்துநின்று ஒவ்வொரு கருத்தைத் தெளிவுறுத்தும் இயல்புடையதாக உள்ளன. காதல், துறவு மற்றும் அரசியல் போன்ற எப்பொருள் பற்றிப் பாடப்பட்டாலும் அவை நேர்த்திமிகு முழுவடிவம் பெற்றுத் திகழ்கின்றன.

> **வடமொழியில் கருத்துக்களை இவ்வளவு செறிவாக வேறு யாரும் எடுத்துரைக்கவில்லை** (திருநாவுக்கரசு, க.த, **திருக்குறள் ஒரு நீதி இலக்கியம்**, ப. 309).

என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

### நீதிசதகம்

நீதிகளை விளக்கும் நூறு பாடல்களைக் கொண்ட நூலை 'நீதிசதகம்' என்று கூறுவர். இந்நூலில் பத்து அதிகாரங்கள்

இருக்கின்றன. ஒவ்வொர் அதிகாரத்திலும் பத்துப்பாடல்கள் உள்ளன. மூர்க்கரைப் பற்றிக் கூறும்பொழுது,

**சுறாப்பல் வரிசையிற் கவரலாம் முத்தம்;**
**இராப்பகல் கதறும் இமிழ் கடற்றிரைமேல்**
**உராய்நடந் தேகிக் கடக்கலாம் கடலை;**
**அச்சுற்றெனத் தலை புனையலாம் சினவரா;**
**பிடித்ததே பிடியாய்ப் புகல் செய்யும் மூர்க்கரை**
**இடித்துக் காட்டிய மெய்யுணர்த்தல் எளிதல்ல**
*(நீதி. 1:4)*

என்று இடித்துரைத்துக் கூறி, மூர்க்கரைத் திருத்த இயலாது என்பதையும் மிக அழகாகக் கூறுகின்றார்.

மேலும் புலமையின் சிறப்பைப் புலவராகிய பத்ருஹரி பின்வருமாறு போற்றுகின்றார்.

**பொருட்களைச் சித்திரம் புலவோர் தமக்கு**
**அருட்பிற வெற்றி யமைந்திட என்றும்**
**நல்லிசை யுருவாய் நிறைந்தவர் உடற்கு**
**இல்லையே மூப்புச் சாக்காட் டச்சம்** *(நீதி. 2: 21)*

'புலவர்களுக்கு என்றும் மூப்பு, இறப்பு, அச்சம் முதலியவை இல்லை' என்னும் உண்மையினை எடுத்துரைத்துப் புலவர்களைப் புகழ்ந்து கூறுகிறார்.

அடுத்து அவர் பொருளின் மாட்சியைப் பத்துப் பாடல்களில் அறிவுறுத்துகிறார். அவற்றுள் பொருளின் பயனைப் பற்றிக் கூறும் செய்யுள் பொருள் சிறப்பு மிக்கதாகும்.

**செல்வஞ் செலற்கு மூன்றே வழியுள**
**நல்வழி யளித்தல் நுகர லளித்தலே;**
**கொடையும் நுகர்வும் கைகூடா விடில்**
**அடுதலாங் கடைவிழி யதையே யடையும்** *(நீதி. 3:35)*

பொருளுக்கு அதாவது நிகழ்ச்சியால் தானம், போகம், அழிவு என்ற மூன்று நிலையுண்டு. தானமானது 'தக்கார்க்கு ஈதல்', போகமாவது 'உண்டுடுத்துப் பூசி முடித்துத் துய்த்தல்', அழிவென்பது 'அறத்திற்கு உதவாமலும், அனுபவத்திற்கு உதவாமலும் போதல்' என்று குறிப்பிடுகின்றார்.

**பத்ருஹரியின் கவித்திறன்**

நீதிநூல் ஆசிரியராகிய பத்ருஹரியின் **நீதிசதகம், வைராக்கிய சதகம்** மற்றும் சிருங்காரச்சதகம் வடமொழி நீதி

இலக்கியத் துறையில் தலைசிறந்த படைப்புகளாகப் போற்றப் பெறுகின்றன. சிறப்பாக '**நீதிசதகம்**' கவித்திறனும், கற்பனை வளமும் உடைய இலக்கியமாகத் திகழ்கிறது. அதில் கருத்துச் செறிவும், கலை நயமும் சரிசமமான நிலையில் கலந்து காணப்பெறுவதால், கற்பனைச் சிறப்பும், கருத்தாழமும், நடையழகும் வாய்ந்த இலக்கியமாக இலங்கு கிறது. அதில் அழகிய சொற்படிமங்களும், ஆழ்ந்த பொருளை உணர்த்தும் அணிகளும் கற்பவர் உள்ளத்தைக் கவரும் வகையில் கவினுற்று விளங்குகின்றன. இவ்வாசிரியருடைய நடையில் எளிமையும், இனிமையும், தெளிவும், ஒலிநயமும், இசைச் சிறப்பும் இணைந்துள்ளன.

**வைராக்கிய சதகத்தில்** உலக வாழ்க்கையின் நிலையின்மையும், சிறப்பின்மையும் நன்கு விளக்கப்பெற்றன. அதன்மூலம் மனிதனை ஆன்மிக விடுதலையைப் பெற முயலுமாறு ஆசிரியர் அறிவுறுத்துகிறார். **நீதிசதகத்திலும், வைராக்கிய சதகத்திலும்** உணர்ச்சித் துடிப்புமிக்க வாழ்க்கையும், உலகத் துன்பங்களிலும், ஆரவாரங்களிலிருந்தும் விலகி நிற்கும் துறவு வாழ்க்கையும் இடம்பெற்றுள்ளன. இவ்விரு வாழ்க்கை இயல்புகளையும் பத்ருஹரி சிறந்த கவிதைகளின் மூலம் சித்திரித்துக் காட்டுகிறார்.

சமஸ்கிருத மொழியில் தன்னுணர்ச்சிப் பாடல்களைப் பாடிய கவிஞர்களுள், பத்ருஹரி நீதிநூல் ஆசிரியராகவும், மெய்ப்பொருள் காணும் வேட்கையுடைய மனிதராகவும் சிறப்புற்று விளங்குகிறார். அவர் கவிதைக் கலையின் மூலம் மக்களுக்கு இன்பம் நல்க முயன்றதைப் போன்றே, மனித வாழ்க்கை மாண்புற்று இலங்குவதற்குத் தேவையான கருத்துக்களைக் கற்பிக்கும் கலைஞராகவும் காட்சி தருகிறார்.

> **உலகின் மயக்கத்தில் சிக்கியமையால் நான்**
> **மங்கையர் இன்பத்தை நாடி அவர்களிடத்திற்குத்**
> **திரும்பிச் சென்றேன். இப்பொழுது புலனுகர்**
> **இன்பத்தில் முழுநிறைவைப் பெற்றுவிட்டமையால்**
> **நான் துறவுக் கோலம் பூணுகின்றேன்**

என்று தம்மைப் பற்றி அவர் கூறியுள்ள கருத்துகள் அவருடைய மனநிலைமையும், கலையுணர்வையும் தெளிவுறுத்துகின்றன.

பத்ருஹரியின் நீதிசதகத்தில் உள்ள பத்து அதிகாரங்களில் 1. மூர்க்கர் பத்ததி, 2. வித்வத்பத்ததி (கல்வி), 3. மான செளர்ய பத்ததி (வீரம்), 4. அர்த்த பத்ததி (பொருள்), 5. துர்ச்சவ பத்ததி (தீயோர்),

6. ஸீஜணபத்ததி (நல்லோர்) என்ற ஆறு தலைப்புகளில் உள்ள பாடல்கள் மட்டும் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

**மூர்க்கர்** எனப்படுவர் கீழ்மக்கள், அற்பர், மூர்க்கன், ஈனன், மட்டி, மூடர் என்ற சொற்களால் குறிக்கப்படுகிறார்கள். அவை கடலையும் தாண்டலாம், காட்டு முயற்கொம்பையும் கொண்டு வரலாம். ஆனால் 'நல்லொழுக்கம் இல்லாத மூடனைச் சீராக்க முடியாது' என்று இச்சதகம் மூர்க்கரைப் பற்றிக் கூறுகின்றது.

**கல்வி** ஒன்றே உலகில் அழியாச் செல்வம். அதுவே மக்களுக்கு ஆபரணமும் பொருளும், குருவும் சுற்றமும் இறைவனுமாகும். இக் கல்வியைக் கற்றவர்களே சத்தியமா ஞானியர்போல் புகழுடம்போடு என்றும் அறியாமல் பல்லூழி வாழ்வார்கள். இது முக்காலும் உண்மை என்ற கருத்தினை இந்நூல் உரைக்கின்றது.

**வீரச்** சிங்கம் பசித்தாலும் மதயானையைத் தின்ன நினைக்குமே அன்றி உலர் வைக்கோலைத் தீனியென யெண்ணி உண்ணாது. 'இவ்வுலகில் வீரமுள்ளவர் எதற்கும் அஞ்சார். வல்லமைக்கு வயது முதலானவை இல்லை' என்ற கருத்தினை இந்நூலில் காணலாம்.

**பொருள்** நீதிவழியில் செல்வத்தைச் சேர்க்க வேண்டும். அதை நல்வழியில் வழங்கவேண்டும். உலிகில் பணம் உள்ளவனே குலவசிட்டன், புலவன், கலைஞானி, நீதிமான், சுபாபதி என்று புகழப்படுவான். பணம் என்றிருந்தால் மேற்கூறிய குணம் இல்லானையும் இருப்பவனாகவே எண்ணுவார்கள்.

**தீயோர்** கலகஞ்செய்தல், பெரியோரைப் பகைத்தல், சுற்றம் வெறுத்தல், பிறன்மனை புகுதல் ஆகிய இவைகளெல்லாம் தீயோர் குணங்களாகும்.

**நல்லோர்** அருங்குணங்களை உடைய நல்லோர்களே உலகின் வணக்கத்திற்குரியவர்கள். நற்குணங்களெல்லாம் நல்லோருக்கும் இயற்கையாக இருக்குமேயன்றி வேறொருவரால் வருவதன்று. எனவே 'நல்லோர்களை உலகில் துதியாதவர்களும், மதியாதவர்களும் இல்லை' என்ற கருத்தினை இந்நூல் உரைக்கின்றது.

**பத்ருஹரியும் காரியாசனும்**

இவ்விருவரும் மனிதகுல மேம்பாட்டிற்குரிய நல்ல கருத்துகளைத் தங்கள் நூலில் கூறியுள்ளனர். சிறுபஞ்சமூல ஆசிரியர் நான்கடிகளில் ஐந்து, ஐந்து கருத்துகளை ஒவ்வொரு பாடலிலும் கூறிச் செல்கின்றார்.

பத்ருஹரியின் நீதிசதகத்தின் ஒவ்வொரு பாடலும் தனித்து நின்று, ஒரேயொரு கருத்தைத் தெளிவுறுத்துகின்றன. பத்ருஹரியும் மூடர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். காரியாசனும் மூடர்களைப் பற்றிப் பேசுகின்றார். ஆனால் பத்ருஹரி 'மூடர்களைத் திருத்த முடியாது' என்று மட்டும் குறிப்பிடுகிறார். ஆனால் சிறுபஞ்சமூலம் 'இன்ன தப்பு செய்கின்றவனுக்கு இன்ன தண்டனை' என்று குறிப்பிட்டு அதன் மூலம் மூடர்களுக்குரிய தண்டனை பற்றியும் எடுத்தியம்புகிறது.

> **மணலைப் பிசைந்து நெய்யெடுக்கலாம். கொடிய நீர் வேட்கையைக் கானல் நீர்க்காட்சியால் தணித்து விடலாம் மிகவும் கஷ்டப்பட்டு முயற்கொம்பைக் கூட ஒருவன் கொண்டுவந்துவிடலாம். 'தான் சொல்வதுதான் சரி என்று செப்புகிறவனைத் திருத்துவது மிகவும் கடினம்** *(நீதிசதகம். 5)*

என்று பத்ருஹரி குறிப்பிடுகின்றார்.

கொலை செய்தல், புலால் உண்ணுதல், எதிர் அல்லானை வெல்லுதல், ஆராய்ந்து ஒருவனை வினைமேற் செலுத்தாது காலம் நீடித்தாலும் இளைய சுற்றத்தாரை ஆராயாமல் தீங்கு சொல்லுதலும் ஆகிய இவ்வைந்தும் 'நஞ்சு போல் துன்பம்தரும்' என்று காரியாசான் குறிப்பிடுகின்றார்.

பத்ருஹரி மூர்க்கர்களைப் பற்றிப் பத்துப் பாடல்களில் தொகுத்துச் சொல்லி வகைப்படுத்திவிடுகின்றார். காரியாசான் நூல் முழுவதும் ஆங்காங்கே சொல்லிச் செல்லுகின்றார்.

நாய் பற்றி இரண்டு கவிஞர்களும் கூறியுள்ளனர். அவர்கள் இரண்டு பேரும் நாயைப் பழித்துக் கூறியுள்ளனர்.

> **கீழ்மக்கள் கொடுக்கும் உணவாவது குரைத்து வரும் நாய் வாயில் கொடுத்த தசைக்கு நிகராகும்** *(சிறு. 17)*

என்று சிறுபஞ்சமூல ஆசிரியரும்,

> **கீழ்மக்கள் கொடுக்கும் துர்நாற்றம் கொண்ட எலும்பைக் கீழானதொரு நாய் பரந்துண்ணும்** *(நீதி. 9)*

என்று பத்ருஹரியும் கூறுகின்றனர்.

இவ்விரு நூல்களின் ஆசிரியர்களும் நாயைப் பற்றி மிகவும் தாழ்வாகக் குறிப்பிடுவதிலிருந்து, தமிழ், வடமொழியின் மூலமும் நாய் ஒரு கீழ்த்தரமான விலங்காக மதிக்கப்பட்ட செய்தி பெறப்படுகிறது.

**ஒவ்வொரு நோய்க்கும் மருந்துள்ளது உலகில், ஆனால் மடமையை அகற்ற மருந்து இல்லை** (நீதி. 11)

**மக்களின் வினைகளைத் தீர்க்கும் சிறுபஞ்சமூலம் மனத்தில் இருத்துங்கள்** (2)

என்று குறிப்பிடுகின்ற சிறுபஞ்சமூல ஆசிரியரும்,

**மக்களின் செயல்பாட்டிற்கு முடிவு இல்லை. தீயவர்கள் தீயவர்களாகவேதான் இருப்பார்கள். அவர்களைத் திருத்த முடியாது. திருத்த நினைப்பதும் வீண்வேலை**

என்று பத்ருஹரியும் குறிப்பிடுகின்றனர். ஆனால் 'மக்களின் தீய செயலுக்கு நல்ல வழிகாட்ட முடியும்' என்று ஒரு நம்பிக்கை உணர்வை ஏற்படுத்துகிறது. 'தீமை செய்தால் இன்ன தண்டனை கிடைக்கும்' என்று தண்டனையையும் சொல்லி, தீயவழிகளில் செல்லாமல் தடுக்கின்ற, ஆனால், 'எல்லாம் விதிப்படித்தான் நடக்கும்' என்ற நம்பிக்கையின்மை பத்ருஹரியின் பாடல்களில் தெரிகிறது.

**கல்வி**

**நூல்பல கற்பவன், சொல்லாலும், செயலாலும், அறிவாலும் அரசனாகப் போற்றப்படுவான்** (நீதி. 12)

**கல்வி கற்றவன் அரசனாகப் போற்றப்படுவான்**

என்று கல்வியால் வரும் மேன்மையைப் பற்றிப் பத்ருஹரி குறிப்பிடுகின்றார். அதேபோன்று காரியாசானும்

**கல்வி கற்றவன் தேவனாக மதிக்கப்படுவான்** (சிறு. 20)

என்று குறிப்பிடுகின்றார். இவ்விருவரும் கல்வியின் சிறப்பைப் போற்றுகின்றனர். கல்வியுடைமை மிக முக்கியமான ஒன்றாகச் சமுதாயத்தில் கருதப்பட்டு வந்துள்ளதை இதன் மூலம் அறியலாம்.

**ஒற்றுமைகள்**

| | நீதி சதகம் | சிறுபஞ்சமூலம் |
|---|---|---|
| | கல்வி | |
| 1. | கல்வி கற்றவனுக்கு மூப்பு, சாக்காடு, அச்சம் முதலியவை இல்லை (21) | கல்வி கற்றவன் தேவனாக மதிக்கப்படுவான் (சிறு. 20) |
| 2. | உயர்வுள்ள பல உண்மைகளை உணரக்கேட்பவன் புலவன் (14) | பல நூல்களையும் பொருளுணரக் கேட்பவன் புலவன் (33) |

| | நீதி சதகம் | சிறுபஞ்சமூலம் |
|---|---|---|

## பொருள்

| | | |
|---|---|---|
| 3. | நண்பர்களுக்கு உதவுதல் வேண்டும் (90) | பொருளுள்ளவன் நண்பனுக்குக் கொடுத்து உதவ வேண்டும். |
| 4. | உலகத்தவர்களுக்குக் கொடுத்தால் அது இறவாப் புகழைத் தரும் | தன்னிடம் உள்ள பொருளைக் காவாது பிறருக்கும் ஈவான் நீண்ட நாள் உயிர் வாழ்வான் (79) |
| 5. | இசையைக் கற்றவன் சிறந்த பொருளை உடையவனாவான் (33) | பாடவல்லவன் அரசனால் பொன்னைப்பெறுவான் (56) |
| 6. | தன்னிடம் தஞ்சம் புகுந்தவர்களுக்கு உதவ வேண்டும் (40) | வறியவர்களுக்குக் கொடுப்பவன் தேவர்களால் துதிக்கப்படுவான் (82) |
| 7. | பொன்னுடையவனே பெருங்குடிப் புகழ் பெறுவான் (33) | பொருள் உள்ளவனுக்கு இன்பம் பெருகும். |

## ஒழுக்கம்

| | | |
|---|---|---|
| 8. | கீழ்மக்களின் சுட்டு, துயரைக் கொடுக்கும் (49) | தீக்குணத்தாரது நட்பை விடுங்கள் (26) |
| 9. | பிறர் மனைவியை விரும்புதல் கயவர் இயற்கை. | பிறன் மனைவியை அறிவுடையோர் விரும்ப மாட்டார்கள் (42) |
| 10. | வாய்திறந்து பேசாதவனை முட்டாள் என்பார்கள். வாய்பேசுகின்றவனை வாயாடி என்பர். அணுகி பழகுகின்றவர்களை அகந்தை உடையவர் என்பர். பொறுமையில்லாதவனைப் பிறப்பைச் சொல்லி இகழ்வார்கள் (46) | நல்ல குணம் இல்லாதவர்கள் முன்பு கோபம் நல்லது, சால்பு தீது, மிக்கவலி செய்தல் தீது. (17) |

## நல்லோர்

| | | |
|---|---|---|
| 11. | உயிர்க்கொலையைத் தவிர்த்தல்- பொருளை விரும்பாமை, உண்மையே பேசுதல், பெரியோர்களை மதித்து நடத்தல், பல உயிர்களுக்கு இரங்குதல் வேண்டும் (55) | எல்லா உயிர்களும் வருந்தக் கொல்லாதிருத்தல் நன்று (39) |
| 12. | நல்லோர்கள் கடுஞ்சொல் பேசாதவர்கள் நல்லோரை வணங்குவர் (61) | கற்று உணர்ந்தவர்கள் தீச்சொற்களைக் கூறுதல் கூடாது (97) |
| 13. | விருந்தினரை வரவேற்று உபசரித்தல், செருக்கில்லாமல் நடந்துகொள்ளுதல் நல்லோர் செயலாகும் (58) | இல்வாழ்க்கைத் துணைவியின் சிறப்பு, சுற்றம் தழுவுதல், விருந்தோம்பலும் ஆகும் (43) |

| | நீதி சதகம் | சிறுபஞ்சமூலம் |
|---|---|---|
| 14. | தாய், தந்தையர்களை மதித்து நடக்க வேண்டும் (60) | மகன் தந்தை சொல்வழி நடக்க வேண்டும். (15) |
| | **மூர்க்கர்** | |
| 15. | நண்பர்களுக்கு உதவுதல் வேண்டும் (நிதி. 90) | பொருளுள்ளவன் நண்பனுக்குக் கொடுத்து உதவ வேண்டும். |

### வேற்றுமைகள்

| | நீதி சதகம் | சிறுபஞ்சமூலம் |
|---|---|---|
| 1. | ஒவ்வொரு நோய்க்கும் மருந்து உள்ளது இவ்வுலகில், ஆனால் மடமையை அகற்ற மருந்து இல்லை | மக்கள் அறியாமையைப் போக்கச் **சிறுபஞ்சமூலம்** என்னும் இந்நூலைச் சொல்லி உள்ளேன் (பாயிரம் 2) |
| 2. | மக்களிடத்தில் உள்ள தீமைகள் மட்டும் சுட்டிச் சொல்லப் படுகின்றன | ஒவ்வொருவர் செய்யும் தீமை களுக்கும் தண்டனைகள் சொல்லப்படுகின்றன. |
| 3. | கல்லாதவன் கடியப்படவில்லை | கடியப்படுகின்றான். |
| 4. | ஆசிரியர் மாணவன் முதலியவர் களுக்குரிய இலக்கணம் சொல்லப் படவில்லை. | சொல்லப்படுகின்றது. |
| 5. | பிறர் பொருளை விரும்பாமை பற்றிச் சொல்லப்படவில்லை. | சொல்லப்படுகின்றது. |
| 6. | ஒளியை வணங்குகின்றார் | அருகனை வணங்குகின்றார் |
| 7. | மகன், தாய், தந்தையர்க்குக் கட்டுப் பட்டு நடக்கவேண்டும் | மகன் தந்தை சொல்லைக் கேட்டு நடக்க வேண்டும். |

நீதி சதகமும், சிறுபஞ்சமூலமும் பெரும்பாலான பாடல்களின் கருத்துகளில் ஒற்றுமையுடன் காணப்படுகின்றன. சில கருத்துகள் இடம், சமுதாய அமைப்பு, மொழி பழக்கவழக்கங்கள் முதலிய அமைப்புகளின் காரணமாக வேறுபட்டுக் காணப்பட்ட பொழுதும் மிகுதியும் ஒற்றுமையுடன் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

'மூடர்கள் இவர்கள்', 'கல்வியாளர்கள் இவர்கள்' என்று சுட்டுவதுடன் நின்றுவிடுகின்றார். கல்வியின் சிறப்பையும் பயன்பாட்டையும் கூறும் நீதிசதகம், கல்வியின்மையால் வரும் இடர்ப்பாடுகளைப் பற்றியும், கல்வியில்லாதவர் நிலை பற்றியும்

சொல்லவில்லை. பொருளின் தேவையை மட்டுமே சொல்கின்றவர், 'அது இல்லை' என்றால் ஏற்படும் நிலையைச் சுட்டவில்லை.

சிறுபஞ்சமூலம் 'கல்வி கற்க வேண்டும். அது இல்லை என்றால் நீ விலங்கிற்குச் சமம்', 'கல்வியில்லாதவன் எருதிற்குச் சமம்' என்று இடித்துரைத்துக் கல்வியை வற்புறுத்துகின்றது. பொருளில்லாதவன், 'தன்னை வள்ளல் என்று சொல்லிக்கொள்ளக் கூடாது' என்றும் 'பொருள் இல்லாதவன் இல்வாழ்க்கை நடத்தமுடியாது' என்றும் கூறுவதன் மூலம் பொருளைத் தேட வலியுறுத்துகிறார். இதனை, 'தானே முயன்று ஈட்டிய பொருளினால் ஒருவனுக்கு இன்பம் உண்டாகும்' (சிறு. 39) என்ற வரிகள் உணர்த்துகின்றன.

தீயசெயல்கள் நன்மையைத் தரா. தீய செயலால் உனக்கு இந்த வகையில் துன்பம் உண்டாகும். எனவே தீயசெயல்களைச் செய்யாதே என்று அறிவுறுத்துகின்ற பாங்கினைச் சிறுபஞ்சமூலத்தில் காணமுடிகின்றது. இரண்டு ஆசிரியர்களின் கருத்து - கல்வியை வேண்டுவதிலும் பொருளின் தேவையைச் சொல்லுவதிலும், தீயோர், நல்லோர் பற்றிக் குறிப்பிடும் கருத்துகளிலும் பெரிதும் ஒத்துக் காணப்படுகிறது. சற்றேறக்குறைய ஒரே காலகட்ட சிந்தனைகளாகிய இவ்விரு கவிஞர்களும் தாங்கள் சொல்லும் கருத்தளவில் ஒன்றுபடு கின்றனர் என்பது இவ்விரு இலக்கியங்களின் ஒப்பாய்வு மூலம் தெரிய வருகிறது.

## முடிவு

நீதி இலக்கியம் என்பது மனிதனை மனிதனாக வாழச் செய்வதற்கும், மனிதன் சிறப்புற்று விளங்குவதற்கும் வழிகாட்டும் அறநெறிக் கருத்துக்களை எடுத்துரைப்பதாகும். நீதி இலக்கியம் படைப்போர் தங்கள் உள்ளத்திற்குக் கூறுகின்ற முறையில் அறநெறிக் கருத்துகளை அறிவுறுத்துகின்றனர். அவர்கள் அறிவுறுத்துவதையும் வழிகாட்டுவதையும் தங்கள் கடமையாகக் கொண்டவர்கள். தாம் உணர்ந்தவற்றையே வாழ்க்கைச் சூழல்களுக்கேற்ப அறிந்து போற்றுமாறு கலையுணர்வோடு கலந்து அவர்கள் தருகின்றனர். 'சிறந்த கவிஞர்கள் நீதிநூல் ஆசிரியராகவும் பண்டை உலகில் சிறப்புற்று விளங்கினர்' என்பதை உலக இலக்கிய வரலாறு நமக்கு அறிவிக்கின்றது. அவர்கள் மிகச் சிறந்த அறநெறிக் கருத்துகளை எடுத்துரைக்கின்றபொழுது இலக்கியத்தின் சிறப்பியல்புகளும், கலையழகும் குன்றாத வகையில் சொல்லிச் செல்கின்றனர். எனவே கவித்திறனும், நீதிக்கருத்தும் ஒருங்கே பொருந்திவராது என்பது

பொருத்தமில்லை. பத்ருஹரியின் நீதிசதகம், கவித்திறனையும், நீதிக் கருத்தையும் கொண்டு சிறப்புடன் திகழ்கின்றது. எனவே இவ்விரு நூல்களும், நீதிக் கருத்துகளையும், சிறந்த கவிதை நயத்தையும் கொண்டு விளங்குகின்றன.

சில இடங்களில் மாறுபாடு இருப்பினும், பெரும்பான்மையான கருத்துகளில் இரண்டு கவிஞர்களும் ஒன்றுபட்டுக் காணப்படு கின்றனர். (கால அளவிலும், செய்யும் எண்ணிக்கையாலும், மற்றும் கருத்துகளாலும் நீதிசதகமும், சிறுபஞ்சமூலமும் ஒற்றுமையுடன் காணப்படுவது குறிப்பிடத்தக்கது).

# பொருளடைவு


அமைச்சனானவன் எல்லாக் காரியங்களையும் பகுத்தறிபவனாவான் 58: 4

அரம்போலத் தன்னைத் தேய்க்கும் கிளை உண்டாயின் கவலை உண்டாகும் 62: 1

அரசன் செங்கோலுக்கு அழகு நடுநிலைமை தவறாமை 7: 3

அரசன் கோல்வழி வாழ்தல் குடிகள் குணம் 15: 4

அரசனால் மேலோராகக் கருதப்பட்ட சான்றோர்கள், இறந்தபின் போற்றப்படுவர். 96: 3

அரசனுக்கு அழகு குடிகள் புகழ்தல் 9: 4

அரிய தவத்தைச் செய்தவன் போற்றப்படுவான் 96: 1

அருள் உள்ளவன் பழியையும், தீ வினையும், புறங் கூறுதலையும் செய்யான் 3: 3.4

அருள் உள்ளவனுக்கு அறம் விளையும் 3: 1,2

அவாவையொழித்து உண்ணாது நோற்றல் நன்மை 52: 1

அழிந்த மனையாளைக் காத்தல் நன்று 72: 3

அறவழி நடப்பான் தீமையான வழிகளில் செல்லான் 28: 1

அறிஞர் கொடிய புலி திரியும் காட்டிற்குச் செல்லார் 80: 4

அறிஞர் பாம்புப் புற்றின்மீது ஏறார் 80: 1

அறிஞர் பொதுமகளை மணக்க மாட்டார் 80: 1

அறிஞர் யானையில் இடப்பக்கம் செல்லார் 80: 2

அறிஞர்களுக்கு இயல்பாகவே அறிவுச் சுடர் விடும் 22: 4

அறிவற்ற இல்லாள் அழலையும் செவ்வெறும்பையும் ஒப்பாள்

அறிவில்லாத மகனால் கவலை உண்டாகும் 62: 2

அறிவில்லாதவனுக்கு எடுத்துக்கூறினாலும் அறிவு தோன்றாது 23: 4

அறிவுடையார் சிலரோடு பழகிய பின்பு அவரை எதிர்த்துக் கொல்லார் 38: 4

அறிவுடையார் நண்பரில்லா வீட்டில் தங்க மாட்டார் 38: 1

அறிவுடையார் நட்புக் கொண்ட பின்னர் அவர்களது கீழ்மைக் குணத்தை ஆராயார் 38: 4

அறிவுடையார் மறந்தும் பிறரது பொருளைக் கவரமாட்டார் 38: 2

அறிவுடையார் பெரியோர் முன் பகைமை பேசமாட்டார் 85: 2

அறிவுடையார் பெரியோர் முன் உரக்கச் சிரிக்கமாட்டார் 85: 1

அறிவுடையார் பெரியோர் முன் நண்பருக்காகப் பரிந்து பேசமாட்டார் 85: 1

அறிவுடையார் பெரியோர் முன் இரகசியம் பேசமாட்டார் 85: 1

அறிவுடையார் வேலைக்காரி சமைத்த உணவை உண்ணமாட்டார் 38: 1

அறிவுடையார்க்குப் பிறர் சினந்து தீது செய்தல் அருமை 69: 4

ஆசிரியரை வணங்குதல், ஓதுதல், கேட்டல் முதலியவை மாணாக்கனின் கடமை 30: 3

ஆசிரியனுக்கு அன்பு செய்து வழிபடுவோர் மாணாக்கராவர் 29: 2

ஆராய்ச்சிக்கு அழகு உட்பொருளைத் துணிந்து சொல்லுதல் 9: 2

ஆராய்ந்து தெளிந்து ஒருவனை வினைமேற்செலுத்தக் காலம் தாழ்த்தல் துன்பம் தரும் 13: 3

ஆன்றோர் அறிவுரைகளுக்கு மாறுபடுதல் கூடாது 95: 3

இசைக்கு அழகு கேட்பவர் நன்று என்று சொல்லல் 9: 3

இரவலர்க்கு ஈதலால் மலைபோல் பயனுண்டாகும் 65

இல்லக்கிழத்திகளின் காவலுக்கு தகுதியுடையவரை நியமித்தல் 40: 1

இல்லாள் அறிவில்லாதவளாயின், அழலையும் செவ்வெறும்பையும் ஒப்பாள் 72: 1

இளமையில் துறவு மேற்கொள்ள வேண்டும் 24

இளைய சுற்றத்தாரை ஆராயாமல் தீங்கு செய்தல் துன்பத்தைத் தரும் 13: 4

இளையாள் தவஞ்செய்வது தக்கது 91: 1

இளவயதினராயினும் அறிவுடையார் மூத்தவரோடு ஒப்பர் 22: 2

இறந்தவர்க்கு நன்மை வேண்டி உண்ணாது நோற்பவர் சிறப்புறுவர் 71: 1

ஈகை நன்று 94: 1

ஈயாமை தீது 94: 1

ஈயாமை நன்றெனவும், ஈதல் தீதெனவும் கூறுவார் இல் 61

உண்டோ, இல்லையோ என்று ஐயப்படும் பிச்சை 64: 1

உண்பொருள் இல்லாதவன் ஈகை பயனற்றது 12: 2

உயர்குடிப்பிறந்தவன் தனக்கு உதவி செய்தவன் கேடு செய்தாலும் சொல்லமாட்டான் 10: 4

உயிர்க்கொலை புரிதல் கூடாது 95: 3

உயிர்களைக் கொன்று உண்பவனுடைய நாக்கு அற்று விழும் 10: 1

உயிர்போகும் தன்மையுடையவர்க்கு உதவுபவர் மகிழ்ந்துவாழ்வர் 78: 1

உலகவர் பேசும் பழிகளைப் பொறுமையுடன் ஏற்பவர் துறவறம் கொள்க 67

உலகவர் பேசும் பழிகளைப் பொறுமையுடன் ஏற்காதவர் இல்லறம் கொள்க 67

உழவோன் நிலத்தைப் பயன்படுத்தி உழுதலைச் செய்பவன் 60

உள்ளம் தூய்மையாக அறிவின் வழி நடக்க வேண்டும் 6: 2, 3

உள்ளொன்று வைத்துப் புறத்தே தவக்கோலம் பூண்டிருத்தல் தீது 19: 4

ஊனுண்ணாதவன் மறுபிறப்பு எடுக்க மாட்டான் 19: 4

எடுத்த நோன்பை முடிக்காமை தீய பயனைத்தரும் 14: 4

எல்லாக் காரியங்களையும் பகுத்தறிபவன் அமைச்சன் 58: 4

எல்லாம் கற்றவர் எவருமிலர் 27

எல்லாவற்றையும் அறிந்தவன் இவ்வுலகிலில்லை 31: 1

எல்லாவற்றையும் உணர்ந்தவன் தலைவனாவான் 8: 2

எளியோரை இகழ்தல் தீது 52: 2

எளியோரை வையாதவன் மறுபிறப்பு எடுக்க மாட்டான் 19: 3

ஏதுமறியாதவன் இவ்வுலகில்லை 31: 2

ஐம்புலன்களை அடக்குபவர்க்குப் பிறவிப்பயன் நீங்கும் 69: 3

ஒரு நாள்விட்டு ஒரு நாள் உணவு உண்போர்க்கு உணவு அளித்தல் சிறப்பு 71: 2

ஒரு பிடியுள் அடங்கும் பிச்சை 64: 1

ஒருவனுக்கு அறிவு மனத்தினளவினதாக அமையும் 81: 4

ஒருவனுக்கு இரக்க மனத்தால் வீடு பேறு உண்டாகும் 90: 4

ஒருவனுக்கு இன்சொலாற் சுற்றம் உண்டாகும் 90: 1

ஒருவனுக்குப் பழியும், புகழும் அவன் சேர்ந்த இனத்தினால் உண்டாகும் 81: 3

ஒருவனுடைய நாவிற்கு வசைமொழி நஞ்சாகும் 11: 4

ஒருவனுக்கு மென்சொலாற் பெருமையும், இரக்கமும் உண்டாகும் 90: 3

ஒருவனுக்கு வன்சொலாற் பகைமை உண்டாகும் 90: 3

ஒருயிரைக் கொல்லாமை நன்று 51: 1

ஒருயிரையும் கொல்லாது இருப்பானுக்கு எந்தக் குறையுமில்லை 83: 4

கடவுள் நூல் உணர்ந்து ஒழுகுபவன் தவமுடையவனாவான் 8: 1

கடவுளின் அடிகளை வணங்கி உலகில் நன்மையுண்டாக இந்நூல் படைக்கப்பட்டுள்ளது 1

கண்ணுக்கு அழகு கண்ணோட்டம் 9: 1

கணவன், கணவனுடன் பிறந்தவன், மாமன், மகன், தந்தை இவ்வைவரும் ஒரு பெண்ணின் கற்பிற்கு அழிவு வராமல் காப்பாளர்கள் 54

கணவனைத் தாழ்த்துதல் கூடாது 45

கணிதநூல் முதலிய ஐந்தையும் கற்று வல்லவன் நடுத்தர மாணவனாகக் கருதப்படுவான் 87

கயவருடன் நட்புக் கொள்ளாதவன் மறுபிறவி எடுக்கமாட்டான் 21: 12

கருப்பச் சிதைவைப் பிறர் அறியாமல் மறைத்தல் அறம் 74: 2

கருவூலத்தைக் காப்பதற்குத் தகுதியுடையவரை நியமித்தல் 40: 1

கல்லாரும், கற்றாரைச் சாராதவரும் இகழப்பெறுவர் 56: 3, 4

கல்லாதவர் அறிவில் முதிராதவர் ஆவார் 23: 3

கல்லாதவர் பிசாசுகளோடு ஒப்பர் 20: 1, 2

கல்லாதான் காணும் நுண்பொருள் நகைப்பிற்கிடனாகும் 5: 1

கல்வி கற்றவன் உலகத்தவர்க்கு அமிர்தம் போன்றவனாவான் 4: 1

கல்வி கற்றவன் பொன் பெறுவான் 56: 1

கவரிமானுக்கு அதன் மயிர் எமனாகும் 11: 3

கவிஞன் பொருள் பெறுவான் 56: 1

களவு செய்யாதவன் மறுபிறப்பு எடுக்கமாட்டான் 19: 2

கற்புடைய பெண் அமிர்தம் போன்றவள் 4: 1

கற்புடையவள் பெண்ணாவாள் 33: 1

கற்புடையவள் வனப்பு நன்று 91: 2

கற்பைக் காவாத பரத்தையை அறிஞர் சேரமாட்டார் 42: 3

கற்றவர் தேவரோடு ஒப்பர் 20: 1

கற்றவன் எதிரில் கல்லாதவனுடைய நாக்கு அடங்கும் 10: 3

கன்று இறந்த பசுவிடம் பால் கறவாமை நன்று 47: 3

காது கேளாதாள் அழகுடையோள் என்றல் நகைப்பிற்குரியது 5: 1

காரியாசான் 'சிறுபஞ்சமூலம்' எனும் நூலை இயற்றினான் 98

காலமறிந்து முன்னமே சேர்த்த பொருளால் யோகம் உண்டாகும் 35: 3

காலுக்கு அழகு இரந்து செல்லாமை 9: 1

கீழ்மக்களுக்குக் கொடுக்கும் உணவு நாய்வாயில் கொடுத்த
தசைக்கு நிகராகும் 17: 3, 4

குடியுயரக் கோன் உயர்வான் 46: 3

குருடருக்கு உதவுபவர் மகிழ்ந்து வாழ்வர்

குழவிப் பிணிக்கு மருந்து கொடுத்தல் அறம் 74: 3

குளத்தை வெட்டுபவன் சுவர்க்கம் புகுவான் 66: 1

குற்றம் இல்லாதவன் இவ்வுலகில் இல்லை 31: 3

குற்றம் நீங்கிய பசுவின்கண் உண்ணுதலால் பிறவிப்பயன் நீங்காது 69: 2

குற்றம்வந்த இடத்து மானமுடையவன் உயிர்விடுதல் சிறந்தது 57: 4

குற்றமே இல்லாதவன் இவ்வுலகிலில்லை 31: 3

கொடையால் செல்வ நுகர்ச்சியைப் பெறுவார் 36: 1

கொலை செய்தல் ஒருவனுக்கு நஞ்சு ஆகும் 13: 1

கொலை செய்தவன், அவ்ஊண் உண்டவன், உடன்பட்டவன் அனைவருக்கும் கொலைக்குற்றமுண்டு 70

கொலையும் எழுத்துதனைக் கல்லாதிருப்பதும் பிறரைக் கோபித்தலும் தீது 51: 2

கோழைகளை வீரர்கள் துன்புறுத்த மாட்டார்கள் 41

சான்றோர்க்கழகு, பிறர் பழியாதபடி நடந்துகொள்ளுதல் 51: 3

சிலந்திப்பூச்சிக்கு அதன் முட்டை எமனாகும் 11: 1

சிறந்த அரண்களைப் பெற்றவன் அரசன் 49

சிறையின்கண் இடந்தவர்க்கு உணவளித்தல் சிறப்பு 71: 1

சினத்தால் இன்னாதன செய்யாமலிருப்பின் செய் தவம் சிறக்கும் 32: 2

சினத்தைக் காத்தல் இல்லத்தார்க்குரியது 77: 4

சுற்றத்தாரைப் போற்றுதல் இல்வாழ்க்கைத் துணைவிக்குச் சிறப்பு 43: 1

சூதாடாமல் இருப்பவன் மறுபிறவி எடுக்கமாட்டான் 21: 1

செந்தமிழ்த் தேர்ச்சி இல்லாதவன் கவிபாடுதல் பயனில்லை 12: 4

செல்வரும், நல்லோரும் எளியரை ஏளனம் செய்யாதிருத்தல் நன்மையாகும் 16: 3

செல்வன் நோன்பு நோற்றல் தக்கது 91: 2

சேவகர்க்கு வலிமை எளிது 89: 2

சேவகன் இறந்தபின் உலகோரால் போற்றப்படுவான் 96: 1

சேவைக்கு யானைப்படை வனப்பாகும் 7: 1

ஞானத்தால் விடுபேறு பெறுவர் 36: 1

தக்காருடைய சந்ததி தளராது விருத்தியடையும் 81: 1

தகுதியுடையவர்களைக் காவலுக்கு நியமித்தல் 40

தண்ணீர், அறம் முதலியன செய்தார்க்குப் போகப் பேறுகள் உண்டாகும் 63

தந்தையால் ஏற்படுவது குலமாகும் 33: 4

தம்மைச் சேராதவரோடும், சேர்ந்தாற் போலிருப்பது நன்று 94: 2

தலைமயிர், மார்பு, நகம், செவி, பல் இவற்றின் அழகிலும் சொல்லழகே சிறந்தது 37

தவத்தால் சுவர்க்கத்தைப் பெறுவர் 36: 2

தவத்தில் ஈடுபட்ட பெண்ணை அறிஞர் சேரமாட்டார் 42: 2

தவத்தை அழிக்காமல் இருத்தல் நற்செயலாகும் 47: 1

தளியும் சாலையும் நிலைபெறச் செய்தல் நன்று 68: 1

தன்மனையும் பிறர் உறைய இடம் கொடுத்தல் நன்று 63: 1, 2

தன்முயற்சியால் கிடைத்த பொருள் நன்று 39: 2

தன்னிலை, தன்வினைநிலை, பகைவர் நிலை, உலகியனிலை என்பவற்றை ஆராய்ந்து செய்பவன் அரசனாவான் 58: 1, 2

தன்னை அடைந்தவரை உயர்த்துதல் நற்செயலாகும் 47: 1

தனக்கடங்காத மனைவி உண்டாயின் கவலை உண்டாகும் 15

தனக்கு எதிரல்லாதவனை எதிர் வெல்லுதல் ஒருவனுக்கு நஞ்சுபோல் துன்பம் தரும் 13: 3

தனக்குக் கிடைக்காதவற்றிற்கு வருந்தாதவனை தேவர்கள் போற்றுவர் 82: 1

தனக்குப் பிறரால் வரும் துன்பத்தை மறப்பவன் செய்யும் தவம் சிறக்கும் 32: 1

தன்னை விட்டு நீங்கியவை பொருட்டு வருந்தாதவனைத் தேவர்கள் போற்றுவர் 82: 1

தாம் விரும்புவதைப் பலரறிய விரும்பாமை நன்று 39: 3

தான் உண்பதைப் பிறர்க்குக் கொடுத்து உண்ணுபவன் துன்பமுறான் 79: 3

தான் பிறந்த குடியை நினைத்து ஒழுகுதல் நன்று 68: 1

தான் பிறரால் ‘சாகவென்று’ சொல்லும்படி ஒழுகாது, சான்றோரால் ‘பல்லாண்டும் வாழ்க’ என்று சொல்லும்படி ஒழுகுதல் நன்று 68: 3, 4

தீக்குணம் உடையவர்களோடு சேராதிருத்தல் நன்று 26: 3

தீயசொல்லைப் பேசாதிருத்தல் நன்று 26: 4

தீயபெண்ணின் தொழில் தீயபெண்டிரோடு இணங்குதல் 25: 4

தீய பெண்ணின் தொழில் கள்ளுண்ணுதல் 25: 1

தீயபெண்ணின் தொழில் நாணமில்லாதிருத்தல் 25: 2

தீயபெண்ணின் தொழில் பிறர் கருமத்தை ஆராய்தல் 25: 3

தீயவற்றை மறந்து விடுதல் வேண்டும் 57: 2

தீவழி நடப்போன் தீயவழிகளில் சென்று அதன் பலன்களை உலகுக்குக் காட்டுவோன் 28: 2, 3, 4

துறவறத்தார்க்குரியது உயிரைக் காத்தல், துன்பம் ஆற்றல், பற்று இல்லாமை 77: 1, 2

தெய்வத்தை வழிபடுதல் இல்வாழ்க்கைத் துணைவிக்குச் சிறப்பு 43: 3, 4

நாட்டார்க்கு மகிழ்தல் எளிது 89: 1

நடத்தை இல்லாதவன் நோன்பு பயனில்லை 12: 2

நண்டுக்கு அதன் குஞ்சுகள் எமனாகும் 11: 4

நண்பர்களுக்குத் துன்பம் வந்த காலத்து உதவாவிடில் தீய பலன்களைத் தரும் 14: 1

நல்ல குணமுடையவர்களைச் சேருதல் நன்று 26: 1

நல்ல சேவகன் அரசர்க்கு அமிர்தம் போன்றவன் 4: 4

நல்ல பண்புகளைக் கொண்ட அரசன் நாட்டிற்கு அமிர்தம் போன்றவன் 4: 3

நல்ல பண்புகளைக் கொண்ட நாடு அமிர்தம் போன்றதாகும் 4: 2

நல்லியல்பு இல்லாதவள் இவ்வுலகிலில்லை 31: 3

நல்லவர்கள் அல்லாதாருடைய சந்ததி கெடும் 81: 2

நல்லவர்களால் இகழப்பட்டவற்றை விரும்பாதவனை தேவர்கள் போற்றுவர் 82: 2

நல்லன கேட்டு அவற்றுக்குத் தக ஒழுகுபவர்கள். வீடுபேற்றை அடைவர் 94: 3, 4

நல்லன தெரிந்துண்பவன் நோயறியான் 8: 4

நல்லோர், தோற்கன்று காட்டிய பசுவைக் கறவார்: அப்பாலை உண்ணார் 84: 1

நல்லோர் சுகமுடன் வாழும் உயிர்களைக் கூற்றுதன் விரும்பாது தான் சொல்லார் 84: 3, 4

நல்வாழ்வு விரும்புகின்றவர்கள் தீய சொற்களைக் கூறுதல் கூடாது 97: 2

நற்குணம் இல்லாதார்க்குநூற்கல்வி இல்லாதிருத்தல் நன்மை 61: 2, 3

நன்கு உணர்ந்தவர்கள், ஒருவர் மற்றவர்க்குச் செய்யும் உதவியைத் தடுக்கமாட்டார்கள் 48: 3

நன்கு உணர்ந்தவர்கள் ஓரியிரையும் கொல்லமாட்டார்கள் 48: 4

நன்கு உணர்ந்தவர்கள் சுற்றத்தார் உண்ணும் உணவினை அழிக்க மாட்டார்கள் 48: 2

நன்கு உணர்ந்தவர்கள் பிறருடைய விருப்பத்தை அழிக்க மாட்டார்கள் 48: 1

நன்மையறியாதவர் வயது முதிர்ந்தாலும் அறிவினால் முதிரார் 23: 2

நாடுவிட்டு நாடு சென்றவர்க்கு உணவளித்தால் அரசராகச் செய்யும் 73: 2

நாணமில்லாதவன் அமைதி பயனில்லை 2: 1

நாணமில்லாதவன் நாய்க்கு ஒப்பானவன் 88: 1

நிழலறஞ் செய்தல் நன்று 63: 1

நீரறஞ்செய்தல் நன்று 63: 1

நீருயர நெல் உயரும் 46: 2

நூல்களைக் கற்றவர் அறிஞராவர் 22: 3

நூற்கேள்வியுடையவன் புலவனாவான் 33: 2

நோயுற்றோர் படும் துன்பத்தைப் போக்கியோர் இப்பிறவியில் நோயுற்று வாழ்வர் 76

பகுத்து உண்டானாயின் பேரறம் உண்டாகும் 63: 2

பகுத்துண்டு வாழ்தல் நற்செயலாகும் 47: 3

பகைவர்கள் தளர்ச்சியுடையவர்களாயின் அவர்மேல் செல்லத்தகாது 95: 2

பகையை விலக்கி ஒழுகுபவன் பெரியோன் 8: 3

பகைவரிடம் உறவு கொள்ளுதல் தீய பயன்களைத் தரும் 14: 3

பசித்த குழவிக்கு உணவளிப்பவன் துன்பமுறான் 79: 3

பசித்தவர்க்கு உணவளித்தல் இல்லத்தார்க்குரிய கடன் 77: 3

பஞ்சகாலத்தில் பகுத்துண்பவன் துன்பமுறான் 79: 1

பஞ்சத்தைத் தீர்க்கும் மழையைப் போல் மக்கள்வினைகளைத் தீர்க்கும் இச் சிறுபஞ்சமூலம் 2:

பஞ்சாங்கம் பார்த்துத் திருமணம் செய்தனர் 44

படிப்பிச்சை முதலியன சிறியவை. இவை தரும் பயனும் சிறியனவென்று நினையாது கொடுப்பவர், பின்பு பெரும்பயன் அடைவர் 79: 2

படையுடைந்த காலத்து அஞ்சாது படையை எதிர்ப்பவன் துன்பமுறான் 79: 2

படைவீரர்க்கு அஞ்சாமை அழகாகும் 7: 4

பண்பு இல்லார்க்கு கொடுத்தல் தீது 61: 1,2

பத்தினி இறந்தபின் உலலோரால் போற்றப்படுவாள் 96: 1

பருவமடையாத கன்னியை அறிஞர் சேரமாட்டார் 42: 1

பலகணக்குத் தொழிலுக்குத் தகுதியுடையவரை நியமித்தல் 40: 2

பல நாளாக நோயினால் உண்ணாமல் இருந்தவர்க்கு உணவு அளித்தல் சிறப்பு 71: 2

பலர் உண்ணும் உணவின் காவலுக்கு தகுதியுடையவரை நியமித்தல் 40: 4

பிரமச்சரியம் காப்பவன் ஆசிரியன் ஆவதற்குத் தகுதியானவன் 29: 1

பிறஉயிர்களுக்கு உதவவேண்டும் 57: 3

பிறர் உண்ணுமிடத்தில் செல்லக்கூடாது 95: 1

பிறர்க்காக நெகிழ்ந்து அருள் உண்டாயின் தருமம் உண்டாகும் 35: 1

பிறர்க்கு ஈந்து மகிழ்பவன் துன்புமுறான் 79: 1

பிறர்க்குச் சேவகனாக இருப்பவன் நாய்க்கு ஒப்பாவான் 88: 2

பிறர்க்குப் பகுத்துக் கொடுத்து உண்பவன் அந்தணன் 8: 2, 3

பிறர்க்குப் பயன்படும்படி பொருளை ஈட்டிவைப்பவன் வள்ளல் 34: 1

பிறரிடம் பொய்சொல்லாமை நன்று 39: 1

பிறர் செய்த தீங்கை எண்ணிக் கொண்டிருத்தல் தீமையாகும் 16: 1, 2

பிறர்க்கு வழங்குபவன் வணிகனாவான் 34: 1

பிறரைப் பழியாமலிருத்தல் நற்செயலாகும் 47: 2

பிறர் தமக்குச் செய்த நல்லனவற்றை வெளிப்படுத்த வேண்டும் 57: 1

பிறர் பகை கெட வாழ்தல் நன்மையாகும் 16: 3

பிறர் பிழையைப பொறுத்தல் பெருமையாகும் 16: 1

பிறர் பொருளை உண்ணாதவர் பெரியர் 52: 4

பிறர்மனை நயவாமை வேண்டும் 6: 3

பிறர்மனை நோக்காதவர் அறிஞர் 52: 3

பிறர்மனையாளை அறிஞர் சேரமாட்டார் 42: 4

பிறரது இல்லத்தைக் காடுபோல் கருதுபவனுக்கு எந்தக் குறையுமில்லை 83: 1

பிறரிடத்துச் சென்று பழிச் சொற்களைச் சொல்லாதிருப்பனுக்கு எந்தக் குறையுமில்லை 83: 3

பிறருடைய பொருளை ஓடு போல் கருதி விரும்பாதவனுக்கு எந்த குறையுமில்லை 83: 2

பிறருடைய மனையாளைத் தன்னைப் பெற்ற தாயென்று கருதி விரும்பாதவனுக்கு எந்தக் குறையுமில்லை 83: 2

பிறரோடு நட்புக் கொள்ளாதவன் நாய்க்கு ஒப்பானவன் 88: 1

பிறரை இகழ்தலாற் பழியுண்டாகும் 35: 1

பிறவி ஒழிய வேண்டுமெனில் தவம் செய்ய வேண்டும் 6: 1

பிறன் பொருளைக் கவராதிருத்தல் நன்று 26: 1

பிறிதோர் உயிர்க்குத் துன்பம் செய்யாதிருந்தால் செய்யும் தவம் சிறக்கும் 32: 1

புகழ்பெறவேண்டுமெனில் ஈகை குணம் வேண்டும் 6: 2

புலன்களை அடக்காதவனுக்குப் பிறவிப்பயன் நீங்காது 69: 4

புலவனின் சிந்தனையால் விளைவது பாடலாகும் 33: 3

புலால் உண்டலும் ஒருவனுக்கு நஞ்சு போல் துன்பம் வரும் 13: 2

பூக்காமலே காய்க்கின்ற மரங்களுண்டு 22: 1

பூத்தாலும் காய்க்காத மரங்களுண்டு 23: 1

பூப்பு நீங்கியவளை அறிஞர் சேரமாட்டார் 42: 1

பெண், கணவன் சொற்படி ஒழுகுதல் அவளுக்குரிய குணமாகும் 15: 1

பெண்டிர்க்கு நாணம் எளிது 89: 1

பெண்ணாசையை விட்டுவிடுதல் நன்று 55

பெண்ணின் இடையே நன்மை வனப்பாகும் 7: 1, 2

பெரியார்க்குப் பிறரைப் பேணுதல் எளிது 39: 2

பெரியாரைப் பேணாதவன் நாய்க்கு ஒப்பாவான் 88: 2

பொய்சாட்சி கூறப்போகின்றவனுடைய நாக்கும் அற்று விழும் 10: 2

பொய்பேசாதவன் மறுபிறப்பு எடுக்கமாட்டான் 19: 1

பொருட்திறத்தின்கண் பொத்தின்றிச் செவ்வியனாய்த் தேற்படுவோ இறந்தபின் உலகோரால் போற்றப்படுவான் 96: 2

பொருளில்லாதவர்க்கு, மனமுவந்து பொருளளிப்பவனைத் தேவர்கள் போற்றுவர் 82: 3

பொருளில்லாதவன் வள்ளலென்று கூறும்பொழுது நகைப்பிற்கிடனாகும் 5: 3

'பொருளும், இன்பமும், இருக்கண் வந்த காலத்து அஞ்சாமையும், அருளுடைமையும், அருமையாகிய அறமும்' என்ற ஐந்து குணங்களையுடைவன் 'அரசன்' என்ற தகுதிபடைத்தவன் 59

பொருளுள்ளவனுக்கு இன்பம் பெருகும் 3: 1

போரின் கண் வீரர்கள் பகைவருடன் சேராதிருத்தல் நன்று 15

மக்கட்பிறப்பின் பயனாவது நண்பரைச் செல்வராக்குதல் 18: 1

மக்கட்பிறப்பின் பயனாவது பகைவரைத் தாழ்த்தல் 18: 2

மக்கட்பிறப்பின் பயனாவது மாதரைச் சேர்தல் 18: 3

மக்கட்பிறப்பின் பயனாவது தன் குடியிடமும், சுற்றத்தாரிடமும் அன்புடனிருத்தல் 18: 4

மக்கட்பேறு, அடக்கமுடைமை, அழகுடைமை, கணவனுடைய கருத்துக்கிசைய அவனோடு உரைதல், அவனுண்ணும் உணவை விரும்புதல் - எனும் இவ்வைந்துக் குணங்களும் பொண்ணுக்குரியன. 53

மக்கள் இல்லற வாழ்வில் ஒழுகியவர்க்கும் பயன்படுமாறு வாழ்தல் நன்று 93

மகன் தந்தை சொல்வழி நடத்தல் அவனுக்குரிய குணமாகும் 15: 2

மயிரைச் சடையாக நீட்டுதலாலோ, குறைத்தலாலோ பிறவிப் பயன் நீங்காது 69: 1

மரங்களை நட்டு, வழியை சீரமைப்பவன் சுவர்க்கம் புகுவான் 66: 1

மறைமொழிகள் கூறி ஆய்ந்து நினைத்து இருக்குமிடத்தில் செல்லக்கூடாது 95: 2

மன்று அருகில் வீடு ஈடாதிருத்தல் நற்செயலாகும் 47: 4

மனத்தின்கண் நிலையில்லாத பூணையுடைய முலையார்கண் பரத்தையர் மாட்டுச் சென்று திரிபவன் பருத்தி விற்குமிடத்துச் சென்று நிற்கும் நாய்க்கு ஒப்பாவான் 88: 3, 4

மாட்சிமையுடையவர்களது மனமானது பெருமையடையா திருத்தல் நன்று 39: 1

மாணாக்கன் ஊண் உண்ணாமலிருந்தால் உயர்கதிக்குச் செல்வான் 34: 3

மாணாக்கன் குடுமி, நெய்தல் மௌவாக இருக்கவேண்டும் 30: 1

மாணாக்கனை உயர்கதிக்கு செலுத்துபவனே ஆசானாவான் 34: 2

மிகுதியாக தவஞ்செயல் தீமை 61: 3

மிருகங்களுக்கு அவற்றின் நீண்ட கொம்புகளும் எமனாகும் 11: 2

முதியவர்க்கு உணவளித்தால் சராகச் செய்யும் 73: 1

முதுமைக்கு இளமையில் பொருள் தேடாதவர் அறிவிலார் 20: 2

வஞ்சனையாகிய நோயைச் செய்கிற அயலாரால் கவலை உண்டாகும் 62: 3

வடக்கு நோக்கியிருந்து நோற்பவர்க்கு உணவளித்தல் அரசராகச் செய்யும் 73: 1

வயிற்றுட் கரு அழியாமல் காத்தல் அறம் 74:

வரப்புயர நீருயரும் 46: 1

வரவறிந்து செலவு செய்தல் இல்வாழ்க்கைத் துணைவிக்குச் சிறப்பு 43: 1

வலி அறிந்தவர்க்கு உணவு கொடுத்தால் அரசராகச் செய்யும் 73: 1

வலிமையில்லாதவன் வீரம் பயனில்லை என்பதாம் 12: 3

வழக்குநூல், சொல் முடிவுநூல், திருக்கநூல், சமயநூல், வீட்டு நெறி அறிந்தவன் மக்களுட் சிறந்தவன் 86

வளர்ப்பாரில்லாத குழவியை வளர்த்தல் 72: 2

விரலிறையுடைங்கும் பிச்சை 64: 1

விருந்தினரைக் கண்ணோட்டஞ் செய்தல் நன்மை 52: 2

விழைவையும் கோபத்தையும் விழுபவன் தவம் சிறக்கும் 32: 3, 4

வெள்ளிய தீயைக் கண்ட வெண்ணெய் உருகும் 65: 1

வேலைக்காரி சமைத்த உணவை அறிவுடையார் உண்ணமாட்டார் 38: 1

வேள்வி செய்பவன் அந்தணன் 33: 1

வேளாளனுக்கு அறிவு முதிராமை கேடுதரும் 50: 1

வேளாளனுக்கு, தனக்குக் கீழ் வேலை செய்யும் மகனோடு பகை கொண்டால் கேடு தரும் 50: 3, 4

வேளாளனுக்கு பிறரோடு மாறுபடுதல் கேடு தரும் 50: 2

வேளாளனுக்கு பொருள் மிகுதியால் வரும் செருக்கு கேடு தரும் 50: 1

வேளாளனுக்கு மறதி கேடுதரும் 50: 1

# அருஞ்சொல் அகரவரிசை

| | | | பாட்டு எண் |
|---|---|---|---|
| அடங்க | - | முழுதும் | 31 |
| அடரல் | - | பொருந்துதல் | 97 |
| அட்டான் | - | சமைத்தவன் | 70 |
| அட்டு | - | சமைத்து | 93 |
| அமிர்து | - | மரணத்தினின்றுந் தவிர்ப்பது | 4 |
| அவலை | - | அற்பகாரியம் | 53 |
| அவாய் | - | விரும்பி | 16 |
| அவிர்தல் | - | விளங்குதல் | 14 |
| அழல் | - | நெருப்பு | 91 |
| அளியன் | - | அருளுடையவன் | 5, 89 |
| அறை | - | அறுதல் | 73 |
| ஆட்டும் | - | அசைவிக்கும் | 55 |
| ஆதர் | - | அறிவிலார் | 30 |
| ஆர | - | உண்ண | 34 |
| ஆற்ற | - | மிகுதியாக | 1 |
| ஆற்று | - | செய் | 1 |
| ஆன்ற | - | மிகவும் | 72 |
| இலிங்கி | - | தவமுடையவள் | 42 |
| இல் | - | குடி | 18, 97 |
| இன்னா | - | தீது | 14 |
| ஈடு | - | பெருமை | 84 |
| ஈடு இல் | - | கேடில்லாத | 58 |
| ஈர் | - | இழுக்கின்ற | 24 |
| உகிர் | - | நகம் | 37 |
| உக்க | - | அழிந்த | 81 |
| உதாததை | - | ஈகை | 12 |
| உய்தல் | - | ஒழிதல் | 30 |
| உய்த்து | - | செலுத்தி | 3 |

| | | | பாட்டு எண் |
|---|---|---|---|
| உய்யானை | - | பிழைக்க மாட்டான் | 3 |
| உறு | - | மிகுதி | 2 |
| உறுதியா | - | நன்மையுண்டாகுமாறு | 1 |
| உறை | - | உணவு, மருந்து | 97, 71 |
| ஏக்கழுத்தம் | - | இறுமாப்பு | 5 |
| ஏண் | - | வலிமை, உயர்பு | 12, 89, 88 |
| ஏத்த | - | துதிக்க | 82 |
| ஏத்தி | - | போற்றி | 1 |
| ஏர் | - | அழகு | 45 |
| ஏலாமை | - | ஏற்றுக் கொள்ளாமை | 41 |
| ஒத்த | - | பொருந்திய | 2 |
| ஒருப்படுத்து | - | நீக்கி | 34 |
| ஒல்லா | - | பொருந்தாத | 5 |
| ஒன்னார் | - | பகைவர் | 65 |
| ஓத்து | - | நூல் | 83 |
| ஓய்வு | - | ஒய்தல் | 10 |
| ஓர்த்து | - | அறிந்து | 19 |
| ஓவாது | - | இடையறாமல் | 64 |
| கடிந்தான் | - | ஒழித்தவன் | 29 |
| கடுமை | - | கொலைத்தொழில் | 80 |
| கடைபோக வாழ்தல் | - | முடிவுபோக வாழ்தல் | 78 |
| கட்டு | - | வரம்பு | 70 |
| கண்ட | - | செய்த | 89 |
| கண்டல் | - | தாழை மலர் | 14 |
| கண்ணல் | - | நினைத்தல் | 87 |
| கண்படல் | - | கண்பார்வை செலல் | 78 |
| கதம் | - | கோபம் | 18, 51 |
| கருதும் | - | நினைக்கும் | 54 |
| கருமை | - | மனவிருள் | 21 |

| | | | பாட்டு எண் |
|---|---|---|---|
| கலிக்கண் | - | கலிகாலத்தில் | 47 |
| கழிய | - | மிக்க | 97 |
| கழிமின் | - | விடுங்கள் | 24 |
| கழுமல் | - | பற்றல், கலத்தல் | 21 |
| கழை | - | மூங்கில் | 55 |
| களர் | - | சேற்று நிலம் | 49 |
| களைந்து | - | நீக்கி | 97 |
| கள்ளாமை | - | களவு செய்யாமை | 14 |
| கற்பு | - | கற்றல் | 4 |
| கிளர் | - | விளங்குகின்ற | 9 |
| கிளை | - | உறவு | 13 |
| கிளைமை | - | நேயமுடைமை | 25 |
| கும்பம் | - | குடம் | 97 |
| குழிப்பு | - | தாழ்வு | 97 |
| குன்று | - | மலை | 65 |
| கூழ் | - | மாவினாலாக்கப்படும் உணவு | 34 |
| கூற்றம் | - | எமன் | 11 |
| கெழீஇ | - | தழுவி | 38 |
| கைத்து | - | பொருள், கைப்பொருள் | 52 |
| கொடுங்கரி | - | பொய்ச்சான்று | 10 |
| கொட்கும் | - | சுழன்று திரிகின்ற | 8 |
| கொல்லம் | - | கொடுத்தல் | 48 |
| கொழித்தல் | - | தெள்ளுதல், ஆராய்தல் | 39 |
| கோடல் | - | கொள்ளுதல் | 19 |
| கோடாது | - | நாணாமல் | 70 |
| கோடாமொழி | - | நடுநிலை தவறாத சொல் | 7 |
| கோடு | - | கொம்பு, மரக்கிளை | 11, 19 |
| கோதை | - | மாலை | 54 |
| கோய் | - | கள்முகக்கும் கலம் | 17 |
| கோள்கூட்டம் | - | கோளின் பொருத்தம் | 44 |

| | | | பாட்டு எண் |
|---|---|---|---|
| கோறல் | - | கொல்லுதல் | 45 |
| சலித்தல் | - | வெறுத்தல் | 42 |
| சார்ந்த | - | தழுவிய | 45 |
| சாலாமை | - | நிரம்பாதிருத்தல் | 91 |
| சால்பு | - | அமைதி | 12 |
| சான்றவன் | - | அறிவானி நிறைந்த பெரியோன் | 8 |
| சிக்கர் | - | தலை நோயுடையார் | 79 |
| சிட்டன் | - | மேலானவன் | 79 |
| சிதடர் | - | பித்துடையார் | 74 |
| சிதல் | - | கறையான் | 74 |
| சிதவலிப்பு | - | குறைவு பட்ட பிச்சை | 64 |
| சிந்தை | - | ஆராய்ச்சி | 33 |
| சிலம்பி | - | சிலந்திப்பூச்சி | 19 |
| சினை | - | கருவாகிய முட்டை | 19 |
| சீத்து | - | செதுக்கு | 49 |
| சுணங்கு | - | தேமல் | 48 |
| சுவர்க்கம் | - | மேலுலகம் | 92 |
| செருக்கு | - | களிப்பு | 50 |
| சேரான் | - | நினையான் | 3 |
| சேரி | - | தெருவு | 88 |
| சேவகம் | - | வீரத்தொழில் | 12 |
| நெண்டு | - | நண்டு | 11 |
| தகைமை | - | தன்மை | 45 |
| தக்கம் | - | பற்று | 77 |
| தருக்கம் | - | அளவை நூல் | 89 |
| தவ | - | மிகுதி | 94 |
| தாவா | - | கெடாதிருக்க | 22 |
| தாழ்தல் | - | தாமதித்தல் | 58 |
| தானம் | - | கொடை | 36 |
| திரு | - | திருமகள் | 45 |

| | | | பாட்டு எண் |
|---|---|---|---|
| துந்கர் | - | சயநோயுடையோர் | 76 |
| துணை | - | அளவு | 30 |
| நீடாங்கு | - | காலநீடிப்பு | 13 |
| நுணங்கு | - | நுட்பம் | 30 |
| நெடுக்கல் | - | நீட்டுதல் | 69 |
| நைந்தார் | - | தளர்ந்தார் | 73 |
| நையாமை | - | உளந்தளராமை | 19 |
| பகர்வழி | - | கூறுமிடத்து | 88 |
| பக்கம் படுதல் | - | ஒரு பாற்கோடல் | 77 |
| பஞ்சமூலம் | - | சிறிய ஐந்து வேர்கள், அவை :- கண்டங்கத்திரிவேர், சிறுவழுதுணைவேர், சிறுமல்லி வேர், பெருமல்லிவேர், நெருஞ்சிவேர் | 2 |
| படர் | - | துன்பம் | 67 |
| படர்பு | - | விட்டு நீங்குதல் | 14 |
| படல் | - | உண்டாதல் | 12 |
| படிந்து | - | சேர்ந்து | 18 |
| படுத்தல் | - | உண்டாக்குதல் | 40 |
| பண் | - | இசை | 9 |
| பண்டாரம் | - | கருவூலம் | 40 |
| பதி | - | தலைவன் | 59 |
| பலி | - | சோறு | 79 |
| பற்று | - | சார்பு | 8 |
| பழுது | - | குற்றம் | 1 |
| பாடு | - | பெருமை | 98 |
| பாத்தல் | - | பகுத்துண்டல் | 47 |
| பய் | - | பரவி | 1 |
| பார்ப்பு | - | குஞ்சு | 11 |
| பால் | - | பகுப்பு | 66 |

| | | | பாட்டு எண் |
|---|---|---|---|
| பிறர்இல் | - | பிறர் இல்லாள் | 52 |
| பீடுடைமை | - | பெருமை | 27 |
| புரிந்து | - | விரும்பி | 27 |
| புரை | - | நிகர் | 80 |
| புலத்தல் | - | பகைத்தல் | 38 |
| புலம் | - | அறிவு | 33 |
| புலை | - | கீழ்மைக்குணம் | 38 |
| பூசல் | - | போர் | 95 |
| பூசை | - | பூனை | 95 |
| பூதர் | - | பிசாசுகள் | 20 |
| பேணா | - | விரும்பாத | 45 |
| பேணிலன் | - | காவதவன் | 88 |
| பொச்சாப்பு | - | மறதி | 50 |
| பொத்து | - | குற்றம் | 96 |
| பொன்னுங்கால் | - | அழிய வந்தவிடத்து | 59 |
| போகம் | - | உலகவின்பம், இன்பம் | 3, 35 |
| மடம் | - | மெல்லிய வீரம் | 6 |
| மடன் உடைமை | - | அடக்கமுடைமை | 53 |
| மதம் | - | வலி | 17 |
| மந்திரம் | - | இரகசியச் சொல், சூழ்ச்சியுரை | 85 |
| மல் இவர் | - | மற்போர், விரும்பும் (பாயிரம்) | |
| மனை செய்தல் | - | வீடெடுத்தல் | 47 |
| மா | - | சிறந்த (பாயிரம்) | |
| மாண்ட | - | மாட்சிமைப் பட்ட | 49 |
| மாதுடைமை | - | அழகுடைமை | 53 |
| மாயம் | - | வஞ்சனைச் செயல் | 57 |
| மாரி | - | மழை | 2 |
| மாறுஅல்லானி | - | எதிர் அல்லாதவன் | 13 |
| மிசைதல் | - | உண்ணுதல் | 48 |
| முகிழ் | - | மொட்டு | 30 |
| முயிறு | - | செவ்வெறும்பு | 96 |

| | | பாட்டு எண் |
|---|---|---|
| முரண் - | மாறுபாடு | 50 |
| மூவாதான் - | மூப்பில்லாதவனாகிய கடவுள் | 1 |
| மூர்த்தம் - | முழுத்தம் (மூன்றே முக்கால் நாழிகைகொண்ட வேளை) | 44 |
| மூன்று ஒழித்து - | காமம், வெகுளி, மயக்கம் என்னும் முககுற்றங்களையும் நீக்கி | 1 |
| மெலிவு - | தளிர்ச்சி | 73 |
| மேதை - | அறிவுடையவன் | 22 |
| மேவாதார் - | பொருந்தாதவர் | 94 |
| மை - | குற்றம் | 92 |
| யாத்தல் - | தொடுத்தல், சொல்லுதல் | 85 |
| வஞ்சி - | ஒருவகைக் கொடி | 89 |
| வசை - | பழமொழி | 11 |
| வடக்கிருத்தல் - | வடக்கு நோக்கியிருந்து நோற்றல் | 73 |
| வடு - | குற்றம் | 19 |
| வண்டார் - | வளவிய மாலை | 54 |
| வரைவு - | மணஞ்செய்தல் | 80 |
| வலம் - | வெற்றி | 11 |
| வனப்பு - | அழகு | 7 |
| வன்கண் - | வீரம் | 7 |
| வாரம் - | அன்பு | 58 |
| வார்சான்ற - | நீட்சி மிகுந்த | 49 |
| வெகுளி - | கோபம் | 32 |
| வெருட்டாமை - | அச்சுறுத்தாமை | 74 |
| வெங்கு - | நாணு | 25 |
| வேட்பவன் - | வேள்வி செய்பவன் | 93 |
| வேறல் - | எதிர்த்துவெல்லுதல் | 13 |
| வை - | வைக்கோள் | 10 |
| வெளவல்மின் - | கவராதேயுங்கள் | 29 |

# துணைநூற்பட்டியல்

## மூலநூல்கள்


1. இலக்கியக் களஞ்சியம், கலைஞன் பதிப்பகம், தியாகராய நகர், சென்னை - 600 017, 1985

2. கடுகன் கடிகைமாமூலம், கழக வெளியீடு, சென்னை - 1, மறுபதிப்பு, மார்ச் 1979.

3. சிறுபஞ்சமூலம், மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை, 87, தம்புசெட்டி வீதி, சென்னை. 1923.

4. திருக்குறள், கழக வெளியீடு, சென்னை - 1, 1973.

5. தொல்காப்பியம் - பொருளதிகாரம், கழக வெளியீடு, சென்னை - 1, 1980.

6. நீதிசதகம் (பத்ருஹரி), அப்பாசாமி ஐயரின் தமிழாக்கம், சரசுவதி மகால் வெளியீடு, தஞ்சாவூர், 1967.

7. பதிவெண் கீழ்க்கணக்கு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட், சென்னை - 600 098, இரண்டாம் பதிப்பு, 1981.

8. புறநானூறு, நியூசெஞ்சரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட், சென்னை 600 098, இரண்டாம் பதிப்பு, 1981,


## ஆய்வு நூல்கள்


9. **இந்தியப் பண்பாடும் தமிழரும்**, இராமகிருஷ்ணன், எஸ்., மீனாட்சி புத்தக நிலையம், மதுரை - 1, இரண்டாம் பதிப்பு, ஏப்ரல் 1982.

10. **இந்து தருமரும் வாழ்க்கையும்** (மொ.பெ.), இராதாகிருஷ்ணன், என்., குமார. கோமேதகவேலு, பழனியப்பா பிரதர்ஸ், ஈரோடு - 1972.

11. **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்,** எங்கெல்ஸ், பி., முன்னேற்றப் பதிப்பகம், (மொ.பெ.பெ.இ.) மாஸ்கோ, மூன்றாம் பதிப்பு, (ஆ.இ.).

12. **சங்ககாலம்**, குருசாமி, மா.ரா.போ., மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோவை - 1, 1967.

13. **பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும்,** சிதம்பரனார் - சாமி, இலக்கிய நிலையம், சென்னை - 600 024, மூன்றாம் பதிப்பு, ஜூலை 1974.

14. **பதினெண்கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும்,** சிதம்பரனார் - சாமி, இலக்கிய நிலையம், சென்னை - 600 024, மூன்றாம் பதிப்பு, ஜூலை 1974.

15. **தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும்,** சிவத்தம்பி, கா., தமிழ் புத்தகாலயம், திருவல்லிக்கேணி, சென்னை - 600 005, 1980.

16. **பதினெண்கீழ்க்கணக்குச் சொற்பொழிவுகள்,** சுப்பிரமணிய பிள்ளை, இ.மு., கழக வெளியீடு, சென்னை - 1, மறுபதிப்பு, பிப்ரவரி 1966.

17. **சமணம்,** ஞானமூர்த்தி, தா. எ., சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு, சென்னை - 5, 1980.

18. **உறவுமுறைகள்,** தாயம்மாள் அறவாணன், பாரி நிலையம், சென்னை - 5, 1987.

19. **டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் பேருரைகள்,** திரவியம், க., பழனியப்பா பிரதர்ஸ் வெளியீடு, ஈரோடு, 1967.

20. **திருக்குறள் நீதி இலக்கியம்,** திருநாவுக்கரசு, க.த., சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை - 5, 1977.

21. **சமணத் தமிழ் இலக்கிய வரலாறு,** திருநாவுக்கரசு, க.த., சேகர் பதிப்பகம், சென்னை, 1978.

22. **தமிழ் இலக்கிய வரலாறு,** பாலசுப்ரமணியம், சி., நறுமலர்ப் பதிப்பகம், சென்னை - 29, பதினெட்டாம் பதிப்பு, 1985.

23. **தமிழ் இலக்கிய வரலாறு,** மீனாட்சி சுந்தரம், தெ.பொ.மீ., சர்வோதயப் பண்ணை, மதுரை, 1977.

24. **தமிழ் இலக்கிய வரலாறு,** வரதராசனார், மு., சாகித்திய அகாடமி வெளியீடு, டெல்லி, 1986.

25. **கரித்துண்டு,** வரதராசனார், மு., பாரி நிலையம், சென்னை, 1953.

26. **தமிழர் சால்பு,** வித்தியானந்தன், சு., பாரி புத்தகப் பண்ணை, சென்னை - 600 001, 1985.

27. **சமணமும் தமிழும்,** வேங்கடசாமி, மயிலை சீனி., கழக வெளியீடு, சென்னை - 600 001, 1980.

28. **தமிழ் இலக்கியத்தில காலமும் கருத்தும்**, வேலுப்பிள்ளை, ஆ., ல. ராமகிருஷ்ணன் (ப.ஆ.), சென்னை - 600 001, பதிப்பு 1969

29. **இலக்கிய ஒப்பாய்வுக் களங்கள்**, ஜான் சாமுவேல், ஜி., ஐந்திணைப் பதிப்பகம், சென்னை - 600 005, இரண்டாம் பதிப்பு, 1908

## வெளிவராத முனைவர் பட்ட ஆய்வேடுகள்

1. **சித்தர் பாடல்கள் ஓர் ஆய்வு**, இளமதி, க., தமிழ்த்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1986.

2. **பதினெண் கீழ்க்கணக்கு – ஓர் ஆய்வு**, வேங்கடபதி, சி., தமிழ்த் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், டிசம்பர் - 1984.

## கலைக் களஞ்சியம்

1. தொகுதி I, தமிழ் வளர்ச்சிக்கழக வெளியீடு, சென்னை, 1954.

2. தொகுதி IV, தமிழ் வளர்ச்சிக்கழக வெளியீடு, சென்னை, 1959.

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
# சென்னை - 600 113
## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 200.00 |
| தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும் | 200.00 |
| தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 325.00 |
| தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும் | 300.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல் | 100.00 |
| கவிதையியல் | 50.00 |
| பண்பாட்டு நோக்கில் திருமுறைகள் | 30.00 |
| கதைப் பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள் | 95.00 |
| Bibliography on Translations | 175.00 |
| சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீ.யும் மேலை அறிஞரும் | 60.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 200.00 |
| வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன் | 60.00 |
| நாசுதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி | 35.00 |
| தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி | 45.00 |
| மொழி பெயர்ப்பியல் | 45.00 |
| தமிழில் தத்துவ நூல்கள் | 40.00 |
| சி.வை. தாமோதரம்பிள்ளை | 40.00 |
| சொல்லிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் - முதல் பகுதி | 70.00 |
| இசுலாமியச் சிற்றிலக்கியங்கள் | 40.00 |
| பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும் | 30.00 |
| மகளிர் முன்னேற்றத்தில் "அவள் விகடன்" இதழின் பங்களிப்பு | 35.00 |
| திருக்குறள் உரைச் சிந்தனைகள் | 50.00 |
| தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் | 120.00 |
| மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள் | 35.00 |
| A Course in Modern Standard Tamil | 65.00 |
| இசை மருத்துவம் | 45.00 |
| கம்பன் களஞ்சியம் | 280.00 |
| மொழியியல் நோக்கில் தொல்காப்பிய சங்க இலக்கிய ஆய்வுகள் | 40.00 |
| தமிழர் பண்பாட்டுச் சொற்கோவை | 250.00 |
| தமிழிலக்கியக் குறியீடுகள் அகராதி | 225.00 |
| அரங்கேற்று காதை ஆராய்ச்சி | 140.00 |
| பழந்தமிழ் அமைப்பியல் மற்றும் குறியியல் ஆய்வுகள் | 45.00 |
| இந்தியச் சூழலில்மொழிஇழப்பு ஒரு சமுதாய மொழியியல் கண்ணோட்டம் | 60.00 |
| பழந்தமிழ் அறிவியல் | 45.00 |
| நீறணி பவளக்குன்றம் | 35.00 |
| குலோத்துங்கன் பார்வையில் சமுதாயம் | 70.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள் தொகுதி-1 | 100.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள் தொகுதி-2 | 100.00 |
| நீறணி பவளக் குன்றம் (ஒன்பதாம் திருமுறை ஆய்வுநூல்) | 35.00 |
| உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார் | 35.00 |
| குலோத்துங்கன் கவிதைகள் ஒரு கோபுர தீபம் | 60.00 |
| தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள் | 30.00 |
| நாமக்கல் கவிஞரின் தமிழ்ப்பணி | 30.00 |
| ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம் | 30.00 |

**638 சிறுபஞ்சமூலம்-ஒருசமூகவியல் பார்வை** **30.00**